463

## UNIVERSITY OF MADRAS

# B.A. & B.Sc. DEGREE EXAMINATIONS, 1966

1962

## PART II—TAMIL

# SELECTIONS IN POETRY

(for the examination in Part II at the end of the Second Year 1965)

DOCTRINA VIM PROMOVET INSITAM

MADRAS RECORD OFFICE MADRAS

1963

O-,1x
N63
112028

Price Rs. 1-50

112028

*Copies may be had from :-*

**The Registrar, University of Madras,**
**University Buildings,**
**Chepauk, Madras-5.**

Printed at Rathnam Press, Madras-1,

## பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சிறுபாணாற்றுப்படை | ... | 1 |
| | குறிப்புரை | ... | 73 |
| 2. | புறநானூறு | ... | 9 |
| | குறிப்புரை | ... | 87 |
| 3. | நற்றிணை | ... | 16 |
| | குறிப்புரை | ... | 93 |
| 4. | திருக்குறள் | .... | 18 |
| | குறிப்புரை | .. | 96 |
| 5. | சிலப்பதிகாரம் | ... | 22 |
| | குறிப்புரை | ... | 104 |
| 6. | சீவக சிந்தாமணி | ... | 30 |
| | குறிப்புரை | ... | 111 |
| 7. | பெரிய புராணம் | ... | 40 |
| | குறிப்புரை | ... | 117 |
| 8. | கம்ப ராமாயணம் | ... | 51 |
| | குறிப்புரை | ... | 120 |
| 9. | இரட்சணிய யாத்திரிகம் | ... | 61 |
| | குறிப்புரை | ... | 125 |
| 10. | திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை | ... | 63 |
| | குறிப்புரை | ... | 127 |
| 11. | மாரிவாயில் | ... | 65 |
| | குறிப்புரை | ... | 129 |
| 12 | திருமால் அருள்வேட்டல் | ... | 71 |
| | குறிப்புரை | ... | 131 |

# 1. சிறுபாணாற்றுப்படை

...செல்புன லுழந்த சேய்வரற் கான்யாற்றுக்
கொல்கரை நறும்பொழிற் குயில்குடைந் துதிர்த்த
புதுப்பூஞ் செம்மல் சூடிப் புடைநெறித்துக்
கதுப்புவிரித் தன்ன காழக நுணங்கற
லயிலுருப் பனைய வாகி யைதுநடந்து
வெளிலுருப் புற்ற வெம்பரல் கிழிப்ப
வேனி னின்ற வெம்பத வழிநாட்
காலைஞா யிற்றுக் கதிர்கடா வுறுப்பப்
பாலை நின்ற பாலை நெடுவழிச்
சுரன்முதன் மராஅத்த வரிநிழ லசைஇ
யைதுவீ ழிகுபெய லழகுகொண் டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிவயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயின்மயிற் குளிக்குஞ் சாயற் சாஅ
யுயங்குநாய் நாவி னல்லெழி லசைஇ
வயங்கிழை யுலறிய வடியி னடிதொடர்ந்
தீர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை யொழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த வோதி யோதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கின்...
குல்லையம் புறவிற் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியன்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்
நடைமெலிந் தசைஇய நன்மென் சீறடி
கல்லா விளையர் மெல்லத் தைவரப்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பி
னின்குரற் சீறியா ழிடவயிற் றழீஇ

நைவளம் பழுநிய நயந்தெரி பாலை
கைவல் பாண்மகன் கடனறிந் தியக்க
வியங்கா வையத்து வள்ளியோர் நசைஇத்
துனிகூ ரெவ்வமொடு துயராற்றுப் படுப்ப
முனிவிகந் திருந்த முதுவா யிரவல

கொழுமீன் குறைய வொதுங்கி வள்ளிதழ்க்
கழுநீர் மேய்ந்த கயவா யெருமை
பைங்கறி நிவந்த பலவி னீழன்
மஞ்சண் மெல்லிலை மயிர்ப்புறந் தைவர
விளையா விளங்க ணூற மெல்குபு பெயராக்

குளவிப் பள்ளிப் பாயல் கொள்ளுங்
குடபுலங் காவலர் மருமா னொன்னார்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்
வருபுனல் வாயில் வஞ்சியும் வறிதே யதாஅன்று

நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
நோன்பகட் டுமண ரொழுகையொடு வந்த

மகாஅ ரன்ன மந்தி மடவோர்
நகாஅ ரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கு நல்கூர் நுசுப்பி
னுளரிய லைம்பா லுமட்டிய ரீன்ற

கிளர்பூட் புதல்வரொடு கிலுகிலி யாடுந்
தத்துநீர் வரைப்பிற் கொற்கைக் கோமான்
றென்புலங் காவலர் மருமா னொன்னார்
மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்
கண்ணார் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்

றமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே யதாஅன்று
நறுநீர்ப் பொய்கை யடைகரை நிவந்த
துறுநீர்க் கடம்பின் துணையார் கோதை
யோவத் தன்ன வுண்டுறை மருங்கிற்

கோவத் தன்ன கொங்குசேர் புறைத்தலின்
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை
யாசி லங்கை யரக்குத்தோய்ந் தன்ன
சேயிதழ் பொதிந்த செம்பொற் கொட்டை

யேம வின்றுணை தழீஇ யிறகுளர்ந்து
காமரு தும்பி காமரஞ் செப்புந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைக்
குணபுலங் காவலர் மருமா னொன்னா
ரோங்கெயிற் கதவ முருமுச்சுவல் சொறியுந்

தூங்கெயி லெறிந்த தொடிவிளங்கு தடக்கை
நாடா நல்லிசை நற்றேர்ச் செம்பிய
னோடாப் பூட்கை யுறந்தையும் வறிதே யதாஅன்று
வானம் வாய்த்த வளமலைக் கவாஅற்
கான மஞ்ஞைக்குக் க்லிங்க நல்கிய

வருந்திற லணங்கி னாவியர் பெருமகன்
பெருங்க னாடன் பேகனுஞ் சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்குவெள் ளருவி வீழுஞ் சாரற்

பறம்பிற் கோமான் பாரியுங் கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
வீர நன்மொழி யிரவலர்க் கீந்த
வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியு நிழறிகழ்

நீல நாக நல்கிய கலிங்க
மாலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த
சாவந் தாங்கிய சாந்துபுலர் திணிதோ
ளார்வ நன்மொழி யாயு மால்வரைக்
கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி

யமிழ்துவிளை தீங்கனி யௌவைக் கீந்த
வுரவுச்சினங் கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக்கடற் றானை யதிகனுங் கரவாது
நட்டோ ருவப்ப நடைப்பரி கார
முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத்

துளிமழை பொழியும் வளிதுஞ்சு நெடுங்கோட்டு
நளிமலை நாட னள்ளியு நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரைக் காரியொடு மலைந்த

வோரிக் குதிரை யோரியு மெனவாங்
கெழுசமங் கடந்த வெழுவுறழ் திணிதோ
ளெழுவர் பூண்ட வீகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
வொருதான் றாங்கிய வுரனுடை நோன்றா

ணறுவீ நாகமு மகிலு மாரமுந்
துறையாடு மகளிர்க்குத் தோட்புணை யாகிய
பொருபுன றருஉம் போக்கரு மரபிற்
றொன்மா விலங்கைக் கருவொடு பெயரிய
நன்மா விலங்கை மன்ன ருள்ளு

மறுவின்றி விளங்கிய வடுவில் வாய்வா
ளுறுபுலித் துப்பி னோவியர் பெருமகன்
களிற்றுத்தழும் பிருந்த கழறயங்கு திருந்தடிப்
பிடிக்கணஞ் சிதறும் பெயன்மழைத் தடக்கைப்
பல்லியக் கோடியர் புரவலன் பேரிசை

நல்லியக் கோடனை நயந்த கொள்கையொடு
தாங்கரு மரபிற் றன்னுந் தந்தை
வான்பொரு நெடுவரை வளனும் பாடி
முன்னாட் சென்றன மாக வின்னா
டிறவாக் கண்ண சாய்செவிக் குருளை

கறவாப் பான்முலை கவர்த னோனாது
புனிற்றுநாய் குரைக்கும் புல்லெ னட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சித லரித்த
பூழி பூத்த புழற்கா ளாம்பி
யொல்குபசி யுழந்த வொடுங்குநுண் மருங்குல்

வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை யுப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பே ரொக்கலொ டொருங்குடன் மிசையு
மழிபசி வருத்தம் வீடப் பொழிகவுட்

டறுகட் பூட்கைத் தயங்குமணி மருங்கிற்
சிறுகண் யானையொடு பெருந்தே ரெய்தி
யாமவ ணின்றும் வருது நீயிரு
மிவணயந் திருந்த விரும்பே ரொக்கற்
செம்ம லுள்ளமொடு செல்குவி ராயி

னலைநீர்த் தாழை யன்னம் பூப்பவுந்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவுங்
கடுஞ்சூன் முண்டகங் கதிர்மணி கழாஅலவு
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவுங்
கானல் வெண்மணல் கடலுலாய் நிமிர்தரப்

பாடல் சான்ற நெய்த னெடுவழி
மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய
பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரி
னோங்குநிலை யொட்டகந் துயின்மடிந் தன்ன
வீங்குதிரை கொணர்ந்த விரைமர விறகிற்

கரும்புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோண்
மதியேக் கறூஉ மாசறு திருமுகத்து
நுதிவே லேக்கி னுளைமக ளரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்

றளையவிழ் தெரியற் றகையோற் பாடி
யறற்குழற் பாணி தூங்கி யவரொடு
வறற்குழற் சூட்டின் வயின்வயிற் பெறுகுவிர்
பைங்கனை யவரை பவழங் கோப்பவுங்
கருநனைக் காயாக் கணமயி லவிழவுங்

கொழுங்கொடி முசுண்டை கொட்டங் கொள்ளவுஞ்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவுங்
கொல்லை நெடுவழிக் கோப மூரவு
முல்லை சான்ற முல்லையம் புறவின்
விடர்கா லருவி வியன்மலை மூழ்கிச்

சுடர்கான் மாறிய செவ்வி நோக்கித்
திறல்வே னுதியிற் பூத்த கேணி
விறல்வேல் வென்றி வேலூ ரெய்தி
னுறுவெயிற் குலைஇய வுருப்பவிர் குரம்பை
யெயிற்றிய ரட்ட வின்புளி வெஞ்சோறு

தேமா மேனிச் சில்வளை யாயமொ
டாமான் சூட்டி னமைவரப் பெறுகுவிர்
நறும்பூங் கோதை தொடுத்த நாட்சினைக்
குறுங்காற் காஞ்சிக் கொம்ப ரேறி
நிலையருங் குட்ட நோக்கி நெடிதிருந்து
புலவுக்கய லெடுத்த பொன்வாய் மணிச்சிரல்
வள்ளுகிர் கிழித்த வடுவாழ் பாசடை
முள்ளரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவன்
மதிசே ரரவின் மானத் தோன்று
மருதஞ் சான்ற மருதத் தண்பணை
யந்தண ரருகா வருங்கடி வியனக
ரந்தண் கிடங்கினவ ளூழு ரெய்தின்
வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தி
னுரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
பிடிக்கை யன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
விருங்கா முலக்கை யிரும்புமுகந் தேய்த்த
வவைப்புமா ணரிசி யமலைவெண் சோறு
கவைத்தா ளலவன் கலவையொடு பெறுகுவி
ரெரிமறிந் தன்ன நாவி னிலங்கெயிற்றுக்
கருமறிக் காதிற் கவையடிப் பேய்மக
ணிணனுண்டு சிரித்த தோற்றம் போலப்
பிணனுகைத்துச் சிவந்த பேருகிர்ப் பணைத்தா
ளண்ணல் யானை யருவிதுக ளவிப்ப
நீறடங்கு தெருவினவன் சாறயர் மூதூர்
சேய்த்து மன்று சிறிதுநணி யதுவே
பொருநர்க் காயினும் புலவர்க் காயினு
மருமறை நாவி னந்தணர்க் காயினுங்
கடவுண் மால்வரை கண்விடுத் தன்ன
வடையா வாயிலவ னருங்கடை குறுகிச்
செய்ந்நன்றி யறிதலுஞ் சிற்றின மின்மையு
மின்முக முடைமையு மினிய ளுதலுஞ்
செறிந்துவிளங்கு சிறப்பி னறிந்தோ ரேத்த
வஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையு

மாணணி புகுதலு மழிபடை தாங்கலும்
வாண்மீக் கூற்றத்து வயவ ரேத்தக்
கருதியது முடித்தலுங் காமுறப் படுதலு
மொருவழிப் படாமையு மோடிய துணர்தலு
மரியே ருண்க ணரிவைய ரேத்த

வறிவுமடம் படுதலு மறிவுநன் குடைமையும்
வரிசை யறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசில ரேத்தப்
பன்மீ னடுவட் பான்மதி போல
வின்னகை யாயமோ டிருந்தோற் குறுகிப்

பைங்க ணூரகம் பாம்புபிடித் தன்ன
வங்கோட்டுச் செறிந்த வவிழ்ந்துவீங்கு திவவின்
மணிநிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை யகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்

புகழ்வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்
தமிழ்துபொதிந் திலிற்று மடங்குபுரி நரம்பிற்
பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்
கூடுகொ ளின்னியங் குரல்குர லாக
நூனெறி மரபிற் பண்ணி யானுது

முதுவோர்க்கு முகிழ்த்த கையினை யெனவு
மிளையோர்க்கு மலர்ந்த மார்பினை யெனவு
மேரோர்க்கு நிழன்ற கோலினை யெனவுந்
தேரோர்க் கழன்ற வேலினை யெனவு
நீசில மொழியா வளவை மாசில்

காம்புசொலித் தன்ன வறுவை யுடீஇப்
பாம்புவெகுண் டன்ன தேற லல்கிக்
காவெரி யூ' 'டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்

பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
வாணிற விசும்பிற் கோண்மீன் சூழ்ந்த
விளங்கதிர் ஞாயி றெள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி
யானு விருப்பிற் ருனின் றூட்டித்

திறல்சால் வென்றியொடு தெவ்வுப்புல மகற்றி
விறல்வேன் மன்னர் மன்னெயின் முருக்கி
நயவர் பாணர் புன்கண் டீர்த்தபின்
வயவர் தந்த வான்கேழ் நிதியமொடு
பருவ வானத்துப் பாற்கதிர் பரப்பி
யுருவ வான்மதி யூர்கொண் டாங்குக்
கூருளி பொருத வடுவாழ் நோன்குறட்
டாரஞ் சூழ்ந்த வயில்வாய் நேமியொடு
சிதர்நனை முருக்கின் சேணோங்கு நெடுஞ்சினைத்
ததர்பிணி யவிழ்ந்த தோற்றம் போல
வுள்ளரக் கெறிந்த வுருக்குறு போர்வைக்
கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
யூர்ந்துபெயர் பெற்ற வெழினடைப் பாகரொடு
மாசெல வொழிக்கு மதனுடை நோன்றுள்
வாண்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசின் மென்றோட்
டுகிலணி யல்குற் றுளங்கியன் மகளி
ரகிலுண விரித்த வம்மென் கூந்தலின்
மணிமயிற் கலாப மஞ்சிடைப் பரப்பித்
துணிமழை தவழுந் துயல்கழை நெடுங்கோட்
டெறிந்துரு மிறந்த வேற்றரு சென்னிக்
குறிஞ்சிக் கோமான் கொய்தளிர்க் கண்ணிச்
செல்லிசை நிலைஇய பண்பி
னல்லியக் கோடனை நயந்தனிர் செலினே.

# 2. புறநானூறு

## பெருஞ்சித்திரனுர் பாடல்கள்

1. திணை : பாடாண்டிணை. துறை-வாழ்த்தியல்; பரிசில் கடாநிலையுமாம்.
குமணனைப் பெருஞ்சித்திரனுர் பாடியது.

முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும்
அரசுடன் பொருத வண்ண னெடுவரைக்
கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
பறம்பிற் கோமான் பாரியும் பிறங்குமிசைக்

கொல்லி யாண்ட வல்வி லோரியும்
காரி யூர்ந்து பேரமர்க் கடந்த
மாரி யீகை மறப்போர் மலையனும்
ஊரா தேந்திய குதிரைக் கூர்வேற்
கூவிளங் கண்ணிக் கொடும்பூ ணெழினியும்

ஈர்ந்தண் சிலம்பி னிருடுங்கு நளிமுழை
அருந்திறற் கடவுள் காக்கு முயர்சிமைப்
பெருங்க ணுடன் பேகனுந் திருந்துமொழி
மோசிய பாடிய வாயு மார்வமுற்
றுள்ளி வருந ருலைவுநனி தீரத்

தள்ளா தீயுந் தகைசால் வண்மைக்
கொள்ளா ரோட்டிய நள்ளியு மெனவாங்
கெழுவர் மாய்ந்த பின்றை யழிவரப்
பாடி வருநரும் பிறருங் கூடி
இரந்தோ ரற்றந் தீர்க்கென விரைந்திவண்

உள்ளி வந்தனென் யானே விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
ஆசினிக் கவினிய பலவி னூர்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடுஉப் பயிரும்

அதிரா யாணர் முதிரத்துக் கிழவ
இவண்விளங்கு சிறப்பி னியறேர்க் குமண
இசைமேந் தோன்றிய வண்மையொடு
பகைமேம் படுகநீ யேந்திய வேலே.

2. திணை : பாடாண்திணை. துறை - பரிசில்கடாநிலை.

அவனை அவர் பாடியது.

வாழு நாளோ டியாண்டுபல வுண்மையிற்
றீர்தல்செல் லாதென் னுயிரெனப் பலபுலந்து
கோல்கா லாகக் குறும்பல வொதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள் கண்டுயின்று

முன்றிற் போகா முதிர்வினள் யாயும்
பசந்த மேனியொடு படரட வருந்தி
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்
பிசைந்துதின வாடிய முலையள் பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் ணகைத்த

முற்றா விளந்தளிர் கொய்துகொண் டுப்பின்று
நீருலை யாக வேற்றி மோரின்
றவிழ்ப்பத மறந்து பாசடகு மிசைந்து
மாசொடு குறைந்த வுடுக்கைய ளறம்பழியாத்
துவ்வா ளாகிய வென்வெய் யோளும்

என்றாங், கிருவர் நெஞ்சமு முவப்பக் கானவர்
கரிபுன மயக்கிய வகன்கட் கொல்லை
ஐவனம் வித்தி மையுறக் கவினி
ஈனல் செல்லா வேனற் கிழுமெனக்
கருவி வானந் தலைஇ யாங்கும்

ஈத்த நின்புக ழேத்தித் தொக்கவென்
பசிதினத் திரங்கிய வொக்கலு முவப்ப
உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலெ னுவந்துநீ
இன்புற விடுதி யாயிற் சிறிது

குன்றியுங் கொள்வல் கூர்வேற் குமண
அதற்பட வருளல் வேண்டுவல் விறற்புகழ்
வசையில் விழுத்திணைப் பிறந்த
இசைமேந் தோன்றனிற் பாடிய யானே.

---

3. திணையும் துறையும் அவை. அவனை அவர் பாடியது.

உருகெழு ஞாயிற் றொண்கதிர் மிசைந்த
முளிபுற் கானங் குழைப்பக் கல்லென
அதிர்குர லேறொடு துளிசொரிந் தாங்குப்
பசிதினத் திரங்கிய கசிவுடை யாக்கை

அவிழ்புகு வறியா தாகலின் வாடிய
நெறிகொள் வரிக்குடர் குளிப்பத் தண்ணெனக்
குய்கொள் கொழுந்துவை நெய்யுடை யடிசில்
மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொ னன்கலஞ் சுற்ற விரீஇக்

கேடின் றாக பாடுநர் கடும்பென
அரிதுபெறு பொலங்கல மெளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே
செல்குவை யாயி னல்குவன் பெரிதெனப்

பல்புகழ் நுவலுநர் கூற வல்விரைந்
துள்ளந் துரப்ப வந்தனெ னெள்ளுற்
றில்லுணத் துறத்தலி னின்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்

கூழுஞ் சோறுங் கடைஇ யூழின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்

வினவ லானா ளாகி நனவின்
அல்ல லுழப்போண் மல்லல் சிறப்பச்
செல்லாச் செல்வ மிகுத்தனை வல்லே
விடுதல் வேண்டுவ லத்தை படுதிரை
நீர்சூழ் நிலவரை யுயரநின்

சீர்கெழு விழுப்புக ழேத்துகம் பலவே.

---

4. திணை - அது. துறை - பரிசிற்றுறை.

அவனை அவர் பாடிப் பகடு பெற்றது.

நீண்டொலி யழுவங் குறைபட முகந்துகொண்
டீண்டுசெலற் கொண்மூ வேண்டுவயிற் குழீஇப்
பெருமலை யன்ன தோன்றல சூன்முதிர்
புருமுர றுகருவியொடு பெயல்கட னிறுத்து

வளமழை மாறிய வென்றூழ்க் காலை
மன்பதை யெல்லாஞ் சென்றுணக் கங்கைக்
கரைபொரு மலிநீர் நிறைந்து தோன்றியாங்
கெமக்கும் பிறர்க்குஞ் செம்மலை யாகலின்
அன்பி லாடவர் கொன்ருறு கவரச்

சென்றுதலை வருந வல்ல வன்பின்று
வன்கலை தெவிட்டு மருஞ்சுர மிறந்தோர்க்
கிற்றை நாளொடும் யாண்டுதலைப் பெயரவெனக்
கண்பொறி போகிய கசிவொ டுரனழிந்
தருந்துய ருழக்குமென் பெருந்துன் புறுவிநின்

தாள்படு செல்வங் காண்டொறு மருளப்
பனைமரு டடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப் பேந்திய வரைமரு ணேன்பக
டொளிதிக ழோடை பொலிய மருங்கிற்
படுமணி யிரட்ட வேறிச் செம்மாந்து

செலனசைஇ யுற்றனென் விறன்மிகு குருசில்
இன்மை துரப்ப விசைதர வந்துநின்
வண்மையிற் றொடுத்தவென் னயந்தனை கேண்மதி
வல்லினும் வல்லே னுயினும் வல்லே
என்னளந் தறிந்தனை நோக்காது சிறந்த

நின்னளந் தறிமதி பெரும வென்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன் சாந்தருந்திப்
பல்பொறிக் கொண்ட வேந்தெழி லகலம்
மாணிழை மகளிர் புல்லுதொறும் புகல
நாண்முர சிரங்கு மிடனுடை வரைப்பினின்

தாணிழல் வாழ்நர் நன்கல மிகுப்ப
வாளம ருழந்தநின் ருனையும்
சீர்மிகு செல்வமு மேத்துகம் பலவே.

---

5\. திணை - அது. துறை - பரிசில் விடை.

அவர் வெளிமானுக்குச் சொல்லியது.

இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்
கீவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்

கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே.

---

6. திணை - அது. துறை - பரிசில்.

அவர் பரிசில் கொணர்ந்து மனையோட்குச் சொல்லியது,

நின்னயந் துறைநர்க்கு நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமண னல்கிய வளனே.

---

7. திணை - அது. துறை - பரிசிற்றுறை.

அவர், இளவெளிமான் சிறிது கொடுப்பக் கொள்ளாது பாடியது.

எழுவினி நெஞ்சஞ் செல்கம் யாரோ
பருகு வன்ன வேட்கை யில்வழி
அருகிற் கண்டு மறியார் போல
அகனக வாரா முகனழி பரிசில்
தாளி லாளர் வேளா ரல்லர்
வருகென வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே யுலகம் பேணுநர் பலரே
மீளி முன்பி னாளி போல
உள்ள முள்ளவிந் தடங்காது வெள்ளென
நோவா தோன்வயிற் றிரங்கி
வாயா வன்கனிக் குலமரு வோரே.

---

8. திணையும் துறையும் அவை.

அவர், அதியமான் நெடுமானஞ்சி காணது பரிசில் கொடுப்பக் கொள்ளாது சொல்லியது.

குன்று மலையும் பலபின் னொழிய
வந்தனென் பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற வென்னயந் தருளி யீதுகொண்
டீங்கனஞ் செல்க தானென வென்னை
யாங்கறிந் தனனோ தாங்கருங் காவலன்
காணா தீத்த விப்பொருட் கியானோர்
வாணிகப் பரிசில னல்லேன் பேணித்
தினையனைத் தாயினு மினிதவர்
துணையள வறிந்து நல்கினர் விடினே.

---

9. திணை - பொதுவியல். துறை - கையறுநிலை.

அவர், இளவெளிமான் சிறிது கொடுப்பக் கொள்ளாது பாடியது.

நீடுவாழ் கென்றியா னெடுங்கடை குறுகிப்
பாடி நின்ற பசிநாட் கண்ணே
கோடைக் காலத்துக் கொழுநிழ லாகிப்
பொய்த்த லறியா வுரவோன் செவிமுதல்
வித்திய பனுவல் விளைந்தன்று நன்றென
நச்சி யிருந்த நசைபழு தாக
அட்ட குழிசி யழற்பயந் தாஅங்
களியர் தாமே யார்க வென்னா
அறனில் கூற்றந் திறனின்று துணிய
ஊழி னுருப்ப வெருக்கிய மகளிர்
வாழைப் பூவின் வளைமுறி சிதற
முதுவா யொக்கற் பரிசில ரிரங்கக்
கள்ளி போகிய களரியம் பறந்தலை
வெள்வேல் விடலை சென்றுமாய்ந் தனனே
ஆங்கது நோயின் றாக வோங்குவரைப்
புலிபார்த் தொற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த் தொற்றா தாகு மலிதிரைக்
கடன்மண்டு புனலி னிழுமெனச் சென்று
நனியுடைப் பரிசிற் றருகம்
எழுமதி நெஞ்சே துணிபுமுன் துறுத்தே.

---

10. திணையும் துறையும் அவை. அவர் வெளிமான் துஞ்சியபின் பாடியது.

கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா
வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடிப்
பேஎ யாயமொடு பெட்டாங்கு வழங்கும்

காடுமுன் னினனே கட்கா முறுநன்
தொடிகழி மகளிரிற் றெல்கவின் வாடிப்
பாடுநர் கடும்பும் பையென் றனவே
தோடுகொண் முரசுங் கிழிந்தன கண்ணே
ஆளில், வரைபோல் யானையு மருப்பிழந் தனவே

வெந்திறற் கூற்றம் பெரும்பே துறுப்ப
எந்தை யாகுத லதற்பட லறியேன்
அந்தோ வளியேன் வந்தனென் மன்ற
என்னு குவர்கொலெற் றுன்னி யோரே
மாரி யிரவின் மரங்கவிழ் பொழுதின்

ஆரஞ ருற்ற நெஞ்சமொ டொராங்குக்
கண்ணி லூமன் கடற்பட் டாங்கு
வரையளந் தறியாத் திரையரு நீத்தத்
தவல மறுசுழி மறுகலிற்
றவலே நன்றுமற் றகுதியு மதுவே.

# 3. நற்றிணை

## 1. பாலை

சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்கப்
பெருவரை அடுக்கத் தருவி யார்ப்பக்
கல்லலைத் திழிதருங் கடுவரற் கான்யாற்றுக்
கழைமாய் நீத்தங் காடலை யார்ப்பத்
தழங்குகுர லேறொடு முழங்கி வானம்
இன்னே பெய்ய மின்னுமால் தோழி
வெண்ணெ லருந்திய வரிநுதல் யானை
தண்ணறுஞ் சிலம்பிற் றுஞ்சுஞ்
சிறியிலைச் சந்தின வாடுபெருங் காட்டே.

—நல்வெள்ளியார்.

## 2. நெய்தல்

இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன முள்ளிலைத் தாழை
பெருங்களிற்று மருப்பின் அன்ன வரும்புமுதிர்பு
நன்மா னுழையின் வேறுபடத் தோன்றி
விழவுக்களங் கமழும் உரவுநீர்ச் சேர்ப்ப!
இனமணி நெடுந்தேர் பாக னியக்கச்
செலீஇய சேறி யாயின் இவளே
வருவை யாகிய சின்னாள்
வாழா ளாதல்நற் கறிந்தனை சென்மே.

—நக்கண்ணையார்.

## 3. மருதம்

மலைகண் டன்ன நிலைபுணர் நிவப்பின்
பெருநெற் பல்கூட் டெருமை உழவ!
கண்படை பெறுது தண்புலர் விடியல்
கருங்கண் வராஅல் பெருந்தடி மிளிர்வையொடு
புகர்வை அரிசிப் பொம்மல் பெருஞ்சோறு

கவர்படு கையை கழும மாந்தி
நீருறு செறுவில் நாறுமுடி யழுத்தநின்
நடுநரோடு சேறி யாயின் அவண
சாயும் நெய்தலும் ஓம்புமதி எம்மின்
மாயிருங் கூந்தல் மடந்தை
ஆய்வளைக் கூட்டும் அணியுமார் அவையே.

—தூங்கலோரியார்.

## 4. பாலை

உள்ளார் கொல்லோ தோழி துணையொடு
வேனில் ஓதிப் பாடுநடை வழலை
வரிமரல் நுகும்பின் வாடி அவண
வறன்பொருந்து குன்றத் துச்சிக் கவாஅன்
வேட்டச் சீறூர் அகன்கண் கேணிப்
பயநிரைக் கெடுத்த மணிநீர்ப் பத்தர்
புன்றலை மடப்பிடி கன்றோ டார
வில்கடிந்து ஊட்டின பெயரும்
கொல்களிற்று ஒருத்தல சுரனிறந் தோரே.

## 5. முல்லை

வானிகுபு சொரிந்த வயங்குபெயல் கடைநாள்
பாணி கொண்ட பல்கால் மெல்லுறி
ஞெலிகோல் கலப்பை அதளொடு சுருக்கிப்
பறிப்புறத் திட்ட பால்நொடை இடையன்
நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்பத்
தண்டுகால் வைத்த ஒடுங்குநிலை மடிவிளி
சிறுதலைத் தொழுதி ஏமார்த் தல்கும்
புறவி னதுவே பொய்யா யாணர்
அல்லில் ஆயினும் விருந்துவரி னுவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே.

—இடைக்காடனார்

# 4. திருக்குறள்

## குடிசெயல்வகை

1 கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடைய தில்.

2 ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்
நீள்வினையான் நீளும் குடி.

3 குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.

4 சூழாமல் தானே முடிவெய்தும் தன்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

5 குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

6 நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

7 அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

8 குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

9 இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு.

10 இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
நல்லாள் இலாத குடி.

## உழவு

1 சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2 உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து.

3 உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் ;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

4 பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.

5 இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

6 உழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

7 தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

8 ஏரினும் நன்றால் எருவிடுதல் ; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

9 செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும்.

10 இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்.

## நல்குரவு

1 இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.

2 இன்மை எனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும்.

3 தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக
நல்குர வென்னும் நசை.

4 இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த
சொற்பிறக்கும் சோர்வு தரும்.

5 நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

6 நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

7 அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

8 இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.

9 நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது.

10 துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.

## இரவு

1 இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
அவர்பழி தம்பழி அன்று.

2 இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை
துன்பம் உறுஅ வரின்.

3 கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்னின்
றிரப்புமோர் ஏஎர் உடைத்து,

4 இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்ருதார் மாட்டு.

5 கரப்பிலார் வையகத் துண்மையான் கண்ணின்
றிரப்பவர் மேற்கொள் வது.

6 கரப்பிடும்பை இல்லாரைக் காணின் நிரப்பிடும்பை
எல்லாம் ஒருங்கு கெடும்.

7 இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்
உள்ளுள் உவப்ப துடைத்து.

8 இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்று.

9 ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்
மேவார் இலாஅக் கடை ?

10 இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயும் சாலும் கரி.

## இரவச்சம்

1 கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.

2 இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

3 இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

4 இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்
காலும் இரவொல்லாச் சால்பு.

5 தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த
துண்ணலி னூங்கினிய தில்.

6 ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்
கிரவின் இளிவந்த தில்.

7 இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

8 இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

9 இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉம் இன்றிக் கெடும்,

10 கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்.

---

# 5. சிலப்பதிகாரம்

## நீர்ப்படைக்காதை.

வடபே ரிமயத்து வான்றரு சிறப்பிற்
கடவுட் பத்தினிக் கற்கால் கொண்டபின்
சினவேன் முன்பிற் செருவெங் கோலத்துக்
கனக விசயர்தங் கதிர்முடி யேற்றிச்
செறிகழல் வேந்தன் றென்றமி ழாற்ற
லறியாது மலைந்த வாரிய மன்னரைச்
செயிர்த்தொழின் முதியோன் செய்தொழில் பெருக
வுயிர்த்தொகை யுண்ட வொன்பதிற் றிரட்டியென்
றியாண்டு மதியு நாளுங் கடிகையு
மீண்டுநீர் ஞாலங் கூட்டி யெண்கொள
வருபெருந் தானை மறக்கள மருங்கி
னொருபக லெல்லை யுயிர்த்தொகை யுண்ட
செங்குட் டுவன்றன் சினவேற் றானையொடு
கங்கைப் பேரியாற்றுக் கரையகம் புகுந்து
பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை
நூற்றிறன் மாக்களி னீர்ப்படை செய்து
மன்பெருங் கோயிலு மணிமண் டபங்களும்
பொன்புனை யரங்கமும் புனைபூம் பந்தரு
முரிமைப் பள்ளியும் விரிபூஞ் சோலையுந்
திருமலர்ப் பொய்கையும் வரிகா ணரங்கமும்
பேரிசை மன்னர்க் கேற்பவை பிறவு
மாரிய மன்ன ரழகுற வமைத்த
தெள்ளுநீர்க் கங்கைத் தென்கரை யாங்கண்
வெள்ளிடைப் பாடி வேந்தன் புக்கு
நீணில மன்னர் நெஞ்சுபுக லழித்து
வானவ மகளிரின் வதுவைசூட் டயர்ந்தோ
ருலையா வெஞ்சம மூர்ந்தம ருழக்கித்
தலையுந் தோளும் விலைபெறக் கிடந்தோர்
நாள்விலைக் கிளையு ணல்லம ரழுவத்து
வாள்வினை முடித்து மறத்தொடு முடிந்தோர்

குழிகட் பேய்மகள் குரவையிற் றெடுத்து
வழிமருங் கேத்த வாளொடு மடிந்தோர்
கிளைக டம்மொடு கிளர்பூ ணகத்து
வளையோர் மடிய மடிந்தோர் மைந்தர்
மலைத்துத் தலைவந்தோர் வாளொடு மடியத்

தலைத்தார் வாகை தம்முடிக் கணிந்தோர்
திண்டேர்க் கொடுஞ்சியொடு தேரோர் வீழப்
புண்டோய் குருதியிற் பொலிந்த மைந்தர்
மாற்றருஞ் சிறப்பின் மணிமுடிக் கருந்தலைக்
கூற்றுக்கண் ணோட வரிந்துகளங் கொண்டோர்

நிறஞ்சிதை கவயமொடு நிறப்புண் கூர்ந்து
புறம்பெற வந்த போர்வாண் மறவர்
வருக தாமென வாகைப் பொலந்தோடு
பெருநா ளமயம் பிறக்கிடக் கொடுத்துத்
தோடார் போந்தை தும்பையொடு முடித்துப்

பாடுதுறை முற்றிய கொற்ற வேந்த
னாடுகொண் மார்போ டரசுவிளங் கிருக்கையின்
மாடல மறையோன் வந்து தோன்றி
வாழ்க வெங்கோ மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்த

முடித்தலை நெரித்தது முதுநீர் ஞால
மடிப்படுத் தாண்ட வரசே வாழ்கெனப்
பகைப்புலத் தரசர் பலரீங் கறியா
நகைத்திறங் கூறினை நான்மறை யாள
யாதுநீ கூறிய வுரைப்பொரு ளீங்கென

மாடல மறையோன் மன்னவற் குரைக்குங்
கானலந் தண்டுறைக் கடல்விளை யாட்டினுண்
மாதவி மடந்தை வரிநவில் பாணியோ
டூடற் காலத் தூழ்வினை யுருத்தெழக்
கூடாது பிரிந்து குலக்கொடி தன்னுடன்

மாட மூதூர் மதுரை புக்காங்
கிலைத்தார் வேந்த னெழில்வா னெய்தக்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
குடவர் கோவே நின்னாடு புகுந்து
வடதிசை மன்னர் மணிமுடி யேறின

ளின்னுங் கேட்டரு ளிகல்வேற் றடக்கை
மன்னர் கோவே யான்வருங் காரண
மாமுனி பொதியின் மலைவலங் கொண்டு
குமரியம் பெருந்துறை யாடி மீள்வே
னூழ்வினைப் பயன்கொ லுரைசால் சிறப்பின்
வாய்வாட் டென்னவன் மதுரையிற் சென்றேன்
வலம்படு தானை மன்னவன் றன்னைச்
சிலம்பின் வென்றனள் சேயிழை யென்றலுந்
தாதெரு மன்றத்து மாதரி யெழுந்து
கோவலன் றீதிலன் கோமகன் பிழைத்தா
னடைக்கல மிழந்தே னிடைக்குல மாக்காள்
குடையுங் கோலும் பிழைக்க வோவென
விடையிரு ளியாமத் தெரியகம் புக்கதுந்
தவந்தரு சிறப்பிற் கவுந்தி சீற்ற
நிவந்தோங்கு செங்கோ னீணில வேந்தன்
போகுயிர் தாங்கப் பொறைசா லாட்டி
யென்னோ டிவர்வினை யுருத்த தோவென
வுண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்த்ததும்
பொற்றேர்ச் செழியன் மதுரை மாநகர்க்
குற்றது மெல்லா மொழிவின் றுணர்ந்தாங்
கென்பதிப் பெயர்ந்தே னென்றுயர் போற்றிச்
செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க் குரைக்க
மைந்தற் குற்றது மடந்தைக் குற்றதுஞ்
செங்கோல் வேந்தற் குற்றதுங் கேட்டுக்
கோவலன் றாதை கொடுந்துய ரெய்தி
மாபெருந் தானமா வான்பொரு ளீத்தாங்
கிந்திர விகார மேழுடன் புக்காங்
கந்தர சாரிக ளாறைம் பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பற முயன்று
துறந்தோர் தம்முன் துறவி யெய்தவுந்
துறந்தோன் மனைவி மகன்றுயர் பொறாஅ
ளிறந்ததுய ரெய்தி யிரங்கிமெய் விடவுங்
கண்ணகி தாதை கடவுளர் கோலத்
தண்ணலம் பெருந்தவத் தாசீ வகர்முன்
புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவுந்

தானம் புரிந்தோன் றன்மனைக் கிழத்தி
நாள்விடுஉ நல்லுயிர் நீத்துமெய் விடவு
மற்றது கேட்டு மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமே கலையை வான்றுய ருறுக்குங்

கணிகையர் கோலங் காணு தொழிகெனக்
கோதைத் தாமங் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறங் கொள்ளவு
மென்வாய்க் கேட்டோ ரிறந்தோ ருண்மையி
னன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்

மன்னர் கோவே வாழ்க வீங்கெனத்
தோடார் போந்தை தும்பையொடு முடித்த
வாடா வஞ்சி வானவர் பெருந்தகை
மன்னவ னிறந்தபின் வளங்கெழு சிறப்பிற்
றென்னவ னுடு செய்ததீங் குரையென

நீடு வாழியரோ நீணில வேந்தென
மாடல மறையோன் மன்னவற் குரைக்குநின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
வொத்த பண்பின ரொன்பது மன்ன
ரிளவரசு பொருஅ ரேவல் கேளார்

வளநா டழிக்கு மாண்பின ராதலி
ஞென்பது குடையு மொருபக லொழித்தவன்
பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்
பழையன் காக்குங் குழைபயி னெடுங்கோட்டு
வேம்புமுத றடிந்த வேந்துவாள் வலத்துப்

போந்தைக் கண்ணிப் பொறைய கேட்டருள்
கொற்கையி லிருந்த வெற்றிவேற் செழியன்
பொற்றெழிற் கொல்ல ரீரைஞ் நூற்றுவ
ரொருமுலை குறைத்த திருமா பத்தினிக்
கொருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி

யுரைசெல வெறுத்த மதுரை மூதூ
ரரைசுகெடுத் தலம்வரு மல்லற் காலைத்
தென்புல மருங்கிற் றீதுதீர் சிறப்பின்
மன்பதை காக்கு முறைமுதற் கட்டிலி
னிணமணிப் புரவீ யோரேழ் பூண்ட

வொருதனி யாழிக் கடவுட் டேர்மிசைக்
காலைச் செங்கதிர்க் கடவுளே றினனென
மாலைத் திங்கள் வழியோ னேறின
னூழிதொ றூழி யுலகங் காத்து
வாழ்க வெங்கோ வாழிய பெரிதென

மறையோன் கூறிய மாற்ற மெல்லா
மிறையோன் கேட்டாங் கிருந்த வெல்லையு
ளகல்வாய் ஞால மாரிருள் விழுங்கப்
பகல்செல முதிர்ந்த படர்கூர் மாலைச்
செந்தீப் பரந்த திசைமுகம் விளங்க

வந்திச் செக்கர் வெண்பிறை தோன்றப்
பிறையோர் வண்ணம் பெருந்தகை நோக்க
விறையோன் செவ்வியிற் கணியெழுந் துரைப்போ
னெண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ணாள் வேந்தே வாழ்கென் றேத்த

நெடுங்காழ்க் கண்ட நிரல்பட நிரைத்த
கொடும்பட நெடுமதிற் கொடித்தேர் வீதியுட்
குறியவு நெடியவுங் குன்றுகண் டன்ன
வுறையுண் முடுக்க ரொருதிறம் போகி
வித்தகர் கைவினை விளங்கிய கொள்கைச்

சித்திர விதானத்துச் செம்பொற் பீடிகைக்
கோயி லிருக்கைக் கோமக னேறி
வாயி லாளரின் மாடலற் கூஉ
யிளங்கோ வேந்த ரிறந்ததற் பின்னர்
வளங்கெழு நன்னாட்டு மன்னவன் கொற்றமொடு

செங்கோற் றன்மை தீதின் றோவென
வெங்கோ வேந்தே வாழ்கென் றேத்தி
மங்கல மறையோன் மாடல னுரைக்கும்
வெயில்விளங்கு மணிப்பூண் விண்ணவர் வியப்ப
வெயில்மூன் றெறிந்த விகல்வேற் கொற்றமுங்

குறுநடைப் புரவி னெடுந்துயர் தீர
வெறிதரு பருந்தி னிடும்பை நீங்க
வரிந்துடம் பிட்டோ னறந்தரு கோலுந்
திரிந்துவே றாகுங் காலமு முண்டோ
தீதோ வில்லைச் செல்லற் காலையுங்

காவிரி புரக்கு நாடுகிழ வோற்கென்
றருமறை முதல்வன் சொல்லக் கேட்டே
பெருமகன் மறையோற் பேணி யாங்கவற்
காடகப் பெருநிறை யையைந் திரட்டித்
தோடார் போந்தை வேலோன் றன்னிறை

மாடல மறையோன் கொள்கென் றளித்தாங்
காரிய மன்ன ரையிரு பதின்மரைச்
சீர்கெழு நன்னாட்டுச் செல்கவென் றேவித்
தாபத வேடத் துயிருய்ந்து பிழைத்த
மாபெருந் தானை மன்ன குமரர்...

எஞ்சா மன்ன ரிறைமொழி மறுக்குங்
கஞ்சுக முதல்வ ரீரைஞ் நூற்றுவ
ரரியிற் போந்தை யருந்தமி ழாற்ற
றெரியாது மலைந்த கனக விசயரை

யிருபெரு வேந்தர்க்குக் காட்டிட வேவித்
திருந்துதுயில் கொள்ளா வளவை யாங்கணும்
பரம்புநீர்க் கங்கைப் பழனப் பாசடைப்
பயிலிளந் தாமரைப் பல்வண் டியாழ்செய
வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்

குணதிசைக் குன்றத் துயர்மிசைத் தோன்றக்
குடதிசை யாளுங் கொற்ற வேந்தன்
வடதிசைத் தும்பை வாகையொடு முடித்துத்
தென்றிசைப் பெயர்ந்த வென்றித் தானையொடு
நிதிதுஞ்சு வியனகர் நீடுநிலை நிவந்து

கதிர்செல வொழித்த கனக மாளிகை
முத்துநிரைக் கொடித்தொடர் முழுவதும் வளைஇய
சித்திர விதானத்துச் செய்பூங் கைவினை
யிலங்கொளி மணிநிரை யிடையிடை வகுத்த
விலங்கொளி வயிரமொடு பொலந்தகடு போகிய

மடையமை செறுவின் வான்பொற் கட்டிற்
புடைதிர டமனியப் பொற்கா லமளிமிசை
யிணைபுண ரெகினத் திளமயிர் செறித்த
துணையணைப் பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்
கெறிந்துகளங் கொண்ட வியறேர்க் கொற்ற

மறிந்துரை பயின்ற வாயச் செவிலியர்
தோட்டுணை துறந்த துயரீங் கொழிகெனப்
பாட்டொடு தொடுத்துப் பல்யாண்டு வாழ்த்தச்
சிறுகுறுங் கூனுங் குறளுஞ் சென்று
பெறுகநின் செவ்வி பெருமகன் வந்தா

னறுமலர்க் கூந்த னாளணி பெறுகென
வமைவிளை தேறன் மாந்திய கானவன்
கவண்விடு புடையூஉக் காவல் கைவிட
வீங்குபுன முணீஇய வேண்டி வந்த
வோங்கியல் யானை தூங்குதுயி லெய்த

வாகை தும்பை வடதிசைச் சூடிய
வேக யானையின் வழியோ நீங்கெனத்
திறத்திறம் பகர்ந்து சேணோங் கிதணத்துக்
குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும்
வடதிசை மன்னர் மன்னெயின் முருக்கிக்

கவடி வித்திய கழுதையே ருழவன்
குடவர் கோமான் வந்தா னாளைப்
படுநுகம் பூணாய் பகடே மன்ன
ரடித்தளை நீக்கும் வெள்ளணி யாமெனுந்
தொடுப்பே ருழவ ரோதைப் பாணியுந்

தண்ணான் பொருநை யாடுந ரிட்ட
வண்ணமுஞ் சுண்ணமு மலரும் பரந்து
விண்ணுறை விற்போல் விளங்கிய பெருந்துறை
வண்டுண மலர்ந்த மணித்தோட்டுக் குவளை
முண்டகக் கோதையொடு முடித்த குஞ்சியின்

முருகுவிரி தாமரை முழுமலர் தோயக்
குருகலர் தாழைக் கோட்டுமிசை யிருந்து
வில்லவன் வந்தான் வியன்பே ரியமத்துப்
பல்லா னிரையொடு படர்குவிர் நீரெனக்
காவல னாநிரை நீர்த்துறை படீஇக்

கோவல ரூதுங் குழலின் பாணியும்
வெண்டிரை பொருத வேலை வாலுகத்துக்
குண்டுநீ ரடைகரைக் குவையிரும் புன்னை
வலம்புரி யீன்ற நலம்புரி முத்தங்
கழங்காடு மகளி ரோதை யாயத்து

வழங்குதொடி முன்கை மலர வேந்தி
வானவன் வந்தான்...தும்பை போந்தையொடு
வஞ்சி பாடுது மடவீர் யாமெனு
மஞ்சொற் கிளவிய ரந்தீம் பாணியு
மோர்த்துட னிருந்த கோப்பெருந் தேவி
வால்வளை செறிய வலம்புரி வலனெழ
மாலைவெண் குடைக்கீழ் வாகைச் சென்னியன்
வேக யானையின் மீமிசைப் பொலிந்து
குஞ்சர வொழுகையிற் கோநக ரெதிர்கொள
வஞ்சியுட் புகுந்தனன் செங்குட் டுவனென்.

# 6. சீவக சிந்தாமணி

## காந்தருவ தத்தையார் இலம்பகம்

தாதைதா னுரைத்த வெல்லாந் தன்னுயிர்த் தோழன் கூறக்
கோதைமுத் தணிந்த மார்பன் கூரெயி றிலங்க நக்காங்
கேதமொன் றில்லை சேறு மென்றலு மிலங்கு வாட்டைப்
போதுலாங் கண்ணி மைந்தர் போர்ப்புலிக் குழாத்திற் சூழ்ந்தார். 1

கண்ணுதற் கடவுள் சீறக் கனலெரி குளித்த காமன்
மண்மிசைத் தோன்றி யன்ன வகைநல முடைய காளை
தெண்மணி யார மார்பன் றிருநுதன் மகளிர் நெஞ்சத்
துண்ணிறை பருகும் வண்டா ருருவமை திருவின் மிக்கான். 2

கருநெறி பயின்ற குஞ்சிக் காணகில் கமழ வூட்டி
வரிநிற வண்ண மாலை வலம்பட மிலைச்சி வாளார்
திருநிற முகத்திற் கேற்பச் செம்பொனோ ரோலை சேர்த்தி
எரிநிறக் குழையோர் காதிற் கிருளறச் சுடர வைத்தான். 3

தென்வரைப் பொதியிற் றந்த சந்தனத் தேய்வை தேங்கொண்
மன்வரை யகலத் தப்பி வலம்புரி யாரந் தாங்கி
மின்விரித் தனைய தொத்து விலைவரம் பறிய லாகா
இன்னுரைக் கலிங்க மேற்ப மருங்கினுக் கெழுதி வைத்தான். 4

இரும்பறக் கழுவி யெஃகி னிருளற வடிக்கப் பட்ட
அரும்பெறற் சுரிகை யம்பூங் கச்சிடைக் கோத்து வாங்கிப்
பெருந்தகைக் குருசில் கொண்டு பெருவலஞ் சுடர வீக்கித்
திருந்திழை மகளிர் வெஃகுந் தேவிளங் குமர னைத்தான். 5

வரைவிழித் திமைப்ப தொக்கும் வாளொளி யார மார்பின்
விரைவழித் திளைய ரெல்லாம் விழுமணிக் கலங்க டாங்கி
நுரைகிழித் தனைய நொய்ம்மை நுண்டுகின் மருங்குல் சேர்த்தி
உரைகிழித் துணரு மொப்பி னேவியப் பாவை யொத்தார். 6

அரக்குநீ ரெறியப் பட்ட அஞ்சனக் குன்ற மன்ன
திருக்கிள ரோடை சூழ்ந்த செம்புகர் நெற்றித் தாகி
உருக்கியூ னுண்ணும் வேகத் துறுபுலி யனைய நாகம்
அருக்கனோர் குன்றஞ் சேர்ந்தாங் கண்ணுற்று னேறி னனே. 7

விடுகணை விசையின் வெய்ய விளங்கொளி இவுளித் திண்டேர்
கடுநடைக் கவரி நெற்றிக் காலியற் புரவி காய்ந்து
வடி நுனை யொளிறு மாலை வாட்படை மறவர் சூழ
அடுதிரைச் சங்க மார்ப்ப அணிநகர் முன்னி னுனே. 8

தோற்றனள் மடந்தை நல்யாழ் தோன்றலுக் கென்று நிற்பார்
நோற்றனள் நங்கை மைந்த னிளநல னுகர்தற் கெனபார்
கோற்றெடி மகளிர் செம்பொற் கோதையுங் குழையு மின்ன
ஏற்றன சொல்லி நிற்பா ரெங்கணு மாயி னுரே. 9

சுருநிறக் கொடுங்குழை சுழன்றெருத் தலைத்தர
அருமலர்த் தெரியலா னழன்றுநோக்கி யையெனப்
பொருமனப் பொலிவெனு மணிக்கைமத்தி கையினல்
அருவிவந்து தோன்றினுன் அனங்கனன்ன அண்ணலே. 10

குனிகொள்பாக வெண்மதிக் கூரிரும்பு தானுறீஇப்
பனிகொண்மால் வரையெனப் படுமதக் களிறிரீஇ
இனிதிழிந் திளையரேத்த வின்னகிற் கொழும்புகை
முனியவுண்ட குஞ்சியான் முரண்கொண்மாட முன்னினுன். 11

புதிதினிட்ட பூந்தவிசி னுச்சிமே னடந்தவட்
புதிதினிட்ட மெல்லணைப் பொலிந்தவண்ணம் போகுயர்
மதியமேறி வெஞ்சுடர் வெம்மைநீங்க மன்னிய
உதயமென்னு மால்வரை யுவந்திருந்த தொத்ததே. 12

முருகுவிம்மு கோதையார் மொய்யலங்கல் வண்டுபோற்
பருகுவா னிவணலம் பாரித்திட்ட விந்நகர்
உருகுமைங் கணையொழித் துருவினைய காமனுர்
கருதிவந்த தென்றுதங் கண்கள்கொண்டு நோக்கினுர். 13

முனைத்திறத்து மிக்கசீர் முனைவர்தம் முனைவனுர்
வனப்புமிக் கவர்களின் வனப்புமிக் கினியனு
நினைத்திருந் தியற்றிய நிருமித மகனிவன்
கனைத்துவண் டுளர்ந்ததார்க் காளைசீவ கன்னரோ. 14

இனைய கூறி மற்றவ டோழி மாரு மின்புற
வனைய லாம்ப டித்தலா வடிவிற் கெல்லை யாகிய
கனைவண் டோதி கைதொழுங் கடவுள் கண்ணிற் கண்டவர்
எனைய தெனைய தெய்தினு ரனைய தனைய தாயினுர். 15

குட்டநீர்க் குவளை யெல்லாங் கூடிமுன் னிற்க லாற்ருக்
கட்டழ கமைந்த கண்ணுள் நிறையெனுஞ் சிறையைக் கைபோய்
இட்டநாண் வேலி யுந்திக் கடலென வெழுந்த வேட்கை
விட்டெரி கொளுவ நின்று ளெரியுறு மெழுகி னின்ருள். 16

கண்ணெனும் வலையி லுள்ளான் கையகப் பட்டி ருந்தான்
பெண்ணெனும் உழலை பாயும் பெருவனப் புடைய நம்பி
எண்ணின்மற் றியாவ ஞங்கொ லென்னிதற் படுத்த வேந்தல்
ஒண்ணிற வுருவச் செந்தீ யுருவுகொண் டனைய வேலான். 17

யாவனே யானு மாக அருநிறைக் கதவ நீக்கிக்
காவலென் னெஞ்ச மென்னுங் கன்னிமா டம்பு குந்து
நோவவென் னுள்ளம் யாத்தாய் நின்னையு மாலை யாலே
தேவரிற் செறிய யாப்பன் சிறிதிடைப் படுக வென்ருள். 18

கழித்தவே லேறு பெற்ற கடத்திடைப் பிணையின் மாழ்கி
விழித்துவெய் துதிர்த்து மெல்ல நடுங்கித்தன் றேழி கூந்தல்
இழுக்கிவண் டிரியச் சேர்ந்தோர் கொடிப்புல்லுங் கொடியிற் புல்லி
எழிற்றகை மார்பற் கின்யா ழிதுவுய்த்துக் கொடுமோ வென்ருள். 19

தடங்க ணுள்ப ணியினுற் ருனவ் வீணை யொன்றினை
நெடுங்க ணுளெ ழினியை நீக்கி யுய்த்து நீட்டினுள்
மடங்க லன்ன மொய்ம்பினுன் வருக வென்று கொண்டுதன்
கிடந்த ஞானத் தெல்லையைக் கிளக்க லுற்று நோக்கினுன். 20

சுரந்து வானஞ் சூன்முதிர்ந்து மெய்ந்நொந் தீன்ற துளியேபோற்
பரந்த கேள்வித் துறைபோய பைந்தார் மார்பன் பசும்பொன்யாழ்
நரம்பு தேனுர்த் தெனத்தீண்டி நல்லாள் வீணை பொல்லாமை
இருந்த நகிலா ணின்றுளை நோக்கி யிசையி னிதுசொன்னுன். 21

நீர்நின் றிளகிற் றிதுவேண்டா நீரின் வந்த திதுபோக
வார்நின் றிளகு நகிலினுய் வாட்புண் ணுற்ற திதுநடக்க
ஒரு முருமே றிதுவுண்ட தொழிக வொண்பொ னுகுகொடியே
சீர்சால் கணிகை சிறுவன்போற் சிறப்பின் றம்ம விதுவென்றுன். 22

கல்சேர் பூண்கொள் கதிர்நகிலாய் காமத் தீயால் வெந்தவர்போற்
கொல்லை யுழவர் சுடப்பட்டுக் குரங்கி வெந்த திதுகளிறு
புல்ல முரிந்த தெனப்போக்கித் தூம மார்ந்த துகிலுறையுள்
நல்யாழ் நீட்ட அதுகொண்டு நங்கை நலத்த திதுவென்றுன். 23

தீந்தொடை நரம்பின் றீமை சிறிதலாப் பொழுது மோதிப்
பூந்தொடை யரிவை காணப் புரிநெகிழ்த் துரோமங் காட்டத்
தேங்கம ழோதி தோற்ருள் செல்வனுக் கென்ன மைந்தன்
வாங்குபு நபுலன் கையுள் வார்புரி நரம்பு கொண்டான். 24

பணிவரும் பைம்பொற் பத்தர் பல்வினைப் பவள ஆணி
மணிகடை மருப்பின் வாளார் மாடக வயிரத் தீந்தேன்
அணிபெற வொழுகி யன்ன அமிழ்துறழ் நரம்பி னல்யாழ்
கணிபுகழ் காளை கொண்டு கடலகம் வணக்க லுற்ருன். 25

குரல்குர லாகப் பண்ணிக் கோதைதாழ் குஞ்சி யான்றன்
விரல்கவர்ந் தெடுத்த கீத மிடறெனத் தெரிதல் தேற்ருர்
சுரரொடு மக்கள் வீழ்ந்தார் சோர்ந்தன புள்ளு மாவும்
உருகின மரமுங் கல்லும் ஓர்த்தெழீஇப் பாடு கின்ருன். 26

விண்ணவர் வியப்ப விஞ்சை வீரர்கள் விரும்பி யேத்த
மண்ணவர் மகிழ வான்கட் பறவைமெய்ம் மறந்து சோர
அண்ணல்தான் அனங்கன் நாணப் பாடினன் அரச ரெல்லாம்
பண்ணமைத் தெழுதப் பட்ட பாவைபோ லாயி னரே. 27

பருந்து நிழலும்போற் பாட்டு மெழாலும்
திருந்துதார்ச் சீவகற்கே சோந்தன வென்றெண்ணி
விருந்தாக யாழ்பண்ணி வீணை த்ரான்ருேற்பான்
இருந்தா ளிளமயில்போ லேந்திலே வேற்கண்ணுள். 28

கோதை புறந்தாழக் குண்டலமும் பொற்ருேடும்
காதி னெளிர்ந்திலங்கக் காமர் நுதல்வியர்ப்ப
மாத ரெருத்த மிடங்கோட்டி மாமதுர
கீதங் கிடையிலாள் பாடத் தொடங்கினுள். 29

பண்ணொன்று பாட லதுவொன்று பல்வளைக்கை
மண்ணொன்று மெல்விரலும் வாணரம்பின் மேனடவா
விண்ணின் றியங்கி மிடறு நடுநடுங்கி
எண்ணின்றி மாத ரிசைதோற் றிருந்தனளே. 30

மையார் நெடுங்கண்ணுள் மாமணியாழ் தானுடைந்து
நையா நடுநடுங்கா நனிநாண மீதூராப்
பொய்யாதோர் குன்றெடுப்பாள் போன்மெலிந்து பொன்மாலே
பெய்பூங் கழலாற்குப் பெண்ணரசி யேந்தினளே. 31

மெல்லென் சிலம்பரற்ற மேகலைகண் மின்னுமிழ
நல்ல பெடையன்ன நாண அடியொதுங்கி
ஒல்லென் னுயர்தவமே செய்ம்மின் உலகத்தீர்
எல்லீரு மென்பாள்போல் ஏந்தன்மேல் வீழ்த்தனளே. 32

கோதையுந் தோடு மின்னிக் குண்டலந் திருவில் வீச
மாதரம் பாவை நாணி மழைமினி ஞெசிந்து நிற்பக்
காதலந் தோழி மார்கள் கருங்கயற் கண்ணி ஞளை
ஏதமொன் றின்றிப் பூம்பட் டெந்திர வெழினி வீழ்த்தார். 33

வெள்ளிலை வேற்க ணளைச் சீவகன் வீணை வென்றான்
ஒள்ளிய வென்று மாந்த ருவர்க்கடன் மெலிய ஆர்ப்பக்
கள்ளராற் புலியை யேறு காணிய காவல் மன்னன்
உள்ளகம் புழுங்கி மாதோ வுரைத்தனன் மன்னர்க் கெல்லாம். 34

வடதிசைக் குன்ற மன்ன வான்குல மாசு செய்தீர்
விடுகதிர்ப் பருதி முன்னர் மின்மினி விளக்க மொத்தீர்
வடுவுரை யென்று மாயும் வாளமர் அஞ்சி னீரேல்
முடிதுறந் தளியிர் போகி முனிவனம் புகுமி னென்றான். 35

முல்லைப்பூம் பந்து தன்னை மும்மதக் களிற்று வேலிக்
கொல்லைப்பூங் குன்றஞ் செய்தீர் குங்குமக் குழங்கன் மாலை
மல்லுப்பூத் தகன்ற மார்பீர் புகழெனும் போர்வை போர்த்துச்
செல்வப்பூ மகளு நாளை யவனுழைச் செல்லு மென்றான், 36

திருமக ளிவளைச் சேர்ந்தான் றெண்டிரை யாடை வேலி
இருநில மகட்குஞ் செம்பொ னேமிக்கு மிறைவ னாகும்
செருநிலத் திவனை வென்றீர் திருவினுக் குரியீ ரென்றான்
கருமன நச்சு வெஞ்சொற் கட்டியங் கார னன்றே. 37

அனிச்சப்பூங் கோதை சூட்டின் அம்மனை யோவென் றஞ்சிப்
பனிக்குநுண் ணுசுப்பிற் பாவை யொருத்திநாம் பலரென் றெண்ணித்
துனித்துநீர் துளங்கல் வேண்டா தூமணிச் சிவிறி நீர்தூய்த்
தனிக்கயத் துழக்கி வென்றீர் தையலைச் சார்மி னென்றான். 38

பண்ணியல் யானை மேலான் பதுமுகன் பரவைத் தானை
கண்ணிய துணர்ந்து கல்லாக் கட்டியங் காரன் நெஞ்சில்
எண்ணிய தெண்ணி மன்ன ரிகன்மலைந் தெழுந்த போழ்தில்
தண்ணிய சிறிய வெய்ய தழற்சொலாற் சாற்று கின்றான். 39

இசையினி லிவட்குத் தோற்ரும் யானையால் வேறு மென்னின்
இசைவதொன் றன்று கண்டீ ரிதனையா னிரந்து சொன்னேன்
வசையுடைத் தரசர்க் கெல்லாம் வழிமுறை வந்த வாறே
திசைமுகம் படர்க வல்லே தீத்தொட்டாற் சுடுவ தன்றே. 40

நாறும்ம் மதத்தி ஞலே நாகத்தை யிரிக்கு நாகம்
ஆறிய சினத்த தன்றி யதிங்கத்தின் கவளங் கொண்டால்
வேறுநீர் நினைந்து காணீர் யாவர்க்கும் விடுக்க லாகா
நாறித்தே னெழுகுங் கோதை நம்பிக்கு மன்ன னென்ருன். 41

மத்திரிப் புடைய நாகம் வாய்வழி கடாத்த தாகி
உத்தமப் பிடிக்க ணின்ரு லுடற்றுதல் களபக் காமே
பத்தினிப் பாவை நம்பி சீவகன் பால ளானுல்
அத்திறங் கருதி யூக்கல் அரசிர்காள் நுங்கட் காமோ. 42

எம்மைநீர் வெல்லப் பெற்றீர் வென்றபி னிருந்த வேந்தன்
நும்மையும் வேறு செய்து நும்முளே பொருது வீந்தால்
வெம்மைசெய் துலக மெல்லாம் ஆண்டிட விளக்கு நீதி
அம்மமற் றதனை யோரீர் அவன்கருத் தன்ன தென்ருன். 43

சொற்றிற லன்றி மன்னீர் தொக்குநீர் காண்மி னெங்கள்
விற்றிற லென்று வில்வாய் வெங்கணை தொடுத்து வாங்கிக்
கற்றிரள் கழிந்து மண்ணுட் கரந்தது குளிப்ப வெய்திட்
டிற்றெமர் கல்வி யென்ருன் இடியுரு மேற்ரெ டொப்பான். 44

ஆழியங் கழனி தன்னுள் அம்பொடு கணையம் வித்திச்
சூழ்குடர்ப் பிணங்கண் மல்க விளைத்தபின் ருெழுதிப் பல்பேய்க்
கூழ்படு குருதி நெய்யி னிறைச்சிச்சோ றூட்டி வென்றி
வீழ்தர வேட்டு நின்ரு ரெய்துப வெகுளல் வேண்டா. 45

மேவி நம்பிக்கு வெம்பகை யாக்கிய
பாவி யேனுயிர் பாழுடல் பற்றுவிட்
டாவி யோநட வாயென் றழுதுதன்
காவி வாட்கண் கலங்க வதுக்கினுள். 46

பாழி நம்படை மேலதிப் பாரெலாம்
நூழி லாட்டி நுடக்கிக் குடித்திடும்
வாழி நங்கைகண் டாயென்று வாட்கணீர்
தோழி தூத்துகிற் ருேகையி னீக்கினுள். 47.

குழையுடை முகத்தி ளுள்கட் கோணைப்போர் செய்த மன்னர்
மழையிடை மின்னி னெய்தா மறைந்தனர் விஞ்சை வேந்தர்
முழையிடைச் சிங்க மன்னுன் மொய்யம ரேத்தி யார்த்தார்
விழவுடை வீதி மூதூர் விருப்பொடு மலிந்த தன்றே. 48

பார்மிசை யுலக மேத்தும் படுகளங் கண்டு பற்றூர்
போர்முகக் களிற்று வெண்கோ டுழுததெஞ் சால்கொண் மார்பிற்
சீர்முகத் தோழர் சூழச் சீவகன் றிருவின் சாயல்
வார்முக நகிலி ளுளை மனைவயிற் கொண்டு புக்கான். 49

நெய்க்கிழி வைக்கப் பட்டார் நெய்ப்பத்தற் கிடத்தப் பட்டார்
புக்குழி யெஃக நாடி யிரும்பினுற் போழப் பட்டார்
மைக்கிழிந் தொழுகுங் கண்ணீர் மாநிலத் துகுக்கப் பட்டார்
கைக்கிழி கொடுக்கப் பட்டார் கலம்பல நல்கப் பட்டார். 50

முதுமரப் பொந்து போல முழுமெயும் புண்க ளுற்றூர்க்
கிதுமருந் தென்ன நல்லா ரிழுதுசேர் கவளம் வைத்துப்
பதுமுகன் பரவை மார்பி னெய்க்கிழி பயிலச் சேர்த்தி
நுதிமயிர்த் துகிற்குப் பாயம் புகுகென நூக்கி னுனே. 51

பார்கெழு பைம்பொன் றன்ருற் பண்ணவ னுருவ மாக்கி
ஊர்கெழு விழவு செய்தாங் குறுபொரு ளுவப்ப நல்கித்
தார்கெழு மின்னு வீசித் தனிவடந் திளைக்கு மார்பன்
போர்கெழு களத்துப் பாவம் புலம்பொடு போக்கி னுனே. 52

செய்தவப் பாவ மெல்லாந் தீர்த்திடுந் தீர்த்தன் பாதம்
எய்திய சேடங் கூவித் திறைஞ்சுபு தொழுது வாழ்த்தி
மையறு மணியிற் செய்த வலம்புரி யதனீர் கொண்டான்
வையக மளிக்க நீண்ட வலம்புரித் தடக்கை யானே. 53

நான்குநூ ருயிரங் குடத்து நல்லன
ஆன்றயிர் பானெயோ டழகி தாநிறைத்
தூன்றிகழ் வேலினுன் வேள்விக் கூர்மருள்
கோன்ரெறுக் காவலன் கொண்டு முன்னினுன். 54

வளைநிற வார்செநெ லரிசிப் பண்டியோ
டளவரு சருக்கரைப் பண்டி யார்ந்தன
பிளவியல் பயறுபெய் பண்டி யுப்புநீர்
விளைவமை பண்டியின் வெறுத்த தாங்கொர்பால். 55

சினைத்துணர் முழவன பலவின் றீங்கனி
கனைத்துவண் டுழல்வன வாழை மாங்கனி
எனைத்துள கிழங்குகாய் குருகொ டேந்திய
சனத்தினுற் றகைத்திடம் பெருது தானொர்பால். 56

மரகத மணிப்பசுங் காய்கொல் வான்குலை
கவர்பழுக் காய்க்குலை கனியக் காவுநீஇ
இவர்தரு மெல்லிலைக் காவு மேந்திய
உவரியாய்ச் சொரிந்திடம் பெருது தானொர்பால், 57

சண்பகந் தமநகந் தமால மல்லிகை
தண்கழு நீரொடு குவளை தாமரை
வண்டின மிசைகொள வாசப் பூச்சுமை
கொண்டவர் குழாம்பொலி வுற்ற தாங்கொர்பால். 58

ஆர்கெழு குறடுசூட் டாழி போன்றவன்
சீர்கெழு வளமனை திளைத்து மாசனம்
கார்கெழு கடலெனக் கலந்த வல்லதூஉம்
பார்கெழு பழுமரப் பறவை யொத்தவே. 59

கையுறை யெழுதினர் கைந்நொந் தேடறுத்
தையென விருப்பமற் றன்ன தாதலான்
வையக மருங்கினின் வாழ்நர் மற்றிவன்
செய்தவ நமக்கிசை கென்னச் சென்றதே. 60

வாலரி கழுவிய வண்ணச் செம்புனல்
காலிய லிவுளியுங் களிறும் ஆழ்ந்தவட்
கோலநீர்க் குவளையு மரையும் பூத்துவண்
டாலிவண் குருகுபாய் தடங்க ளானவே. 61

உடுப்பன துகில்களும் உரைக்கு நானமும்
தொடுத்தன மாலையுங் குழையுஞ் சாந்தமும்
கொடுப்பவர் கொள்பவர் வீழ்த்த பல்கலம்
அடுத்துவிண் பூத்ததோ ரழகின் மிக்கதே. 62

கலங்கழு மரவமுங் கருனை யாக்குவார்
சிலம்பொலி யரவமு மிச்சில் சீப்பவர்
இலங்குபொற் கிண்கிணி யிரங்கு மோசையும்
உலம்புமா லுவர்க்கட லொலியின் மிக்கவே. 63

மூழிவாய் முல்லை மாலை முருகுலாங் குழலி னாளும்
ஊழிவாய்த் தீயொ டொக்கும் ஒளிறுவாள் தடக்கை யானும்
ஆழிவாய் விரலிற் காம னம்பொடு சிலைகை யேந்தத்
தாழிவாய்க் குவளை வாட்கண் தையலார் பரவச் சார்ந்தார். 64

இன்னிய முழங்கி யார்ப்ப ஈண்டெரி திகழ வேதம்
துன்னினர் பலாசிற் செய்த துடுப்பினெய் சொரிந்து வேட்ப
மின்னியல் கலச நன்னீர் சொரிந்தனன் வீர னேற்றான்
முன்னுபு விலங்கு வெள்ளி முளைத்தெழ முருக னன்னான். 65

இட்டவுத் தரிய மின்னு மெரிமணிப் பருமுத் தாரம்
மட்டவிழ் கோதை வெய்ய வருநகில் தாங்க லாற்ரு
நெட்டிருங் கூந்தல் ஆடல் நேர்வளை முன்கை பற்றிக்
கட்டழல் வலங்கொண் டாய்பொற் கட்டில்தான் ஏறி னானே. 66

மந்திரத் தரசன் காதன் மாதரம் பாவை தன்னைக்
கந்துகன் சிறுவன் வேட்ட கடிவினை நொடியின் மற்றோர்
அந்தர விசும்பிற் றேவர்க் கதிபதி யாய கோமான்
இந்திரன் றனக்கு மாகா தென்பது நடந்த தன்றே. 67

அடிமனை பவள மாக அம்பொனால் அலகு சேர்த்தி
முடிமணி யழுத்திச் செய்த மூரிக்காழ் நெற்றி மூழ்கக்
கடிமலர் மாலை நாற்றிக் கம்பல விதானங் கோலி
இடுபுகை மஞ்சிற் சூழ மணவறை யியற்றி னாரே. 68

ஐந்துமூன் றெடுத்த செல்வத் தமளிமூன் றியற்றிப் பூம்பட்
டெந்திர வெழினி வாங்கி யின்முக வாசச் செப்பும்
சந்தனச் சாந்தச் செப்புந் தண்மலர் மாலை பெய்த
இந்திர நீலச் செப்பும் இனையவ ரேந்தி னாரே. 69

கடைந்துபெய் மணிக்கைச் செம்பொற் காசறு தட்டிற் சூழ்ந்து
மிடைந்துபெய் மணிக்கட் பீலி மின்னுசாந் தாற்றிப் பொன்னார்
அடைந்துவீ சால வட்ட மரிவைய ரேந்தி யாற்றத்
தடங்கண்கள் குவளை பூப்பத் தையலோ டாடு மன்றே. 70

இன்னண மொழுகு நாளுள் இளமரக் காவு காண்பான்
பொன்னணி மார்பன் சென்று புகுதலு மொருவன் றோன்றித்
துன்னியோ ரோலை நீட்டித் தொழுதனன் பெயர்ந்து நிற்ப
மன்னிய குருசில் கொண்டு மரபினா னோக்கு கின்றான். 71

உருமுக்கதிர் வேற்கலுழ ஞேலேயுல கென்னும்
பருமைக்குருப் பளிங்கிற்புகழ்ப் பஞ்சிமுழு தடுத்த
திருமிக்குடைச் செல்வன்றிறற் சாமிநனி காண்க
அருமையற னின்பம்பொரு ளாகெனவி டுத்தேன். 72

எள்ளுநர்கள் சாயவெனத் தோளிரண்டு நோக்கி
வெள்ளிமலே முழுதுங்கொடி யெடுத்ததிக லேத்திக்
கள்செய்மலர் மார்பனுறு காப்பிகழ்த லின்றி
உள்ளுபொரு ளெம்முணர்த்தி யன்றியுள வேண்டா. 73

# 7. பெரிய புராணம்

## திருநாவுக்கரசர் புராணம்

திங்களூர் தனில்நின் றுந் திருமறையோர் பின்செல்லப்
பைங்கண்விடைத் தனிப்பாகர் திருப்பழனப் பதிபுகுந்து
தங்குபெருங் காதலொடுந் தம்பெருமான் கழல்சார்ந்து
பொங்கியவன் புறவணங்கி முன்னின் று போற்றிசைப்பார். 1

புடைமாலை மதிக்கண்ணிப் புரிசடையார் பொற்கழற்கீழ்
அடைமாலைச் சீலமுடை அப்பூதி யடிகள்தமை
நடைமாணச் சிறப்பித்து நன்மைபுரி தீந்தமிழின்
தொடைமாலைத் திருப்பதிகச் சொன்மாலை பாடினார். 2

எழும்பணியும் இளம்பிறையும் அணிந்தவரை எம்மருங்குந்
தொழும்பணிமேற் கொண்டருளித் திருச்சோற்றுத் துறைமுதலாத்
தழும்புறுகேண் மையில்நண்ணித் தானங்கள் பலபாடிச்
செழும்பழனத் திறைகோயில் திருத்தொண்டு செய்திருந்தார். 3

சாலநாள் அங்கமர்ந்து தந்தலைமேல் தாள்வைத்த
ஆலமார் மணிமிடற்றார் அணிமலர்ச்சே வடிநினைந்து
சேலுலாம் புனற்பொன்னித் தென்கரையே றிச்சென் று
கோலநீள் மணிமாடத் திருநல்லூர் குறுகினார். 4

அங்கணைந்து தம்பெருமான் அடிவணங்கி ஆராது
பொங்கியவன் பொடுதிளைத்துப் போற்றிசைத்துப் பணிசெயுநாள்
தங்குபெருங் காதலினால் தாமரைமேல் விரிஞ்சனொடு
செங்கண்மால் அறிவரியார் திருவாரூர் தொழநினைந்தார். 5

பெருவாச மலர்ச்சோலைப் பெருவேளூர் பணிந்தேத்தி
முருகாரும் மலர்க்கொன்றை முதல்வனார் பதிபிறவும்
திருவாரும் விளமருடன் சென்றிறைஞ்சி வாகீசர்
மருவாரூர் எரித்தவர்தந் திருவாரூர் வந்தடைந்தார். 6

ஆண்டஅவர செழுந்தருள ஆரூரில் அன்பர்கள்தாம்
நீண்டசடை முடியார்பால் நிறைந்தவருள் பெற்றுடையார்
காண்தகுமா ளிகைமாடங் கவின்சிறந்தோங் கிடவெங்கும்
சேண்திகழ்வீ திகள்பொலியத் திருமலிமங் கலஞ்செய்தார். 7

சூழுந் திருத்தொண்டர் தம்முடன் தோரண வாயில்நண்ணி
வாழி திருநெடுந் தேவா சிரியன்முன் வந்திறைஞ்சி
ஆழி வரைத்திரு மாளிகை வாயில் அவைபுகுந்து
நீள்சுடர் மாமணிப் புற்றுகந் தாரைநேர் கண்டுகொண்டார். 8

கண்டு தொழுது கரசர ணுதி அங்கமெல்லாம்
கொண்ட புளகங்க ளாக எழுந்தன்பு கூரக்கண்கள்
தண்டுளி மாரி பொழியத் திருமூலட் டானர்தம்மைப்
புண்டரி கக்கழல் போற்றித் திருத்தாண் டகம்புனைந்து. 9

காண்ட லேகருத் தாய்நினைந் தென்னுங் கலைப்பதிகம்
தூண்டா விளக்கன்ன சோதிமுன் நின்று துதித்துருகி
ஈண்டு மணிக்கோயில் சூழ வலஞ்செய் திறைஞ்சியன்பு
பூண்ட மனத்தொடு நீள்தரு வாயிற் புறத்தணைந்தார். 10

செய்யமா மணியொளிசூழ் திருமுன்றின் முன்தேவா சிரியன் சார்ந்து
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலும் ஆரூ ராரைக்
கையினுல் தொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ
னேனென்
றெய்தரிய கையறவால் திருப்பதிகம் அருள்செய்தங்
கிருந்தா ரன்றே. 11

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடிவம் மதுர வாக்கில்
சேர்வாகுந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற் றுளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச்
செல்வார். 12

நீடுபுகழ்த் திருவாரூர் நிலவுமணிப் புற்றிடங்கொள் நித்தர் தம்மைக்
கூடியவன் பொடுகாலங் களிலணைந்து கும்பிட்டுக் கோதில்
வாய்மைப்
பாடிளம்பூ தத்தினுன் எனும்பதிகம் முதலான பலவும் பாடி
நாடியஆர் வம்பெருக நைந்துமனங் கரைந்துருகி நயந்துசெல்வார். ()

நான்மறைநூற் பெறுவாய்மை நமிநந்தி அடிகள்திருத் தொண்டின்
நன்மைப்
பான்மைநிலை யாலவரைப் பரமர்திரு விருத்தத்துள் வைத்துப் பாடித்
தேனமருங் கொன்றையார் திருவாரூர் அரனெறியில் திகழுந் தன்மை
ஆனதிற மும்போற்றி அணிவீதிப் பணிசெய்தங் கமரும் நாளில். 14

நீராருஞ் சடைமுடியார் நிலவுதிரு வலிவலமும் நினைந்து சென்று
வாராரு நகில்மங்கை உமைபங்கர் கழல்பணிந்து மகிழ்ந்து பாடிக்
காராருங் கறைக்கண்டர் கீழ்வேளூர் கன்றுப்பூர் கலந்து பாடி
ஆராத காதலினால் திருவாரூர் தனில்மீண்டும் அணைந்தார்
அன்றே. 15

மேவுதிரு வாதிரைநாள் வீதிவிடங் கப்பெருமாள் பவனி தன்னில்
தேவருடன் முனிவர்கள்முன் சேவிக்கும் அடியார்க ளுடன்சே வித்து
மூவுலகுங் களிகூர வரும்பெருமை முறைமையெலாங் கண்டு
போற்றி
நாவினுக்குத் தனியரசர் நயக்குநாள் நம்பர்திரு அருளி னாலே. 16

திருப்புகலூர் அமர்ந்தருளுஞ் சிவபெருமான் சேவடிகள் கும்பிட்
டேத்தும்
விருப்புடைய உள்ளத்து மேவியெழுங் காதல்புரி வேட்கை கூர
ஒருப்படுவார் திருவாரூர் ஒருவாறு தொழுதகன்றங் குள்ளம்
வைத்துப்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர் பதிபிறவும் டணிந்து
போந்தார். 17

அந்நாளில் ஆளுடைய பிள்ளையார் திருப்புகலி அதன்கண் நின்றும்
பன்னாகப் பூணணிவார் பயின்றதிருப் பதிபலவும் பணிந்து செல்வார்
புன்னாக மணங்கமழும் பூம்புகலூர் வந்திறைஞ்சிப் பொருளில் சீர்த்தி
மின்னாரும் புரிமுந்நூல் முருகனார் திருமடத்தில் மேவுங் காலை. 18

ஆண்டவர செழுந்தருளி அணியாரூர் மணிப்புற்றில் அமர்ந்துவாழும்
நீண்டசுடர் மாமணியைக் கும்பிட்டு நீடுதிருப் புகலூர் நோக்கி
மீண்டருளி னாரென்று கேட்டருளி எதிர்கொள்ளும் விருப்பி னேடும்
ஈண்டுபெருந் தொண்டர்குழாம் புடைசூழ எழுந்தருளி எதிரே
சென்றார். 19

கரண்டமலி தடம்பொய்கைக் காழியர்கோன் எதிரணையுங்
காதல் கேட்டு
வரன்றுமணிப் புனற்புகலூர் நேர்நோக்கி வாகீசர் மகிழ்ந்து வந்தார்
திரண்டுவருந் திருநீற்றுத் தொண்டர்குழாம் இருதிறமும் சேர்ந்த
போதில்
இரண்டுநில வின்கடல்கள் ஒன்றாகி அணைந்தனபோல் இசைந்த
அன்றே. 20

திருநாவுக் கரசர்எதிர் சென்றிறைஞ்சிச் சிரபுரத்துத் தெய்வ வாய்மைப்
பெருஞான சம்பந்தப் பிள்ளையார் எதிர்வணங்கி "அப்ப ரேநீர்
வருநாளில் திருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீர்" என்று கூற
அருநாமத் தஞ்செழுத்தும் பயில்வாய்மை அவருமெதிர் அருளிச் செய்தார். 21

"சித்த நிலாவுந் தெனதிரு ஆரூர் நகராளும்
மைத்தழை கண்டர் ஆதிரை நாளின் மகிழ்செல்வம்
இத்தகை மைத்தென் றென்மொழி கேன்" என் றருள்செய்தார்
"முத்து விதான மணிப்பொற் கவரி" மொழிமாலை. 22

அம்மொழி மாலைச் செந்தமிழ் கேளா அணிசண்பை
மைம்மலர் கண்டத் தண்டர் பிரானுர் மகனுரும்
"கொய்ம்மலர் வாவித் தென்திரு ஆரூர் கும்பிட்டே
உம்முடன் வந்திங் குடனமர் வேன்" என் றுரைசெய்தார். 23

மாமதில் ஆரூர் மன்னரை அங்கு வணங்கச்செந்
தாமரை யோடைச் சண்பையர் நாதன் தானேக
நாமரு சொல்லின் நாதரும் ஆர்வத் தொடுபுக்கார்
பூமலர் வாசத் தணைபண் சூழும் புகலூரில். 24

அத்திரு மூதூர் மேவிய நாவுக் கரசுந்தம்
சித்த நிறைந்தே அன்பு தெவிட்டுந் தெளிவெள்ளம்
மொய்த்திழி தாரைக் கண்பொழி நீர்மெய்ம் முழுதாரப்
பைத்தலை நாகப் பூணணி வாரைப் பணிவுற்றுர். 25

தேவர் பிரானைத் தென்புக லூர்மன் னியதேனைப்
பாவியல் மாலைச் செந்தமிழ் பாடிப் பரிவோடு
மேவிய காலந் தோறும் விருப்பிற் கும்பிட்டே
ஓவுதல் ஓவுந் திருப்பணி செய்தங் குறைகின்றுர். 26

அப்படிச் சின்னுள் சென்றபின் ஆரூர் நகராளும்
துப்புறழ் வேணிக் கண்ணுத லாரைத் தொழுதிப்பால்
மெய்ப்பொருள் ஞானம் பெற்றவர் வேணு புரத்தெங்கள்
பொற்புரி முந்நூல் மார்பரும் வந்தார் புகலூரில். 27

பிள்ளையார் எழுந்தருளப் பெருவிருப்பால் வாகீசர்
உள்ளமகிழ்ந் தெதிர்கொண்டங் குடனுறையு நாளின்கண்
வள்ளலார் சிறுத்தொண்டர் மற்றவர்பால் எழுந்தருள
எள்ளருஞ்சீர் நீலநக்கர் தாமுமெழுந் தருளினர். 28

ஆங்கணையும் அவர்களுடன் அப்பதியில் அந்தணராம்
ஓங்குபுகழ் முருகனர் திருமடத்தி லுடனுகப்
பாங்கில்வருஞ் சீரடியார் பலருமுடன் பயில்கேண்மை
நீங்கரிய திருத்தொண்டின் நிலையுணர்ந்து நிகழ்கின்றார். 29

திருப்பதிகச் செழுந்தமிழின் திறம்போற்றி மகிழ்வுற்றுப்
பொருப்பரையன் மடப்பாவை இடப்பாகர் பொற்றாளில்
விருப்புடைய திருத்தொண்டர் பெருமையினை விரித்துரைத்தங்
கொருப்படுசிந் தையினார்கள் உடனுறைவின் பயன்பெற்றார். 30

அந்நாளில் தமக்கேற்ற திருத்தொண்டின் நெறியாற்ற
மின்னார்செஞ் சடையண்ணல் மேவுபதி எனைப்பலவும்
முன்னாகச் சென்றேத்தி முதல்வனருள் தொழுவதற்குப்
பொன்னாரு மணிமாடப் பூம்புகலூர் தொழுதகன்றார். 31

திருநீல நக்கடிகள் சிறுத்தொண்டர் முருகனர்
பெருநீர்மை அடியார்கள் பிறரும்விடை கொண்டேக
ஒருநீர்மை மனத்துடைய பிள்ளையா ருடனரசும்
வருநீர்செஞ் சடைக்கரந்தார் திருவம்பர் வணங்கினார். 32

செங்குமுத மலர்வாவித் திருக்கடவூர் அணைந்தருளிப்
பொங்கியவெங் கூற்றடர்த்த பொன்னடிகள் தொழுதேத்திக்
குங்குலியக் கலயனர் திருமடத்தில் குறைவறுப்ப
அங்கவர்பால் சிவனடியா ருடனமுது செய்தார்கள். 33

சீர்மன்னுந் திருக்கடவூர்த் திருமயான மும்வணங்கி
ஏர்மன்னும் இன்னிசைப்பாப் பலபாடி இனிதமர்ந்து
கார்மன்னுங் கறைக்கண்டர் கழலிணைகள் தொழுதகன்று
தேர்மன்னும் மணிவீதித் திருவாங்கூர் சென்றணைந்தார். 34

சார்ந்தார்தம் புகலிடத்தைத் தான்தோன்றி மாடத்துக்
கூர்ந்தார்வம் உறப்பணிந்து கோதில்தமிழ்த் தொடைபுனைந்து
வார்ந்தாடும் சடையார்தம் பதிபலவும் வணங்கியுடன்
சேர்ந்தார்கள் தம்பெருமான் திருவீழி மிழலையினை. 35

வீழி மிழலை வந்தணைய மேவு நாவுக் கரசினையும்
காழி ஞானப் பிள்ளையையும் கலந்த உள்ளக் காதலினால்
ஆழி வலவன் அறியாத அடியார் அடியார் அவர்களுடன்
வாழி மறையோர் எதிர்கொண்டு வணங்க வணங்கி
உள்புக்கார். 36

மாட வீதி அலங்கரித்து மறையோர் வாயின் மணிவிளக்கு
நீடு கதலி தழைப்பூகம் நிரைத்து நிறைபொற் குடமெடுத்துப்
பீடு பெருகும் வாகீசர் பிள்ளை யாரும் தொண்டர்களும்
கூட மகிழ்ந்து விண்ணிழிந்த கோயில் வாயில் சென்றணைந்தார். 37

சென்றுட் புகுந்து திருவீழி அமர்ந்த செங்கனகக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் வலமா வந்துதிரு
முன்றில் வணங்கி முன்னெய்தி முக்கட் செக்கர்ச் சடைமவுலி
வென்றி விடையார் சேவடிக்கீழ் விழுந்தார் எழுந்தார்
விம்மினார். 38

கைகள் குவித்துக் கழல்போற்றிக் கலந்த அன்பு கரைந்துருக
மெய்யில் வழியும் கண்ணருவி விரவப் பரவுஞ் சொன்மாலை
''செய்ய சடையார் தமைச்சேரார் தீங்கு நெறிசேர் கின்றார்''என்
றுய்யு நெறித்தாண் டகமொழிந்தாங் கொழியாக் காதல்
சிறந்தோங்க. 39

முன்னாள் அயனுந் திருமாலும் முடிவும் முதலும் காணாத
பொன்னார் மேனி மணிவெற்பைப் பூநீர் மிழலை யினில்போற்றிப்
பன்னாள் பிரியா நிலைமையினால் பயிலக் கும்பிட் டிருப்பாராய்
அந்நாள் மறையோர் திருப்பதியில் இருந்தார் மெய்ம்மை
அருந்தவர்கள். 40

சீரின் விளங்குந் திருத்தொண்டர் இருந்து சிலநாள்
சென்றதற்பின்
மாரி சுருங்கி வளம்பொன்னி நதியும் பருவ மாறுதலும்
நீரின் இயன்ற உணவருகி நிலவும் பலமன் னுயிர்களெலாம்
பாரின் மலிந்த இலம்பாட்டில் படர்கூர் வறுமை பரந்ததால். 41

வையம் எங்கும் வற்கடமாய்ச் செல்ல உலகோர் வருத்தமுற
நையும் நாளில் பிள்ளையார் தமக்கும் நாவுக் கரசருக்கும்
கையில் மானும் மழுவுமுடன் காணக் கனவில் எழுந்தருளிச்
செய்ய சடையார் திருவீழி மிழலை யுடையார் அருள்செய்வார். 42

"கால நிலைமை யால்உங்கள் கருத்தில் வாட்ட முறீர்எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க் களிக்க அளிக்கின் றோம்"என்று
கோலங் காண எழுந்தருளிக் குலவும் பெருமை இருவர்க்கும்
ஞாலம் அறியப் படிக்காசு வைத்தார் மிழலை நாயகனார். 43

விண்ணின் றிழிந்த விமானத்தின் கிழக்கும் மேற்கும் பீடத்தில்
அண்ணல் புகலி ஆண்டகையார் தமக்கும் ஆண்ட அரசினுக்கும்
நண்ணும் நாள்கள் தொறுங்காசு படிவைத் தருள நானிலத்தில்
எண்ணில் அடியா ருடனமுது செய்தங் கிருந்தார் இருவர்களும். 44

அல்லார் கண்டத் தண்டர்பிரான் அருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரமன் அடியா ரானார்கள்
எல்லாம் எய்தி உண்கவென இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்
திட்டார். 45

ஈசர் மிழலை இறையவர்பால் இமையப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாந் திருமா மகனார் ஆதலினால்
காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகும் அடிமையினால்
வாசி இல்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர். 46

ஆறு சடைமேல் அணிந்தருளும் அண்ணல் வைத்த படிக்காசால்
ஈறி லாத பொருளுடைய இருவ ருடைய திருமடங்கள்
சோறு நாளுந் தொண்டர்மகிழ்ந் துண்ண உண்ணத் தொலையாதே
ஏறு பெருமை புவிபோற்ற இன்புற் றிருக்கும் அந்நாளில். 47

காலந் தவறு தீர்ந்தெங்கும் கலிவான் பொழிந்த புனல்கலந்து
ஞாலம் எல்லாம் குளிர்தூங்கி உணவு பெருகி நலஞ்சிறப்ப
மூல அன்பர் இருவர்களும் மொழிமா லைகளும் பலசாத்தி
நீல கண்டர் உறைபதிகள் பிறவும் வணங்க நினைவுற்றார். 48

வாய்ந்த மிழலை மாமணியை வணங்கிப் பிரியா விடைகொண்டு
பூந்தண் புனல்சூழ் வாஞ்சியத்தைப் போற்றிப் புனிதர் வாழ்பதிகள்
ஏய்ந்த அன்பி னாலிறைஞ்சி இசைவண் தமிழ்கள் புனைந்துபோய்ச்
சேர்ந்தார் செல்வத் திருமறைக்கா டெல்லை இல்லாச் சீர்த்தியினார். 49

மன்றல் விரவு மலர்ப்புன்னை மணஞ்சூழ் சோலை உப்பளத்தின்
முன்றில் தோறுஞ் சிறுமடவார் முத்தங் கொழிக்கும் மறைக்காட்டுக்
குன்ற வில்லி யார்மகிழ்ந்த கோயில் புகுந்து வலங்கொண்டு
சென்று சேர்ந்தார் தென்புகலிக் கோவும் அரசுந் திருமுன்பு. 50

பரவை ஓதக் கழிக்கானற் பாங்கு நெருங்கும் அப்பதியில்
அரவச் சடையந் தணனுரை அகில மறைகள் அர்ச்சனைசெய்
துரவக் கதவந் திருக்காப்புச் செய்த அந்நாள் முதலிந்நாள்
வரையும் அடைந்தே நிற்கின்ற மணிநீள் வாயில் வணங்குவார். 51

தொல்லை வேதந் திருக்காப்புச் செய்த வாயில் தொடர்வகற்ற
வல்ல அன்பர் அணையாமை மருங்கோர் வாயில் வழியெய்தி
அல்லல் தீர்ப்பார் தமையருச்சிப் பார்கள் தொழுவார் ஆம்படிகண்
டெல்லை இல்லாப் பெரும்புகழார் இதனை அங்குக் கேட்டறிந்தார். 52

ஆங்கப் பரிசை அறிந்தருளி ஆழித் தோணி புரத்தரசர்
ஓங்கு வேதம் அருச்சனைசெய் உம்பர் பிரானை உள்புக்குத்
"தேங்கா திருவோம் நேர்இறைஞ்சத் திருமுன் கதவந் திருக்காப்பு
நீங்கப் பாடும் அப்பர்" என நீடுந் திருநா வுக்கரசர். 53

உண்ணீர் மையினால் பிள்ளையார் உரைசெய் தருள அதனாலே
" பண்ணி னேரு மொழியாள் " என் றெடுத்துப் பாடப் பயன்தூய்ப்பான்
தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்கத் திருக்கடைக்காப்
"பெண்ணீர் இரக்கம் ஒன்றில்லீர்" என் றுபாடி இறைஞ்சுதலும். 54

வேத வனத்தின் மெய்ப்பொருளின் அருளால் விளங்கு மணிக்கதவம்
காதல் அன்பர் முன்புதிருக் காப்பு நீங்கக் கலைமொழிக்கு
நாதர் ஞான முனிவருடன் தொழுது விழுந்தார் ஞாலத்துள்
ஓத ஒலியின் மிக்கெழுந்த தும்பர் ஆர்ப்பும் மறையொலியும். 55

அன்பர் ஈட்டங் களிசிறப்ப ஆண்ட அரசுஞ் சிவக்கன் றும்
இன்ப வெள்ளத் திடைமூழ்கி எழுந்துள் புகுந்த தம்பெருமான்
முன்பு பணிந்து போற்றிசைத்துப் பரவி மொழிமா லைகள்பாடி
என்பு கரைய உள்ளுருகி இறைஞ்சி அரிதிற் புறத்தணைந்தார். 56

புறம்பு நின் று வாகீசர் புனிதர் அருளால் இக்கதவம்
திறந்தும் அடைத்தும் செல்லுநெறி திருந்த மலையாள் திருமுலையில்
கறந்த ஞானங் குழைத்தமுது செய்த புகலிக் கவுணியரை
" நிறைந்த கதவம் அடைக்கும்வரை நீரும் பாடி அருளும் "என. 57

சண்பை ஆளுந் தமிழ்விரகர் தாமுந் திருநா வுக்கரசர்
பண்பின் மொழிந்த உரைகொண்டு பதிகம் பாடும் அவ்வளவில்
கண்பொற் பமைந்த நுதற்காள கண்டர் அருளால் கடிதுடனே
திண்பொற் கதவந் திருக்காப்புச் செய்த தெடுத்த திருப்பாட்டில். 58

அதுகண் டுடைய பிள்ளையார் தாமும் ஆண்ட அரசுமகிழ்ந்
"திதுநம் பெருமான் அருள்செய்யப் பெற்ேறும்" என்றங்
கிறைஞ்சியபின்
பதிகம் நிரம்பப் பிள்ளையார் பாடித் தொழுது பணிவுற்ருர்
எதிர்பொற் றிருவா யிலின்வழக்கம் என்றும் நிகழ்ச்சி எய்தியதால். 59

அங்கு நிகழ்ந்த அச்செயல்கண் டடியார் எல்லாம் அதிசயத்துப்
பொங்கு புளகம் எய்திடமெய் பொழியுங் கண்ணீர் பரந்திழிய
எங்கும் நிகரொன் றில்லாத இருவர் பாதம் இறைஞ்சினர்
நங்கள் புகலிப் பெருந்தகையும் அரசும் மடத்தில் நண்ணியபின். 60

"அரிதில் திறக்கத் தாம்பாட அடைக்க அவர்பா டிடஎளிமை
கருதி நம்பர் திருவுள்ளம் அறியா தயர்ந்தேன்" எனக்கவன்று
பெரிதும் அஞ்சித் திருமடத்தில் ஒருபால் அணைந்து பேழ்கணித்து
மருவும் உணர்வில் துயில்கொண்டார் வாய்மை திறம்பா வாகீசர். 61

மன்னுஞ் செல்வ மறைக்காட்டு மணியின் பாதம் மனத்தின்கண்
உன்னித் துயிலும் பொழுதின்கண் உமையோர் பாகம் உடையவர்தாம்
பொன்னின் மேனி வெண்ணீறு புனைந்த கோலப் பொலிவினெடுந்
துன்னி அவர்க்கு "வாய்மூரில் இருப்போந் தொடர வா" என்ருர். 62

"போதம் நிகழ வாவென்று போனர் என்கொல்" எனப்பாடி
"ஈதெம் பெருமான் அருளாகில் யானும் போவேன்" என்றெழுந்து
வேத வனத்தைப் புறகிட்டு விரைந்து போக அவர்முன்னே
ஆதி மூர்த்தி முன்காட்டும் அவ்வே டத்தால் எழுந்தருள. 63

சீரார் பதியி னின்றெழுந்து செல்லுந் திருநா வுக்கரசர்
ஆரா அன்பில் ஆரமுதம் உண்ண எய்தா வாறேபோல்
நீரார் சடையார் எழுந்தருள நெடிது பின்பு செல்லுமவர்
பேரா ளரைமுன் தொடர்ந்தணையப் பெறுவார் எய்தப்
பெற்றிலரால். 64

அன்ன வண்ணம் எழுந்தருளி அணித்தே காட்சி கொடுப்பார்போல்
பொன்னின் கோயில் ஒன்றெதிரே காட்டி அதனுட் புக்கருளத்
துன்னுந் தொண்டர் அம்மருங்கு விரைந்து தொடரப் போந்தபடி
மன்னும் புகலி வள்ளலார் தாமுங் கேட்டு வந்தணைந்தார். 65

"அழைத்துக் கொடுபோந் தணியார்போல் காட்டி மறைந்தார்" என அயர்ந்து
"பிழைத்துச் செவ்வி அறியாதே திறப்பித் தேனுக் கேயல்லால்
உழைத்தா மொளித்தால் கதவந்தொண் டுறைக்கப்பாடி அடைப்பித்த
தழைத்த மொழியார் உப்பாலார் தாமிங் கெப்பால் மறைவதென", 66

மாட நீடு திருப்புகலி மன்ன ரவர்க்கு மாலயனும்
நேடி இன்னங் காணுதார் நேரே காட்சி கொடுத்தருள
ஆடல் கண்டு பணிந்தேத்தி அரசுங் காணக் காட்டுதலும்
"பாட அடியார்" என்றெடுத்துப் பரமர் தம்மைப் பாடினுர். 67

பாடும் தமிழ்மா லைகள்கொண்டு பரமர் தாமும் எழுந்தருள
நீடுந் திருவாய் மூரடைந்து நிலவுங் கோயில் வலஞ்செய்து
சூடும் பிறையார் பெருந்தொண்டர் தொழுது போற்றித் துதிசெய்து
நாடுங் காதல் வளர்ந்தோங்க நயந்தந் நகரில் உடனுறைந்தார். 68

ஆண்ட அரசும் பிள்ளையா ருடனே அங்கண் இனிதமர்ந்து
பூண்ட காதல் பொங்கியெழ வாய்மூர் அடிகள் அடிபோற்றி
மூண்ட அன்பின் மொழிமாலை சாத்தி ஞான முனிவரொடு
மீண்டு வந்து திருமறைக்கா டெய்தி விமலர் தாள்பணிந்தார். 69

ஆதி முதல்வர் தமைப்பணிந்தங் கான பணிசெய் தமருநாள்
சீத மதிவெண் குடைவளவர் மகளார் தென்னன் தேவியாங்
கோதில் குணத்துப் பாண்டிமா தேவி யார்முன் குலச்சிறையார்
போத விட்டார் சிலர்வந்தார் புகலி வேந்தர் தமைக்காண. 70

வந்து சிவனுர் திருமறைக்கா டெய்தி மன்னு வேணுபுரி
அந்த ணுளர் தமக்கறிவித் தவர்பால் எய்தி அடிவணங்கச்
சிந்தை மகிழ்ந்து தீதின்மை வினவத் "தீங்கும் உளவாமோ
இந்த உலகம் உயவந்தீர் இருதாள் நினைவார்க்" கென்றுரைப்பார். 71

மற்றப் பதிகள் முதலான மருங்குள் ளனவுங் கைதொழுது
பொற்புற் றமைந்த திருப்பணிகள் செய்து பதிகங் கொடுபோற்றி
உற்ற அருளால் காவிரியை ஏறி ஒன்னுர் புரமெரியச்
செற்ற சிலையார் திருப்பைஞ்ஞீ லியினைச் சென்று சேர்கின்றுர். 72

பழிபோம் பொழுது மிகவிளைத்து வருத்தம் உறநீர் வேட்கையொடும்
அழிவாம் பசிவந் தணைந்திடவும் அதற்குச் சித்தம் அலையாதே
மொழிவேந் தருமுன் எழுந்தருள முருகார் சோலைப் பைஞ்ஞீலி
விழியேந் தியநெற் றியனுர்தந் தொண்டர் வருத்தம் மீட்பாராய். 73

காவும் குளமும் முன்சமைத்துக் காட்டி வழிபோங் கருத்தினால்
மேவுந் திருநீற் றந்தணராய் விரும்பும் பொதிசோ றுங்கொண்டு
நாவின் தனிமன் னவர்க்கெதிரே நண்ணி யிருந்தார் விண்ணின்மேல்
தாவும் புள்ளும் மண்கிழிக்குந் தனிஏ னமுங்காண் பரியவர்தாம். 74

அங்கண் இருந்த மறையவர்பால் ஆண்ட அரசும் எழுந்தருள
வெங்கண் விடைவே தியர்நோக்கி "மிகவும் வழிவந் திளைத்திருந்தீர்
இங்கென் பாலே பொதிசோறுண் டிதனை உண்டு தண்ணீரிப்
பொங்கு குளத்தில் குடித்திளைப்புப் போக்கிப் போவீர்" எனப்
புகன்றார். 75

நண்ணுந் திருநா வுக்கரசர் நம்பர் அருளென் றறிந்தார்போல்
"உண்ணும்" என்று திருமறையோர் உரைத்துப் பொதிசோ
றளித்தலுமே
எண்ண நினையா தெதிர்வாங்கி இனிதா அமுது செய்தினிய
தண்ணீர் அமுது செய்தருளித் தூய்மை செய்து
தளர்வொழிந்தார். 76

எய்ப்பு நீங்கி நின்றவரை நோக்கி இருந்த மறையவனார்
"அப்பால் எங்கு நீர்போவ" தென்றார் அரசும் அவர்க்கெதிரே
செப்பு வார்"யான் திருப்பைஞ்ஞீ லிக்குப் போவ" தென் றுரைப்ப
ஒப்பி லாரும் யானங்குப்" போகின் றேனென் றுடன்போந்தார். 77

கூட வந்து மறையவனார் திருப்பைஞ் ஞீலி குறுகியிட
வேடம் அவர்முன் மறைத்தலுமே மெய்ம்மைத் தவத்து மேலவர்தாம்
"ஆடல் புரிந்தார் அடியேனைப் பொருளா அளித்த கருணை "எனப்
பாடல் புரிந்து விழுந்தெழுந்து கண்ணீர் மாரி பயில்வித்தார். 78

நாதர் மருவுந் திருவண்ணா மலையை நாடிப் பதிபலவும்
காதல் கூரச் சென்றிறைஞ்சிக் கலந்த இசைவண் தமிழ்பாடி
மாதொர் பாகர் அருளாலே வடபால் நோக்கி வாகீசர்
ஆதி தேவர் அமர்ந்ததிரு வண்ணா மலையை நண்ணினார். 79

அண்ணா மலைமேல் அணிமலையை ஆரா அன்பின் அடியவர்தங்
கண்ணார் அமுதை விண்ணோரைக் காக்கக் கடலில் வந்தெழுந்த
உண்ணா நஞ்சம் உண்டானைக் கும்பிட் டுருகுஞ் சிந்தையுடன்
பண்ணார் பதிகத் தமிழ்பாடிப் பணிந்து பரவிப் பணிசெய்தார், 80

# 8. கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்

### நகர்நீங்கு படலம்

கேட்டா னிளையோன் கிளர்ஞாலம் வரத்தி னாலே
மீட்டா ளளித்தாள் வனந்தம்முனை வெம்மை முற்றத்
தீட்டாத வேற்கட் சிறுதாயென யாவ ராலு
மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெ ழுந்தான். 1

கண்ணிற் கடைத்தீயுக நெற்றியிற் கற்றை நாற
விண்ணிற் சுடருங்கெட மெய்யினி னீர்வி ரிப்ப
வுண்ணிற்கு முயிர்ப்பெனு மூதை பிறக்க நின்ற
வண்ணற் பெரியோன் றனதாதியின் மூர்த்தி யொத்தான். 2

சிங்கக் குருளைக்கிடு தீஞ்சுவை யூனை நாயின்
வெங்கட் சிறுகுட்டனை யூட்ட விரும்பி னாளே
நங்கைக் கறிவின்றிற நன்றிது நன்றி தென்னுக்
கங்கைக் கிறைவன் கமலக்கை புடைத்து நக்கான். 3

சுற்றுார் மணியின் வடிவாள்புடை தோன்ற வார்த்து
விற்றுங்கி வாளிப் பெரும்புட்டில் புறத்து வீக்கிப்
பற்றுார்ந்த செம்பொற் கவசம்பனி மேரு வாங்கொர்
புற்று மெனவோங்கிய தோளொடு மார்பு போர்க்க. 4

அடியிற்சுடர் பொற்கழ லார்கலி நாண வார்ப்பப்
பொடியிற் றடவுஞ்சிறு நாண்பெறும் பூச லோசை
யிடியிற் றொடரக் கடலேழு மடுத்திஞ் ஞால
முடிவிற் குமுறும் மழைமும்மையின் மேன்மு ழங்க. 5

வானுந் நிலனும் முதலீறில் வரம்பில் பூத
மேனின்று கீழ்காறும் விரிந்தன வீழ்வ போலத்
தானுந் தனதம்முனு மல்லது மும்மை ஞாலத்
தூனும் முயிரும் முடையார்க ளுடைந்தொ துங்க. 6

புவிப்பாவை பரங்கெடப் போரில்வந் தோரை யெல்லா
மவிப்பானு மவித்தவ ராக்கையை யண்ட முற்றக்
குவிப்பானு மின்றேயென் கோவினைக் கொற்ற மௌலி
கவிப்பானு நின்றேனிது காக்குநர் காக்க வென்றான். 7

விண்ணுட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர் மற்று
மெண்ணுட்டவர் யாவரு நிற்கவொர் மூவ ராகி
மண்ணுட்டுநர் காட்டுநர் வீட்டுநர் வந்த போதும்
பெண்ணுட்ட மொட்டேனினிப் பேருல கத்து ளென்னு. 8

காலைக்கதி ரோன்நடு வுற்றதொர் வெம்மை காட்டி
ஞாலத்தவர் கோமக னங்க ரத்து நாப்பண்
மாலைச்சிக ரத்தனி மந்தர மேரு முந்தை
வேலைத்திரி கின்றது போற்றிரி கின்ற வேலை. 9

வேற்றுக்கொடி யாள்விளை வித்த வினைக்கு விம்மித்
தேற்றத்தெரி யாதயர் சிற்றவை பாலி ருந்தா
னுற்றற்றுணைத் தம்பிதன் விற்புய லண்ட கோளங்
கீற்றெருத்துடை யப்படு நாணுரு மேறு கேட்டான். 10

வீருக்கிய பொற்கலன் வில்லிட ஆர மின்ன
மாருத்தனிச் சொற்றுளி மாரிவ ழங்கி வந்தான்
காருக்க நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கு
மாருக்கன லாற்றுமொ ரஞ்சன மேக மென்ன. 11

மின்னுெத்த சீற்றக் கனல்விட்டு விளங்க நின்ற
பொன்னுெத்த மேனிப் புயலொத்த தடக்கை யானை
யென்னத்த வென்னீ யிறையேனு முனிந்தி லாதாய்
சன்னத்த னுகித் தனுவேந்துதற் கேது வென்றுன். 12

மெய்யைச்சிதை வித்துநின் மேன்முறை நீத்த நெஞ்ச
மையிற்கரி யாளெதிர் நின்னையும் மௌலி சூட்டல்
செய்யக்கரு தித்தடை செய்குநர் தேவ ரேனுந்
துய்யைச்சுடு வெங்கன லிற்சுடு வான்று ணிந்தேன். 13

வலக்கார்முக மென்கைய தாகவவ் வானு ளோரும்
விலக்காரவர் வந்துவி லக்கினு மென்கை வாளிக்
கிலக்காவெரி வித்துல கேழினெு டேழு மன்னர்
குலக்காவலு மின்றுனக் கியான்றரக் கோடி யென்றுன். 14

இளையானிது கூற விராம னியைந்த நீதி
வளையாவரு நன்னெறி நின்னறி வாகு மன்றே
யுளையாவறம் வற்றிட வூழ்வழு வுற்ற சீற்றம்
விளையாதநி லத்துனக் கெங்ஙன் விளைந்த தென்றுன். 15

நீண்டானது ரைத்தலு நித்திலந் தோன்ற நக்குச்
சேண்டான்ருடர் மாநில நின்னதென் றுந்தை செப்பப்
பூண்டாய்பகை யாலிழந் தேவனம் போதி யென்ருல்
யாண்டோவடி யேற்கினிச் சீற்ற மடுப்ப தென்ருன். 16

நின்கட்பரி வில்லவர் நீள்வனத் துன்னே நீக்கப்
புன்கட்பொறி யாக்கை பொறுத்துயிர் போற்று கேனே
வென்கட்புல முன்னுனக் கீந்துவைத் தில்லை யென்ற
வன்கட்புலந் தாங்கிய மன்னவன் போல வென்ருன். 17

என்றென்றறி வித்திளே யோனி தியம்பி டாமுன்
கன்ருென்றுமா விற்பல யோனியுங் காத்த நேமி
வன்றிண்சிலைக் கைம்மனு வென்னும் வயங்கு சீர்த்திக்
குன்ருென்றுதோ ளான்மரு மானிவை கூற லுற்ருன். 18

பின்குற்ற மன்னும்பயக் கும்மர சென்றல் பேணேன்
முன்கொற்ற மன்னன்முடி கொள்கெனக் கொள்ள மூண்ட
தென்குற்ற மன்ருேவிகன் மன்னவன் குற்றம் யாதோ
மின்குற் ருெளிரும்வெயி நீக்கொட மைந்த வேலோய். 19

நதியின் பிழையன்று நறும்புன லின்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாண்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீயிதற் கென்னே வெகுண்ட தென்ருன். 20

உதிக்கும் முலையுள்ளூறு தீயென வூதை பொங்கக்
கொதிக்கும் மனமெங்ஙன மாற்றுவென் கோளி ழைத்தாள்
மதிக்கும் மதியாய்முதல் வானவர்க் கும்வ லீஇதாம்
விதிக்கும் விதியாகுமென் விற்ருெழில் காண்டி யென்ருன். 21

ஆய்தந்தவ னவ்வுரை கூறலு மைய நின்றன்
வாய்தந்தன கூறுதி யோமறை தந்த நாவா
னீதந்த தன்றேநெறி யோர்கணி லாத தீன்ற
தாய்தந்தை யென்ருலவர் மேற்சலிக் கின்ற தென்னே. 22

நற்ருதையு நீதனி நாயக னீவ யிற்றிற்
பெற்ருயுநீ யேபிற ரில்லைபி றர்க்கு நல்கக்
கற்ருயிது காணுதி யின்றெனக் கைம்ம றித்தான்
முற்ருமதி யம்மிலைந் தான்முனிந் தானே யன்னுன். 23

வரதன்பகர் வான்வரம் பெற்றவ டானிவ் வையஞ்
சரதம்முடை யாளவ ளென்றனித் தாதை செப்பப்
பரதன்பெறு வானினி யான்படைக் கின்ற செல்வம்
விரதம்மிதி னல்லது வேறினி யாவ தென்ருன். 24

ஆன்ருன்பகர் வான்பினு மையவிவ் வைய மையற்
ருேன்ருநெறி வாழ்துணைத் தம்பியைப் போர்தொ லைத்தோ
சான்ருேர்புகழ் நற்றனித் தாதையை வாதை கொண்டோ
ஈன்ருளைவென் ருேவினி யிக்கதந் தீர்வ தென்ருன். 25

செல்லுஞ்சொல்வல் லானெதிர் தம்பியுந் தெவ்வர் சொல்லுஞ்
சொல்லுஞ்சுமந் தேனிரு தோளெனச் சோம்பி யோங்குங்
கல்லுஞ்சுமந் தேன்கணைப் புட்டிலுங் கட்ட மைந்த
வில்லுஞ்சுமக் கப்பிறந் தேன்வெகுண் டென்னை யென்ருன். 26

நன்சொற் கடந்தாண்டெனை நாளும் வளர்த்த தாதை
தன்சொற் கடந்தெற்கர சாள்வது தக்க தன்ரு
லென்சொற் கடந்தாலுனக் கியாதுள தீன மென்ருன்
தென்சொற் கடந்தான்வட சொற்கலைக் கெல்லை தேர்ந்தான். 27

சீற்றந் துறந்தானெதிர் நின்றுதெ ரிந்து செப்பு
மாற்றந் துறந்தான்மறை நான்கென வாங்கல் செல்லா
நாற்றெண் டிரைவேலையி னம்பித ஞணை யாலே
யேற்றந் தொடங்காக்கட லிற்றணி வெய்தி நின்ருன். 28

அன்ஞன் றனையையனு மாதியொ டந்த மென்று
தன்ஞ லுமளப்பருந் தானுந்தன் பாங்கர் நின்ற
பொன்மா னுரியானுந் தழீஇயெனப் புல்லிப் பின்னைச்
சொன்மாண் புடையன்னை சுமத்திரை கோயில் புக்கான். 29

கண்டான் மகனும்மக னுந்தன கண்கள் போல்வார்
தண்டா வனஞ்சார்வதற் கேசமைந் தார்கள் தம்மைப்
புண்டாங்கு நெஞ்சத்தின ளாய்ப்படி மேற்பு ரண்டாள்
உண்டாய துன்பக்கடற் கெல்லையு ணர்த்தி லாதாள். 30

சோர்வாளை யடித்தொழு தேத்தினன் றுன்ப மென்னும்
ஈர்வாளை வாங்கமனந் தேற்றுதற் கேற்ற செய்வான்
போர்வாள ரசர்க்கிறை பொய்த்தன னுக்க கில்லேன்
கார்வானெ டுங்கானிறை கண்டுடன் மீள்வெ னென்ருன். 31

கான்புக் கிடினுங்கடல் புக்கிடி னுங்க லிப்பேர்
வான்புக் கிடினுமெனக் கன்னவை மாண யோத்தி
யான்புக் கதொக்கும்மெனே யார்நலி கிற்கு மீட்டார்
ஊன்புக் குயிர்புக்குணர் புக்குலே யற்க வென்றுன். 32

தாயாற்று கிலாடனே யாற்றுகின் றுர்க டம்பாற்
றீயாற்று கின்றுரெனச் சிந்தையி னின்று தேற்ற
நோயாற்று கில்லாவுயிர் போலநு டங்கி டையார்
மாயாப்பழி யாடர வற்கலே யேந்தி வந்தார். 33

கார்வான மொப்பான்றனேக் காண்டொறுங் காண்டொ றும்போய்
நீராயுகக் கண்ணினு நெஞ்சழி கின்ற நீரார்
பேராவிடர்ப் பட்டய லாருறு பீழை கண்டுந்
தீராமனத் தாடர வந்தன சீர மென்றுர். 34

வாணித்தில வெண்ணகை யார்களே வள்ள றம்பி
யாணர்த்திரு நாடிழப் பித்தவ ரீந்த வெல்லாம்
பூணப்பிறந் தானுநின் றுனவை போர்வி லோடுங்
காணப்பிறந் தேனுநின் றேனவை காட்டு மென்றுன். 35

அன்னுனவர் தந்தன ஆதரத் தோடு மேந்தி
யின்னுவிடர் தீர்ந்துட னேகென வெம்பி ராட்டி
சொன்னுலது வேதுணே யாமெனத் தூய நங்கை
பொன்னுரடி மேற்பணிந் தானவ ளும்பு கன்றுள். 36

ஆகாததன் றுலுனக் கவ்வன மிவ்வ யோத்தி
மாகாதலி ராமனம் மன்ன வன் வைய மீந்தும்
போகாவுயிர்த் தாயர்நம் பூங்குழற் சீதை யென்றே
யேகாயினி யிவ்வயி னிற்றலும் ஏத மென்றுள். 37

பின்னும்பகர் வாள்மக னேயிவன் பின்செல் தம்பி
யென்னும்படி யன்றடி யாரினி லேவல் செய்தி
மன்னுங்நகர்க் கேயிவன் வந்திடின் வாவ தன்றேல்
முன்னம்முடி யென்றனள் வார்விழி சோர நின்றுள். 38

இருவருந் தொழுதன ரிரண்டு கன்றெரீஇ
வெருவரு மாவினிற் றுயும் விம்மினுள்
பொருவருங் குமரரும் போயி னுர்புறந்
திருவரைத் துகிலொரீஇச் சீரை சாத்தியே. 39

தான்புனை சீரையைத் தம்பி சாத்திடத்
தேன்புனை தெரியலான் செய்கை நோக்கினான்
வான்புனை யிசையினாய் மறுக்கி லாதுநீ
யான்புக வினையதோ ருறுதி கேளெனா. 40

அன்னைய ரனைவரும் ஆழி வேந்தனு
முன்னைய ரல்லர்வெந் துயரின் மூழ்கினார்
என்னையும் பிரிந்தனர் இடரு ருவகை
யுன்னைநீ யென்பொருட் டுதவு வாயென்றான். 41

ஆண்டகை யம்மொழி பகர அன்பனுந்
தூண்டகு திரள்புயந் துளங்கத் துண்ணெனா
மீண்டதோ ருயிரிடை விம்ம விம்முவான்
ஈண்டுனக் கடியனேன் பிழைத்த தியாதென்றான். 42

நீருள வெனினுள மீனு நீலமும்
பாருள வெனினுள யாவும் பார்ப்புறி
னாருள தனுவுளாய் நானுஞ் சீதையும்
ஆருள ரெனினுளேம் அருளு வாயென்றான். 43

பைந்தொடி யொருத்திசொற் கொண்டு பார்மக
ணைந்துயிர் நடுங்கவு நடத்தி கானெனா
வுய்ந்தன னிருந்தன னுண்மை காவலன்
மைந்தனென் றினையசொல் வழங்கி னாயெனா. 44

மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
ஏறின வெகுளியை யாது முற்றுற
வாறினை தவிர்கென ஐய ஆணையிற்
கூறிய மொழியினுங் கொடிய தாமென்றான். 45

செய்துடைச் செல்வமோ யாதுந் தீர்ந்தெமைக்
கைதுடைத் தேகவுங் கடமை யோவைய
நெய்துடைத் தடையலர் நேய மாதர்கள்
மைதுடைத் துறைபுகும் வயங்கொள் வேலினாய். 46

உரைத்தபின் னிராமனென் றுரைக்க நேர்ந்திலன்
வரைத்தடந் தோளினான் வதன நோக்கினான்
விரைத்தடந் தாமரைக் கண்ணின் மிக்கநீர்
நிரைத்திடை யிடைவிழ நடிது நிற்கின்றான். 47

அவ்வயி னரசவை நின்று மன்பின
னெவ்வமி லிருந்தவ முனிவ னெய்தினன்
செவ்விய குமரருஞ் சென்னி தாழ்ந்தனர்
கவ்வையம் பெருங்கடன் முனியுங் கால்வைத்தான். 48

அன்னவர் முகத்தினை டகத்தை நோக்கினன்
பொன்னரைச் சீரையின் பொலிவு நோக்கினன்
என்னினி யுணர்த்துவ தெடுத்த துன்பத்தாற்
றன்னையு முணர்ந்தில னுணருந் தன்மையான். 49

வாழ்வினை நுதலிய மங்க லத்துநாட்
டாழ்வினை யதுவரச் சீரை சாத்தினன்
சூழ்வினை நான்முகத் தொருவற் சூழினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ. 50

வெவ்வினை யவடர விளைந்த தேயுமன்
றிவ்வினை யிவன்வயி னெய்தற் பாற்றுமன்
றெவ்வினை நிகழ்ந்ததோ ஏவர் எண்ணமோ
செவ்விதி னொருமுறை தெரியும் பின்னென்றான். 51

விற்றடந் தாமரைச் செங்கண் வீரனை
யுற்றடைந் தையநீ யொருவி யோங்கிய
கற்றடங் காணுதி யென்னிற் கண்ணகன்
மற்றடந் தானையான் வாழ்கி லானென்றான். 52

அன்னவன் பணிதலை யேந்தி யாற்றுத
லென்னது கடனவன் இடரை நீக்குதல்
நின்னது கடனிது நெறியு மென்றனன்
பன்னகப் பாயலுட் பள்ளி நீங்கினன். 53

வெவ்வரம் பயில்சுரம் விரவென் றானலன்
றெவ்வரம் பனையசொற் றீட்டி னுடனக்
கவ்வரம் பொருதவே லரச னுய்கிலா
திவ்வரந் தருவெனென் றேன்ற துண்டென்றான். 54

ஏன்றன னெந்தையிவ் வரங்க ளேவினை
யீன்றவள் யானது சென்னி யேந்தினேன்
சான்றென நின்றநீ தடுத்தி யோவென்றான்
றான்றிய நல்லற நிறுத்தத் தோன்றினன். 55

என்றபின் முனிவனென் றியம்ப நேர்ந்திலன்
நின்றனன் நெடுங்கணீர் நிலத்து நீர்த்துகக்
குன்றன தோளிவன் றெழுது கொற்றவன்
பொன்றிணி நெடுமதில் வாயில் போயினன். 56

சுற்றிய சீரையன் றொடர்ந்த தம்பியன்
முற்றிய வுவகையன் முளரிப் போதினுங்
குற்றமின் முகத்தினன் கொள்கை கண்டவ
ருற்றதை யொருவகை யுணர்த்து வாமரோ. 57

அந்தண ரருந்தவ ரவனி காவலர்
நந்தலில் நகருளார் நாட்டு ளார்கடஞ்
சிந்தையென் புகல்வது தேவ ருள்ளமும்
வெந்தனர் மேல்வரு முறுதி வேண்டலார். 58

ஐயனைக் காண்டலு மணங்க னார்கடா .
மொய்யிளந் தளிர்களான் முளரி மேல்விழு
மையலின் மதுகரங் கடியு மாறெனக் .
கைகளின் மதர்நெடுங் கண்க ளெற்றினார். 59

தம்மையு முணர்ந்திலர் தணப்பி லன்பினால்
அம்மையி னிருவினை யகற்ற வோவன்றேல்
விம்மிய பேருயிர் மீண்டி லாமைகொல்
செம்மறன் றுதையிற் சிலவர் முந்தினார். 60

விழுந்தனர் சிலர்சிலர் விம்மி விம்மிமே
லெழுந்தனர் சிலர்முகத் திழிகண் ணீரிடை
யழுந்தினர் சிலர்பதைத் தளக வல்லியின்
கொழுந்தெரி யுற்றெனத் துயரங் கூர்கின்றார். 61

கரும்பன மொழியினர் கண்ப னிக்கிலர்
வரம்பறு துயரினன் மயங்கி யேகொலாம்
இரும்பன மனத்தின ரென்ன நின்றனர்
பெரும்பொரு ளிழந்தவர் போலும் பெற்றியார். 62

நெக்கன வுடலுயிர் நிலையி னின்றில
இக்கண மிக்கண மென்னுந் தன்மைய
புக்கன புறத்தன புண்ணிற் கண்மல
ருக்கன நீர்வறந் துதிர வாரியே. 63

இருகையிற் கரிநிக ரெண்ணி றந்தவர்
பெருகையிற் பெயர்த்தனர் தலையைப் பேணலர்
ஒருகையிற் கொண்டன ருருட்டு கின்றனர்
சுரிகையிற் கண்மலர் சூன்று நீக்கினுர். 64

சிந்தின வணிமணி சிதறி வீழ்ந்தன
பைந்துணர் மாலையிற் பரிந்த மேகலை
நந்தினர் நகையொளி விளக்க நங்கைமார்
சுந்தர வதனமு மதிக்குத் தோற்றவே. 65

அறுபதி னுயிர ரரசன் றேவியர்
மறுவறு கற்பினர் மழைக்கண் ணீரினர்
சிறுவனைத் தொடர்ந்தனர் திறந்த வாயினர்
எறிதிரைக் கடலென இரங்கி ஏங்கினுர். 66

கன்னிநன் மயில்களும் குயிற்க ணங்களு
மன்னமுஞ் சிறையிழந் தவனி சேர்ந்தன
என்னவீழ்ந் துழந்தனர் இராம னல்லது
மன்னுயிர்ப் புதல்வரை மற்றும் பெற்றிலார். 67

கிளையினு நரம்பினு நிரம்புங் கேழன
அளவிறந் துயிர்க்கவிட் டரற்றுந் தன்மையாற்
றெளிபடு குழலினே டியாழ்க்குத் தோற்றன
இளையவ ரமுதினும் இனிய சொற்களே. 68

புகலிடங் கொடுவனம் போலு மென்றுதம்
மகன்வயி னிரங்குறு மகளிர் வாய்களால்
அகன்மதி னெடுமனை யரத்த வாம்பல்கள்
பகலிடை மலர்ந்ததொர் பழனம் போன்றவே. 69

திடருடைக் குங்குமச் சேறுஞ் சாந்தமும்
இடையிடை வண்டலிட் டார மீர்த்தன
மிடைநகிற் குவடொரீஇ மேக லைத்தடங்
கடலிடைப் புகுந்தகட் கலுழி யாறரோ. 70

தண்டலைக் கோசலைத் தலைவன் மாதரைக்
கண்டன னிரவியுங் கமல வாண்முகம்
விண்டலத் துறையுநல் வேந்தற் காயினும்
உண்டிட ருற்றபோ தென்னு ருதன. 71

தாயருங் கிளைஞருஞ் சார்ந்து ளார்களுஞ்
சேயரு மணியருஞ் சிறந்த மாதருங்

காயெரி யுற்றன ரனைய கவ்வையர்
வாயிலு முன்றிலு மறைய மொய்த்தனர். 72

இரைத்தன ரிரைத்தெழுந் தேங்கி யெங்கணுந்
திரைப்பெருங் கடலெனத் தொடர்ந்து பின்செல
வுரைப்பதை யுணர்கில னொழிப்ப தோர்கிலன்
வரைப்புயத் தண்ணறன் மனையை நோக்கினான். 73

நன்னெடு நளிமுடி சூட நன்மணிப்
பொன்னெடுந் தேரொடும் பவனி போனவன்
துன்னெடுஞ் சீரையும் சுற்றி மீண்டுமப்
பொன்னெடுந் தெருவிடைப் போதன் மேயினான். 74

அஞ்சன மேனியிவ் வழகற் கெய்திய
வஞ்சனை கண்டபின் வகிர்ந்து நீங்கலா
நெஞ்சினும் வலிதுயிர் நினைப்ப தென்சில
நஞ்சினும் வலியநங் நலமென் றார்சிலர். 75

மண்கொடு வருமென வழியி ருந்ததியா
மெண்கொடு சுடர்வனத் தெய்தல் காணவோ
பெண்கொடு வினைசெயப் பெற்ற நாட்டினிற்
கண்கொடு பிறத்தலுங் கடையென் றார்சிலர். 76

முழுவதே பிறந்துல குடைய மொய்ம்பினோ
னுழுவைசேர் கானகத் துறைவென் யானென
வெழுவதே யெழுதல்கண் டிருப்ப தேயிருந்
தழுவதே யழகிதிவ் வன்பென் றார்சிலர். 77

வலங்கடிந் தேழைய னைய மன்னனை
நலங்கடிந் தறங்கெட நயத்தி ரோவெனக்
குலங்கடிந் தான்வலி கொண்ட கொண்டலை
நிலங்கடிந் தாளொடு நிகரென் றார்சிலர். 78

திருவரை சுற்றிய சீரை யாடையன்
பொருவருந் துயரினன் றொடர்ந்து போகின்றான்
இருவரைப் பயந்தவள் ஈன்ற கான்முளை
யொருவனோ விவற்கிவ்வூ றுறவென் றார்சிலர். 79

முழுக்கலின் வலியநம் மூரி நெஞ்சினை
மழுக்களிற் பிளத்துமென் றோடு வார்வழி
யொழுக்கிய கண்ணினிற் கலுழி யூற்றிடை
யிழுக்கலில் வழுக்கிவீழ்ந் திடருற் றார்சிலர். 80

# 9. இரட்சணிய யாத்திரிகம்

## இரட்சணிய சரிதப்படலம்

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென அறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் அருள்வள்ளல். 1

இத்தகைய அரும்பொறையும் மனநலமும் இயைந்தவரே
வித்தகனுக் கடித்தொழும்பர் எனத்தகுமெய்க் கிறித்தவர்மற்
றித்தகைய குணமிலருங் கிறித்தவரென் றிசைபெறுதல்
செத்தவரைத் துஞ்சினவர் எனவுரைக்குஞ் சீர்மைத்தால். 2

கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி
ஈண்டிவரே யுலகினுக்கோர் இரட்சகரென் றெடுத்துரைக்கும்
வேண்டுமோ இனிச்சான்றும் இதைவிடுத்து வேறொன்றே. 3

மன்றுடும் அருட்சீவ வசனத்தை வன்மறவோர்
ஒன்றாகப் பொருள்செய்யா ருடைகளைந்து பங்கிட்டார்
குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்
என்றாக டியமான வெழுத்திட்டார் சிலுவைமிசை. 4

வணங்காத முரண்கழுத்தர் வல்லுருக்கிற் கடினமுறீஇக்
குணங்காணுக் கொடுமனத்தர் கூறியதீ மொழியொன்றோ
அணங்காருங் குருசுமரத் துறையுண்ட வொருதிருட்டுப்
பிணங்காணு யிகழ்ந்ததுவும் பிதற்றியது பெருமானை. 5

அடுங்கொலைஞர் பொருட்டமலன் அகங்கனிந்த அருட்டிறமுங்
கெடுங்கொடிய ருணர்வின்றிக் கிளந்தபழி மொழிச்செருக்கும்
நடுங்கியுயிர் நலிசோரன் நச்சுமனத் தியற்கையுமோர்ந்
தொடுங்குயிர்மற் றொருசோரன் உளம்பொறுக்கா துரைக்கின்றான். 6

எஞ்சுறு மரணத்தீர்ப்பி யைந்துழந்தும் ஏழைநீ
அஞ்சுவா யலையேயிவ் வமையத்தும் அமலனுக்கு
நஞ்சனைய நமக்கீது நேர்ந்ததுமெய் நடுநிலைமை
விஞ்சியாம் விளைத்தகொடு வினைப்பயனை யடைகின்றேம். 7

மற்றிதனை யுணராது வன்னெஞ்சோய் மாசணுகா
நற்றவனை யிகழுவது நன்மையோ நன்மையலாற்
குற்றமிவ ரிடத்துளதேற் கூறுதியென் றறக்கடிந்து
தெற்றெனவுட் குழைந்துரைத்தான் ஜீவவழித் தலைநின்ருன். 8

காண்டகைய பெருங்கருணைக் கற்பகத்தை யெதிர்கண்டு
மாண்டகைய வன்பினொடு மானதாஞ் சலிவழங்கி
ஆண்டகைநும் மரசியலில் அடியேனை நினைந்தருள
வேண்டினேன் எனவிரைந்து வேண்டினுன் மிகவிரும்பி. 9

கள்ளமிலா அருட்கள்ளன் கசிந்துகரு ணையைநம்பி
உள்ளுணர்வோ டினிதுரைத்த வொருமன்ருட் டுயிர்நல்கும்
வள்ளல்திரு வுளத்தழுந்த மலங்காய்நீ பரதீசில்
உள்ளபடி யின்றேயென் னுடனிருப்பா யெனவுரைத்தார். 10

தன்னேரி னின்றேங்கி யழுந்தனித் தாயை யன்பின்
முன்னுக வழுங்கொரு சீடனை முற்று நோக்கி
அன்னுயி வனுன்மகன் மற்றுனக் கன்னை நண்ப
என்ன வருளின் னுரைதந்தன ரென்று முள்ளார். 11

ஆயிற் சிறந்த வறமாவதிவ் வாழி வைப்பிற்
தாயிற் சிறந்த தமரின்றெனத் தக்க அன்பாஞ்
சேயிற் சிறந்த வருணயகன் சிந்தை யார
வாயிற் சிறந்த மொழிகாட்டுமிம் மாண்பை யோர்தி. 12

---

# 10. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை

ஒருபாற் 1

சுளைநிரை யமைந்த கொழும்பழந் தூக்கிக்
குறுமல ரவிழ்ந்த நறுவிரை தெளித்து
வீசுகா லசையும் பாசிலை நரந்தமும்
நலனுறு மகளி ரிலவிதழ் கதுவிய

முறுவ லன்ன சிறுவிதை பெய்த
பொலன்குட மெடுத்த உலவை மாதுளையுங்
கருமணி புரையும் ஒருகனி நாவலும்
உவர்க்கழி மணக்குந் துவர்க்கால் வகுளமும்
பொற்றிரள் கடுப்பத் தெற்றென விளங்கும்

எழிற்கனி பழுத்த எலுமிச்சம் புதலுங்
காவதங் கமழ மேவுவ வன்றே ; ஒருபாற்
குலிகம் ஊட்டிய தலைமையிற் றிகழ்ந்து
நவ்வி நோக்கியர் செவ்வாய் போலக்
கொழுங்கனி யுடைய கொவ்வைக் கொடியும்

கற்புடை மகளிர் முற்படச் சூடும்
வரிசையின் மிகுந்த பரிசுடை முல்லையுந்
தின்பது கல்லாப் புன்றலை மந்தி
கறித்துத் துள்ளுங் கறிவளர் கொடியும்
அணிற்புறங் கடுக்கும் வரியுடைக் கொடுங்காய்

கொள்ளையிற் காய்த்த வெள்ளரிக் கொடியுஞ்
சொல்லுயர் மரபின் மெல்லிலைக் கொடியுஞ்
சிறுபளிக் குருண்டை செறிவுறுத் தனைய
தீங்கனிக் குலைகள் தூங்க வயின்வயின்
தந்தாது வளரும் முந்திரிக் கொடியும்

இடையிடை தாஅய் மிடையுமால் ; ஒருபால்
நடுவிற், பாயொளி மதியம் பரிதி வெம்மையின்
இளகிப் புனலா யிழிந்தது கடுப்பத்
தெளிநீர் வாவியொன் றுளதால் ; மற்றது
சிறுகால் தோறும் உறுநீ ரொழுக்கி

வாலுகம் பரந்த கோலிய பாத்தியிற்
பச்சிளம் புல்லை நிச்சலும் வளர்க்கும், அதா அன்
றன்னச் சேவ லணிமயிர்ப் பெடையொடும்
பொன்னந் தாமரைப் பொலிந்துவீற் றிருப்பவும்
நித்திலம் பயந்த நத்துவான் மடுவின்

மீனினம் வளை இய நாண்மதிப் போலப்
பால்கெழு மரபிற் பரந்து செல்லவுங்
கொழுங்கயன் மாதர் விழியென மிளிரவுங்
கருவெரிந் உடைய பருவரா லுகளவும்
முற்று மஞ்சட் சிறுபுறங் கடுக்கும்

இறவு கரைமருங்கிற் சுரிந்து துள்ளவுஞ்
சிறுவளி எடுப்பச் சிறுதிரை யெழீஇ
முறைமுறை யுராஅய்க் கரையிணைச் சாரவுஞ்
செழுநீர்க் குவளையுங் கழுநீர்ப் போதும்
முழுநெறி ஆம்பலுங் கழியவுங் குழுமிக்
காண்போர்ப் பிணிக்கும் மாண்பின தன்றே.

# 11. மாரி வாயில்

பார்த்தனென் பதிமுன் னுற்றுப்
படிறறி யாதே னுள்ளம்
ஈர்த்தெனைப் புகழ்ந்தென் னேழை
யிகுளையை யிரங்தென் தாதை
வார்த்தைகொண் டென்னை வாழ்த்தி
மணந்தபின் தணந்தான் தன்னை
ஓர்த்தநீ தூதாய் மீள
ஒருப்படுத் துய்க்க வல்லாய். 1

தேடாம லெங்கோ னிருக்குந்
திருக்கோயில் நகர்தேறுமா
றூடாறி வழிசென்று களைமாற
வுண்டாட வுந்தூங்கவும்
வாடாத வளநீர் வழங்காறு
பலபாயும் வரைதோறும்நீ
நீடாம லிளையா தவற்காண
நின்றேக வழிசொல்லுவன். 2

பீடாரு மாரத்து மணநாறு
தென்றற் பிறப்பீவதும்
வாடாத புகழ்வீசு தமிழ்மங்கை
வளர்தொட்டில் வளமார்வதும்
நீடாழி யுழுதோடி நிதிதேடு
நாவாய்கள் நிறைகொற்கையார்
நாடார நலனல்கு பொருநைப்
பெருக்கூட்டு பொதியின்மலை. 3

வளமலயம் பிறக்கொழிய எங்கடமிழ் வைகை
களமர்பழங் கிளைஞர்தொழும் செழியர்நிலம் கடகை
வளமெனமுன் னுண்டபகை வைத்ததனை மருவா
துளவிளையு ணிதிகொழித்தோங் குந்தமிழ்நா டுறுவை. 4

ஏலாமைத் தொழில்புரிவார் ஏற்பதறி
யாரியற்ற இயைந்து மல்கித்
தாவாமை விளையுளொடு தக்காருந்
தாழ்விலராந் தகையார் செல்வர்
ஓவாமை வளத்தொடுநல் லொளியுதவுங்
காவிரிபாய்ந் துயரு நாடு
சாவாமை வண்மைதரும் புகழென்னு
முண்மையினைச் சாற்றும் நாடு. 5

பண்புடையார் பழையர்தமிழ்ப் பாண்டியர்போல்
பாரிலிசை படைத்த சோழர்
தண்புனல்நாட் டவர்தகுதி சாற்றரிது
தலைநின்ற தமிழ மேழி
நண்புடைமை யாடவரும் நனிவிருந்தை
நல்லாரும் நாளும் பேணி
வண்புகழை வளர்த்திறவா வளச்சிறப்பை
வழங்கறமார் வாய்மை நாடு, 6

கள்ளாரு நறுஞ்சோலைத் தண்படப்பை
கழனிபல களமர் சாறு
தள்ளாத வளமனைத்தும் தரும்புனல்நா
டுடைத்தவத்தர் தம்மை யென்றும்
நள்ளாரும் வளவரென நவில்செவ்வி
படைத்தாக்கம் நல்கி யோடும்
வெள்ளாறு பாலாறு விரிபெண்ணைத்
தமிழ்க்காட்சி விழைந்து காண்பை. 7

தொண்டையி னெல்லை யெய்தத்
தூயநல் லமுதை வென்ற
பண்டைநற் றமிழிற் பண்ணார்
பாசுரம் பயில்வ தோடும்
அண்டையிற் சாமம் பாட
அழகனு யமர்ந்தான் செய்ய
இண்டைநல் விழியன் நின்ற
எழுமலை நிவந்து தோன்றும். 8

வடுகினில் முரலும் வண்டும்
தமிழ்தருங் குயிலும் வந்து
நெடுமலேச் சாரல் தோறு
நித்தமு மிசைப்பக் கேட்டுக்
கொடுநுதிக் கொவ்வைச் செவ்வாய்க்
கிஞ்சுகங் கொஞ்சும் கோல
அடுசுவைப் பாலி னின்சொ
லரம்பையர் விரும்ப வம்மா. 9

ஓதிய பண்க ளோடு
முவகையி லாழ்வார் பற்பல்
சாதியர் துழனி யாரத்
தகைதிருப் பதியைச் சார
ஆதியில் முருகன் கோயில்
அவன்திரு மாமன் வைப்பாய்ப்
போதிய புனைந்த போதிப்
பொழில்வலங் கொண்டு போதி. 10

தான்மருவு தென்கன்னித் தரைமருமம்
தழுவுகடற் றடக்கை போல
வான்மருவு மலயநிலே மகளேயலே
மகிபன்மண மகிழ வார்க்கும்
தேன்மருவு தெண்ணீரி ஞெழுக்கென்னத்
தெய்வவளஞ் செய்து செல்லும்
மான்மருவு மடவிழியார் நிதங்குடைகோ
தாவிரியின் வனப்பைக் காண்பை. 11

என்றுமுள தென்றமிழ்போற் பரம்பொருள்போ
லெல்லேயறு கால மெல்லாம்
நின்றுவள நிலமூட்டும் தொல்கங்கை
யெனவடவர் நினேத்து வாழ்த்தும்
தொன்றுவளர் தூயபுக ழெனநீடண்
ணீத்தமதைத் தொழுது நீங்கிச்
சென்றுவளஞ் செங்குடக்காய்க் கொழித்தொழுகு
நருமதையின் தீரம் சேர்தி. 12

இலங்குமிவ் வளாகம் நிற்க
வியங்குதி வடபா லாங்கே
கலங்குபு கயிறுய் முன்பாற்
கடல்கடைந் தயர்வாற் றூங்கித்
துலங்குவாள் கங்கைக் கோட்டந்
தொல்கங்கைப் பொழிலி னீங்க
விலங்குமாசு ணம்போ னீண்ட
விந்திய மலைவந் தோங்கும். 13

தன்காதற் றென்புலத்தைத் தழுவுமிரு
கரமென்னத் தக்க வாறு
மின்காதல் புரிமஞ்சு தவழுமிரு
மலைத்தொடரு மிண்டிக் கன்னி
நன்காதற் றுறையிறைஞ்சிக் கூப்பவிடை
வளம்வளரும் நாடு காத்துப்
பொன்காதல் புரிவிந்தம் குடகுணக்காய்
நிலப்பரப்பைப் புரந்து நிற்கும். 14

விந்தமலை விடுத்துவடக் கேகுமிடை
விரிந்துபடர் வியலின் வெம்மை
யந்தரத்து மழற்றுமதன் அகனீந்திக்
கடப்பதுமிக் கருமை யாமால்
உந்தரத்து நீயணுகில் உன்னீர்மை
யுண்டுதவு முனக்கங் கெவ்வம்
சுந்தரம்நீ யாகையினுல் உயர்ந்தோங்கிப்
பறந்ததனைக் கடப்பை காரே. 15

தென்மொழிபோற் றென்றமிழ ருரனுளம்போற் றெளிந்து
தொன்மொழியார் யமுனையறல் தோயுமிரு துறையும்
பன்மொழியும் பயில்வர்குடை பயசினிடைப் படிந்தே
என்மொழியென் கொண்கனிடம் இயம்பவிரைந் தெழுதி. 16

யாணர்திரை கரைபொருமால் யமுனைமதில் கழுவும்
பாணர்புகழ் செல்வம்வளர் பஞ்சவர்நற் பதிபல்
வீணர்நுழை யாதவினை யாற்றுபவர் வேள்வி
ஆணர்மலி யிந்திரப்பி ரத்தபுர மடைதி. 17

பொன்னவிர் மாட மைந்திற்
        பொருவிலா நம்பி முன்னென்
கன்னிமை கவர்ந்து காதற்
        கவலைதந் தகன்ற காளை
நன்னகர் அண்ணல் கோயில்
        நடுவதன் வாம நிற்கும்
முன்னிழல் படங்கில் நிற்கும்
        வானரம் நுடங்கு முன்றில். 18

யாரைநீ யாதுன் மாற்றம்
        எனிலவற் கியம்பு கண்டாய்
ஓரையைக் கழங்கைப் பந்தை
        ஒப்பில்தன் பாவை தோழி
மாரைமுன் கவலை யில்லா
        மனத்தையும் விடுத்துன் காதற்
பேரையே பேறென் றெண்ணிப்
        பேதுறும் பேதை தூதேன். 19

விந்தைநீ வினவல் என்பேர்
        விளைவொடு கருவி யென்ப
முந்தைநான் அறிவ னுன்னை
        மும்முறை முகம னில்லை
நுந்தையின் அணுக்கத் தொண்டன்
        நுவல்வனுன் புகழ்மை பேணி
நிந்தையை நீக்க நின்பால்
        நேசத்தால் பேச வந்தேன். 20

தென்னர்செந் தமிழர் தேயாச்
        சீர்த்தியர் செழியர் தெய்வ
நன்னர்வான் கங்கை மண்ணை
        நணுகுமுன் பழையர் நாட்டை
மன்னராய் ஆண்டு மாண்ட
        வழுதியர் வழியில் வந்தாள்
பின்னர்நின் மகனைப் பெற்றாள்
        பெருமனைக் கிழமை பேணாய். 21

கற்பற வாழ்வுங் காதற்
கடற்கரை விளக்குங் காணத்
தற்பரை யருளே நாடித்
தமிழ்த்துறைக் குமரி நோற்பாள்
விற்பன விநய மாதர்
விரகிலள் விழைந்து நாளுங்
கற்பன கணவன் காதற்
கடன்புரி கடன்காண் கல்வி. 22

என்றிவை யியம்பி யின்னும்
எம்மிடைத் தொடர்ந்த காதல்
நன்றுமுன் வளர்ந்த செய்தி
நான்சொலி யுணர்ந்தென் கொண்கன்
பொன்றலில் புகழ்போல் நின்ற
பொருளிலென் அன்பன் றற்குச்
சென்றுநீ தெளியச் செப்பித்
தேற்றியெம் மிருவர்ச் சேர்த்தி. 23

# 12. திருமால் அருள் வேட்டல்

## திருவல்லிக்கேணி

பள்ளியிலே யான்படித்த பருவமதி லுன்றன்
பசுங்கோயில் வலம்வருவேன் பத்திவிளை வாலே
தெள்ளறிவோ தீவினையோ சிதைந்ததந்தப் பத்தி
திறமறியேன் சிறுமதியேன் செய்வதொன்று மறியேன்
உள்ளநிலை பண்படவோ ஒருவழியுங் காணேன்
உன்னடியி லுடும்பாகி உருகியழு கின்றேன்
கள்ளவிழு மலர்த்தருவே கரியமணிக் குன்றே
கருணையல்லிக் கேணிமகிழ் கடவுளருள் புரியே. 1

கடலாடி வலம்வந்து கைதொழுவேன் கோயில்
கமலமுகங் கண்டுகண்டு கசிந்துருகி நிற்பேன்
படலாடும் அரசியலால் பத்திமனம் போச்சே
பரமநின்றன் அரசியலைப் பரப்பமனங் கொண்டேன்
உடலாடும் வேளையுறின் உளமாடு மன்றோ
உளமாடி வாழவிங்கே ஒருகணமுந் தரியேன்
மடலாடும் பாவையர்தம் மனம்பெறினோ உய்வேன்
மலரல்லிக் கேணிமகிழ் மணவாளா அருளே. 2

அந்நாளில் கோயில்புகுந் தகங்கொண்ட உருவம்
ஆழ்வார்க ளந்தமிழில் அமர்ந்திருக்கும் அழகு
பின்னாளில் புலனாகும் பேறுபெற்றே னருளால்
பிரியாம லியற்கையிலே பின்னிநிற்கும் பெற்றி
இந்நாளில் இசையரசே இனிதுணரச் செய்தாய்
எல்லாநின் னருட்செயலே ஏழையென்ன அறிவேன்
எந்நாளி லொளிகாண்பேன் ஏகாந்தம் பெறுவேன்
எழிலல்லிக் கேணிவளர் எந்தைபெரு மானே. 3

அழுக்ககற்றி வெள்ளையுடை அணிந்துகொண்டேன் ஐய
அன்புளத்தால் மாலையிட்டால் அருள்வழிநின் றுய்வேன்
வழுக்கிவிழும் வழிமறையும் வாழ்வுபெற லாகும்
மதங்களெலாம் மறைகளெலாம் வழுத்துகின்ற மணியே

இழுக்குடைய நெறிசெலுத்த எந்தைதிரு வுளமோ
எழிலுடையுங் கறைப்பட்டால் ஏழையென்ன செய்வேன்
செழிக்குமலர்ப் புன்னைநிழல் சீரடிவைத் துலவும்
திருவல்லிக் கேணியமர் செல்வப்பெரு மாளே. 4

புன்னையிலே கனிவாயிற் பூங்குழல்வைத் தூதப்
புங்கவரும் மங்கையராய்ப் புத்தமிர்தம் உண்டார்
அன்னையினுந் தயையுடையாய் ஆணுருவில் யானும்
அணங்குமனம் பெற்றுவந்தேன் அரிமாலை யணிந்தால்
மன்னருளில் திளைத்துநிற்பேன் மயக்கநெறி வீழேன்
மதங்கடொறும் ஒளிசெய்யும் மாதவனே என்றுங்
கன்னிமொழித் தமிழ்க்கவியில் கருத்துடைய அரசே
கருணையல்லிக் கேணியமர் கரியபெரு மாளே. 5

# குறிப்புரை

## 1. சிறுபாணாற்றுப்படை

சங்க காலத் தமிழ்ச் சான்ரேர்கள் பாடிய பாடல்கள் பத்துப் பாட்டு எனவும், எட்டுத்தொகை எனவும் வழங்கும் நூல்களாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. இவற்றுள் பத்துப்பாட்டு என்பது அகவற்பாவால் இயற்றப்பட்ட பத்து நெடும்பாடல்கள் தொகுக்கப் பட்ட தொகைநூலாகும். இதனுல் இந்நூல் பத்துப்பாட்டெனும் பெயர் பெறலாயிற்று. இதனைப் பாட்டு எனவும் கூறுவர். இந் நூலில் உள்ள பாடல்கள் நூற்றுமூன்று அடிகளுக்குக் குறையா தனவும் எழுநூற்று எண்பத்திரண்டு அடிகளுக்கு மேற்படாதனவு மாகும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற் றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன பத்துப்பாட்டாகும்.

பத்துப்பாட்டைப் பாடிய புலவர்கள் எண்மர். அவர்களுள் நக்கீரனுரும், கடியலூர் உருத்திரங் கண்ணனுரும் இரண்டிரண்டு பாடல்களைப் பாடியுள்ளனர். மற்ற ஆறு புலவர் பெருமக்களும் ஒவ்வொரு பாடல் பாடியுள்ளனர். இந்நூலுள் அகப்பொருள் பற்றியன முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்பன, மற்ற ஏழு பாடல்களும் புறப்பொருள் பற்றியன. அவற்றுள் ஐந்து பாடல்கள் 'ஆற்றுப்படை' இலக்கிய வகையைச் சார்ந்தனவாகும். முல்லைப் பாட்டு நீங்கலாக உள்ள பிறபாடல்கள் ஒவ்வொன்றற்கும் பாட்டுடைத் தலைவன் உண்டு.

பத்துப்பாட்டு, பண்டைத் தமிழ் மக்களின் வரலாற்றையும் நாகரிகச் சிறப்பினையும் படம் பிடித்துக் காட்டுகிறது. முடியுடை மூவேந்தர்களது வரலாறு, குறுநில மன்னர்கள் வள்ளல்கள் முதலி யோர் வரலாறு, பண்டைத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்கள், போர்முறை, சமுதாயநிலை, காதல் வாழ்க்கை, கடவுள் நெறி முதலிய வற்றைப் பத்துப்பாட்டால் நன்கறியலாம்.

சிறுபாணாற்றுப்படை பத்துப்பாட்டின் மூன்ரும் பாடலாகும். இருநூற்று அறுபத்தொன்பது அடிகளையுடையது; ஆசிரியப்பாவால்

ஆகியது, ஆற்றுப்படை என்னும் தமிழ் இலக்கிய வகையைச் சேர்ந்தது என்பது இதன் பெயராலேயே அறியப்படுகிறது. ஆற்றுப் படை என்பது, பாணர், கூத்தர், பொருநர், விறலியர் என்னும் கலைஞர்களுள் ஒருவர் ஒரு வள்ளலிடத்துத் தாம் பெற்ற பரிசாகிய பெருஞ் செல்வத்தை, எதிர்வந்த பாணர் முதலியவர்க்கு எடுத்தியம்பி அவரும் அவன்பால் சென்று தாம்பெற்ற செல்வத்தைப் பெறுமாறு அறிவுறுத்தி, அவன் இருக்கும் இடத்திற்கு வழிப்படுத்துவதாகும்.

பத்துப்பாட்டுள் பாணராற்றுப்படையாக வரும் இரண்டு பாடல் களுள், சிறுபாணாற்றுப்படை அடியளவாற் சிறியதாதலின் சிறு பாணாற்றுப்படை எனப் பெயர் பெற்றது என்பர் சிலர். ஆனால் இப்பாட்டினுள் வரும் பாணன் ‘ இன்குரற் சீறியாழ் இடவயிற் றழீஇ' (35) இருந்தான் என்று கூறப்படுகின்றமையால், அவன் வைத் திருந்த சிறிய யாழின் காரணமாகவே இவ்வாற்றுப்படை பெயர் பெற்றது எனக்கொள்ளுதலே பொருத்த முடையதாகும்.

பரிசில் பெறக்கருதிய ஒரு பாணனைப் பரிசில் பெற்றுவெருரு பாணன், ஓய்மானாட்டு நல்லியக் கோடனிடத்து ஆற்றுப்படுத்திய செய்தியைச் சிறுபாணாற்றுப்படை விளக்குகிறது. வஞ்சிமாநகர், மதுரை, உறந்தை ஆகிய மூவேந்தரின் தலைநகர்கள், நல்லியக் கோடன் ஆட்சிக்குட்பட்டிருந்த நாட்டில் சிறந்து விளங்கிய மாவிலங்கை, எயிற்பட்டினம், கிடங்கில், வேலூர், ஆமூர் ஆகிய நகரங்கள் முதலியவற்றின் சிறப்பினைச் சிறுபாணாற்றுப்படையில் காணலாம். கடையெழு வள்ளல்களின் பொன்றுப் புகழிற்குரிய காரணங்கள் சுருக்கமாகச் சொல்லப்படுகின்றன. குறிஞ்சி, முல்லை முதலிய ஐவகை நிலங்களின் இயற்கை எழிலும், அவற்றில் வாழும் மக்களது விருந்தோம்பும் பண்பும் விளக்கப்படுகின்றன. நல்லியக் கோடனின் சீரும் சிறப்பும் வீரமும் வெற்றியும் அன்பும் பண்பும் அழகாக வருணிக்கப்பட்டுள்ளமை படித்து இன்புறத்தக்கதாகும்.

இப்பாட்டைப் பாடியவர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் என்பவராவார். தொண்டை நாட்டில் உள்ளதே இடைக்கழி நாடு; இக்காலத்தில் இடைக்கநாடு என்ற பெயரால் வழங்குகிறது. இந்நாடு உப்பங்கழிகளுக்கு இடையே இருத்தலின் இப் பெயர் பெற்றது என்பர். நல்லூர் என்பது புலவர்பெருமானின் ஊராகும். தத்தனார் என்பது இவருடைய இயற்பெயர். கல்வி மேம்பாடுபற்றி நத்தத்தனார் என்ற பெயர் இவருக்குப் பிற்காலத்தில் வழங்கலாயிற்று, ‘ந'என்பது சிறப்புப் பொருளைத் தருவதோர் இடைச்சொல். நக்கீரர், நப்பூதனார்

முதலிய பெயர்களும் இவ்வாறு அமைந்தனவேயாகும். இவரது பாடலினால், இவர் கடைச்சங்க காலத்தின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர் என்பது புலனாகின்றது.

3. உழந்த - வருந்தின; செல்புனல் - ஓடுகின்ற நீர்; சேய்வரல்- தொலைவினின்று வருகின்ற; கான் - காடு.

4. கொல்கரை - கரைகொல்.

5. செம்மல் - வாடிய மலர்; புடைநெறித்து - தம்மிடமெல்லாம் (கருமணல்) செறியச்செய்து.

6. கதுப்பு - கூந்தல்; காழ்அகம் நுணங்கு அறல் - கரிய நிறத்தைத் தம்மிடத்தே கொண்ட நுண்ணிய கருமணல்.

7. அயில் - இரும்பு, வேல்; உருப்பு - வெப்பம்; ஐது நடந்து - மெல்ல நடந்து சென்று.

8. வெயில்உருப் புற்ற - வெயிலாலே வெப்பமுற்ற; வெம்பரல் - வெம்மையான பரல் கற்கள்.

9. வேனில் நின்ற - இளவேனிற் பருவம் நிலைபெற்ற; வெம்பதம் - வெப்பமிக்க தன்மை; வழிநாள் - இளவேனிற் பருவத்திற்குப் பிற்பட்டதாகிய முதுவேனிற் பருவம்.

10. கடாவுறுப்ப - வெப்பமாக வீச.

11. பாலைநின்ற - பாலைத்தன்மை நிலைபெற்ற; பாலை - பாலை நிலம்.

12. முதல் - முதலாகவுடைய; மராஅத்த - கடப்ப மரத்தினுடைய; அசைஇ - தங்கி, அளபெடை.

13. ஐதுவீழ் - மெல்லியதாய் விழுகின்ற; இகுபெயல் - தாழ்கின்ற மழை.

14. நெய்கனிந்து - எண்ணெயிலே முற்றுப்பெற்று; கதுப்பு - கூந்தல்.

15. மணி - நீலமணி; கலாபம் - தோகை.

16. மயின்மயிற் குளிக்கும் - ஆண்மயில்கள் யாம் இவர் சாயலை ஒவ்வேமென நாணியும், எம் தோகை இவர் கூந்தலை ஒவ்வா என நாணியும் தம் பெடைகட்குள்ளே மறையும்; சாயல் - மென்மை; சாஅய் - ஓடியிளைத்து; அளபெடை.

17. உயங்கு - வருந்தும்; அசைஇ - வருந்தி.

18. வயங்கு - விளங்குகின்ற; இழை - அணிகலன்கள்; உலறிய - வறுமையினால் சிலம்பு முதலிய அணிகலன்கள் அணியப் பெறாது பொலிவழிந்த.

19. ஈர்ந்து - இழுக்கப்பட்டு; தோய்தல் - பொருந்துதல்; இரும் பிடி - கரிய பெண் யானை.

20. குறங்கு - தொடை; யானையின் தும்பிக்கை மகளிர் தொடைக்கு உவமை.

21. மால்வரை - பெருமையுடைய மலை; ஒழுகிய - ஒழுங்குபட வளர்ந்த, இடையறவின்றி வளர்ந்த.

22. ஓதி - மகளிரின் முன்னுச்சி மயிர்.

23. நளி - செறிந்த; சினை - கிளை; நச்சி - விரும்பி.

24. களிசுரும்பு - தேனுண்டு களித்த வண்டுகள்; சுணங்கு - பொன்னிறப் பசலை (தேமல்).

29. குல்லை - கஞ்சங் குல்லை என்னும் ஒருவகைச் செடி; புறவு - காடு.

30. முல்லை சான்ற கற்பு - முல்லை மலர்களைச் சூடுதற்கு அமைந்த கற்புடைமை; முல்லை நிலத்திற்குரிய ஒழுக்கம் நிறைந்த கற்புடைமை எனினும் அமையும்.

31 மடமா னோக்கின் - மடப்பத்தை யுடைய மானின் நோக்கைப் போன்ற; விறலியர் - உள்ளத்தே தோன்றும் உணர்ச்சிகள் உடலுறுப்புக்களில் வெளிப்படுமாறு ஆடுவதில் வல்ல ஆடல் மகளிர்.

32. அசைஇய - ஓய்ந்த; சீறடி - சிறிய அடி.

33. கல்லா இளைஞர் - தம் தொழிலையன்றி வேறொன்றையும் அறியாத இளைஞர்; தைவர - வருட.

34. பொன் வார்ந்து அன்ன - பொன் கம்பியினை ஒத்த; புரி - முறுக்கு.

35. சீறியாழ் - சிறிய யாழ்; இடவயின் - இடப் பக்கத்தே; தழீஇ தழுவி; அளபெடை.

36. நைவளம் - நட்டபாடை என்னும் ஒருவகைப் பண் ; 'நைவளம் என்பது நட்டபாடை' — பிலங்கலந்தை 1390. இதனை இக்காலத்தில் 'நாட்டைக் குறிஞ்சி' என்று வழங்குவர் ; பழுநிய - முற்றுப்பெற்ற ; பாலை - பாலைப்பண்.

37. கைவல் - இயக்குதலில் வல்ல ; கடனறிந்து - முறைமையினை அறிந்து.

38. வள்ளியோர் - வள்ளல்கள் ; நசைஇ - விரும்பி, அளபெடை.

39. துனி - வெறுப்பு ; கூர் - மிகுதி ; எவ்வம் - துன்பம் ; ஆற்றுப் படுப்ப - வறுமையை ஒழிப்பதற்குரிய வழியிலே செலுத்த.

40. முனிவு இகந்து இருந்த - வழிநடை வருத்தம் தீர்ந்திருந்த; முதுவாய் - பேரறிவினைத் தன் தொழிலின்கண் வாய்க்கப் பெற்ற.

41. குறைய - துணிபடும்படி ; ஒதுங்கி - நடந்து.

42. கழுநீர் - செங்கழுநீர் மலர் ; கயவாய் - பெரிய வாய்.

43. பைங்கறி - பசிய மிளகுக் கொடி ; நிவந்த - படர்ந்த.

45. விளையா இளங்கள் - முற்றாத இளைய தேன் ; மெல்குபு - மென்று.

46. குளவி - காட்டு மல்லிகை ; பாயல் - படுத்தல், துயில்.

47. குடபுலம் - மேற்கேயுள்ள நாடு, சேர நாடு : ஒன்னார் - பகைவர் ; மருமான் - குடியிலுள்ளோர்.

48. வாங்குவில் - வளைந்தவில்.

49. எழு உறழ் - கணைய மரத்தினும் திண்மை மிக்க ; குட்டுவன் - சேரன் செங்குட்டுவன்.

50. வஞ்சி - சேரர் தலைநகரமாகிய வஞ்சிமா நகர் ; வறிது - சிறிது; அதாஅன்று - அதுமட்டுமல்லாமல்.

51. நறவு - தேன் ; உறைக்கும் - துளிக்கும் ; நாகு - இளமை ; நுணவத்து - நுணாமரத்தினது.

52. குறுந்துணி - குறுகிய மரக்கட்டை ; அயில் - கூர்மை ; பொருத - குடைந்த.

53. கைபுனை - கைத்தொழில் திறம் வாய்ந்த.

54. செய்பூங் கண்ணி - நெட்டியாற் செய்த பூவினையுடைய தலை மாலை.

55. நோன்பகடு-வலிமை மிக்க எருது; உமணர்-உப்பு வாணிகர்.

56. மகாஅர் - மகவுகள், பிள்ளைகள்.

57. நகாஅர் - நகைப்பு, இங்கு, பற்களுக்கு ஆகுபெயர்; நளிநீர் முத்தம் - செறிந்த நீர்மையை யுடைய முத்துக்கள், கடலில் தோன்றிய முத்துக்கள்.

58. எருந்தின் - கிளிஞ்சலின்.

60. உளரியல் ஐம்பால் - அசைகின்ற இயல்பினையுடைய (ஐந்து பகுதிகளையுடைய) கூந்தல். மகளிர் கூந்தலை முடிக்கும் முறை ஐவகைப்படும் என்பர். அவை: குழல், அளகம், கொண்டை; பனிச்சை, துஞ்சை என்பன.
உமட்டியர் - உப்பு வாணிகரின் மனைவியர்.

61. கிளர் பூண் - விளங்குகின்ற அணிகலன்கள்.

62. தத்துநீர் - தாவுகின்ற நீர்; வரைப்பு - எல்லை.

63. தென்புலம் - தெற்குத் திசையில் உள்ள நாடு.

64. மண்மாறு கொண்ட - நிலத்தை மாறுபாட்டாலே (பகைமையினால்) கைப்பற்றிய.

65 கண் ஆர் - கண்ணுக்கு நிறைந்த.

67. மறுகு - தெரு; மதுரையும் வறிதே - மதுரை தரும் பரிசும் சிறிதாயிருக்கும்.

68. நிவந்த - நின்று வளர்ந்த.

69. துறுநீர் - நெருங்கி வளரும் இயல்புடைய; துணை - இணை; கோதை - மாலை.

70. ஓவத்தன்ன - ஓவியத்தை வரைந்ததைப் போன்ற; மருங்கு - பக்கம்.

71. கோவத்தன்ன - இந்திர கோபத்தைப் போன்ற. கொங்கு - தாது.

73. திருமுகம் - அழகிய முகம்.

74. ஆசில் - குற்றமற்ற ; அரக்கு - சாதிலிங்கம்.

75. கொட்டை - பொகுட்டு.

76. ஏமம் - காவல் ; தழீஇ - தழுவி ; அளபெடை.

77. காமரு தும்பி - விருப்பத்துடன் கூடிய தும்பி ; காமரம் - சீகாமரம் என்னும் ஒருவகைப் பண்.

78. தண்பணை - குளிர்ச்சிமிக்க மருதநிலம் ; தழீஇய - தழுவிய- சூழ்ந்த ; அளபெடை ; தளரா - நீங்காத, நிலையான ; இருக்கை - குடியிருப்பு.

79. குணபுலம் - கீழ்த்திசையிலுள்ள நாடு.

80. எயில் - மதில் ; உருமு - இடியேறு ; சுவல் - கழுத்து.

81. தூங்கு எயில் - இயங்கும் கோட்டை.

83. ஓடாப் பூட்கை - தன்னிடத்து வாழும் மக்கள் பிறிதொரு இடத்தை நாடி ஓடாமைக்குக் காரணமாகிய மேற்கோள்.

84. வானம் - மழை ; கவான் - பக்கம் ; கவாஅன் - அளபெடை.

85. மஞ்ஞை - மயில் ; கலிங்கம் - ஆடை.

86. அணங்கின் - அழகின் ; ஆவியர் பெருமகன் - ஆவியர் குடியில் தோன்றிய பெரிய மகன்.

87. சுரும்பு - வண்டுகள்.

88. நறுவீ - நறிய பூக்கள் ; உறைக்கும் - தேனைத் துளிக்கும் : நாகம் - சுரபுன்னை மரங்கள்.

89. சிறுவீ முல்லைக்கு-சிறிய பூக்களையுடைய முல்லைக் கொடிக்கு.

90. பிறங்கு - மிகுகின்ற.

91. கறங்கு - ஒலிக்கின்ற.

92. வாலுளைப் புரவி - வெண்மையான தலையாட்டத்தை யுடைய குதிரை.

93. ஈர நன்மொழி - அருள்கனிந்த நன்மை தரத்தக்க சொற்கள்.

95. கழல் தொடி - உழலுகின்ற வாகுவலயம் ; நிழல் - ஒளி.

96. நீலம் - நீலமணி ; கலிங்கம் - ஆடை.

97. ஆலமர் செல்வன் - சிவபெருமான், ஆலமரத்து அடியில் தட்சிணாமூர்த்தி வடிவில் அமர்ந்துள்ள சிவபெருமான்.

98. சாவம் - வில், சாபம் என்ற வடசொல்லின் திரிபு ; சாந்து - சந்தனம்.

99. ஆர்வ நன்மொழி - விருப்பத்தை யுண்டாக்கும் நன்மை தரத்தக்க சொற்கள்.

100. கவினிய - அழகுடைய

101. அமிழ்துவிளை - அமிழ்தத்தின் தன்மையினைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற ; தீங்கனி - இனிய பழம்.

103. அரவம் - ஆரவாரம்; கரவாது - மறைக்காது.

104. நட்டோர் - நட்புச் செய்தோர், நண்பர் ; நடைப் பரிகாரம் - இல்லறம் நடத்துவதற்கு வேண்டும் பொருள்.

105. முட்டாது - தடையில்லாது ; முனை - போர்முனை.

106. வளி துஞ்சும் - காற்றுத் தங்கும்.

107. நளி - செறிந்த.

108. கஞலிய - நெருங்கிய ; நாகம் - சுரபுன்னை.

109. குறும்பொறை - குறிய மலைகள், குன்றுகள் ; கோடியர் - கூத்தாடுவோர்.

110. காரிக் குதிரை - காரி என்னும் பெயருடைய குதிரை.

112. எழு சமர் - தம்மேலே வருகின்ற போர்கள் ; எழு - கணைய மரம் ; உறழ் - மாறுபட்ட,

113. எழுவர் - மேலே கூறப்பட்ட கடைச் சங்க கால வள்ளல்கள் எழுவர் ; ஈகைச் செந்நுகம் - கொடையாகிய செவ்விய பாரம்.

114. வியலகம் - பரந்த உலகம்.

115. ஒருதான் தாங்கிய - ஒருவனாகிய தானே பொறுத்த.

116. ஆரம் - சந்தனம்.

117. தோள் புணை - தோள்களுக்குத் தெப்பமாகும்படி.

118. போக்கரு - அழித்தற்கு அரிய.

120. நன்மாவிலங்கை - நல்ல பெருமையையுடைய மாவிலங்கை; நல்லியக் கோடன் நாட்டில் சிறப்புற்று விளங்கிய நகரங் களுள் ஒன்று.

122. துப்பு - வலி ; ஓவியர் - ஓவியர் குடியில் தோன்றியவர்.

125. பல்லியம் - பல்வகைப்பட்ட இசைக் கருவிகள்; கோடியர் - கூத்தர்.

129. முன்னாள் - சில நாட்களுக்கு முன்பு.

131. நோனாது - பொறுத்தலாற்றாது.

132. புனிற்று நாய் - ஈன்ற அணிமையையுடைய நாய்; அட்டில் - சமையலறை.

333. காழ் - கழிகள் ; கணச்சிதல் - திரளான கரையான்.

134. பூழி - புழுதி ; காளாம்பி - காளான்.

135. ஒல்குபசி - வருந்தும் பசி.

136. வள்ளுகிர் - பெரிய நகத்தால் ; குறைத்த - கிள்ளிய.

137. வேளை - வேளைக் கீரை.

138. மடவோர் - அறிவில்லாதவர் ; கடை அடைத்து - வீட்டின் வாயிற் கதவை அடைத்து.

139. மிசையும் - தின்னும் ; ஒக்கல் - சுற்றம்.

140. அழிபசி - மானம் அறிவு முதலியன அழிதற்குக் காரண மாகிய - பசி ; வீட - கெட ; பொழி கவுள் - மதம் பொழி கின்ற கன்னம்.

141. தறுகண் பூட்கை - பகைவரை விரைவில் கொல்லுதலாகிய மேற்கோள்.

143. அவணின்று - அவ்விடத்திலிருந்து.

145. செம்மல் உள்ளம் - பெருமிதம் பொருந்திய உள்ளத்துடனே.

147. தமனியம் - பொன்.

148. முண்டகம் - கழிமுள்ளி ; கழாஅல - பூக்க.

149. நித்திலம் வைப்பவும் - முத்துக்களைப் போல அரும்பவும்.

150. நிமிர்தர - ஏற.

152. வைப்பு – ஊர்கள் ; மதிலொடு பெயரிய - மதில்களையுடைய 'எயில்' என்னும் பெயரைப் பெற்ற பட்டினம். எயிற் பட்டினம் என்பது ஓய்மாநாட்டில் சிறப்புற்று விளங்கிய துறைமுகம். படரின் - செல்வீராயின்.

155. வீங்குதிரை - மிகுகின்ற அலை.

156. மாட்டி - எரித்து.

157. மதி ஏக்கறூஉம் மாசறு திருமுகம் - இத்தகைய களங்கமற்ற அழகிய திருமுகத்தை யாம் பெற்றிலமே என்று திங்கள் விரும்புதற்குக் காரணமான அழகிய முகம்.

158. நுதிவேல் - வேல்நுனி ; நுளைமகள் - நெய்தல் நிலத்து வாழும் மகள்.

160. கிடங்கில் - நல்லியக் கோடனின் தலைநகரம்.

161. தெரியல் - மாலை ; தகையோன் - அழகுடையவன்.

162, அறல் குழல் பாணி - தாள அறுதியையுடைய குழ்லோசையின் தாளத்திற்கேற்ப ; தூக்கி - ஆடி.

163. வறல் குழல் சூட்டு - சுடப்பட்ட உலர்ந்த குழல் மீன் ; வயின் வயின் - வீடுதொறும் வீடுதொறும்.

164. பைங்கனே - பசிய அரும்பு.

165. காயாக் கணமயில் அவிழவும் - காயாம்பூக்கள் திரண்ட மயிலின் கழுத்தைப் போலப் பூக்கவும்.

166. முசுண்டை - ஒருவகைக் கொடி ; கொட்டம் - பனை ஈச்ச மரங்களின் ஓலையாற் பின்னப்படும் சிறு பெட்டி.

167, கொல்லை நெடுவழி - புன்செய் நிலத்திடத்துக் கிடந்த நெடிய வழி.

169. முல்லை சான்ற முல்லையம் புறவு - முல்லை ஒழுக்கம் ( இருத்தலாகிய கற்புநெறி ) பொருந்திய முல்லைக்கொடி படர்ந்த அழகினையுடைய காட்டில்.

170. விடர் - மலை முழைஞ்சு,

173. விறல்வேல் வென்றி வேலூர் - வெற்றியையுடைய வேலாலே வெற்றி பொருந்திய வேலூர்.

174. உலைஇய - வருத்தமுற்ற ; குரம்பை - சிறுகுடிசை.

175. எயிற்றியர் - பாலைநில மகளிர்.

176. தேமாமேனி - இனிய மாமரத்தின் தளிர் போன்ற நிறம்.

177. ஆமான் - ஒருவகை விலங்கு.

180. குட்டம் - குளம்.

181. மணிச்சிரல் - சிச்சிலிப் பறவை.

182. பாசடை - பசிய இலை.

184. கொங்கு – தேன்.

187. அருகா - குறைதலில்லாத.

188. அந்தண் கிடங்கு - அழகிய குளிர்ச்சியுடைய கிடங்கு.

191. சிறுபுறம் - சிறிய முதுகு.

193. இருங்காழ் - கரிய வயிரமுடைய.

194. அவைப்பு - குற்றுதல் ; அமலை - கட்டி.

195. கவைத்தாள் - இரண்டாகப் பிரியும் கால் ; அலவன் - நண்டு.

197. கரு மறிக் காது - வெள்ளையாட்டுக் குட்டிகளை அணிந்த காதுகள்.

199. உகைத்து - காலாலே உதைத்து.

200. அருவி - மதநீராகிய அருவி.

201. சாறு - விழா ; அயர் - நடத்துகின்ற.

202. சிறிது நணியது - மிக அண்மையில் உள்ளது.

203. பொருநர் - வைகறைப் பொழுதில் கிணைப்பறை கொட்டுவோர்.

205. கடவுள் மால்வரை - தெய்வங்கள் வாழுகின்ற பெருமையுடைய மலை ; கண்விடுத்தன்ன - ஒருகண் விழித்துப் பார்த்தாலன்ன.

206. அருங்கடை - பிறர் புகுதற்கு இயலாத தலைவாயில்.

209. செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் - எக்காலமும் தன்னுடனே நெருங்கி விளங்குன்ற தலைமையினை உடைய சான்றோர் என்றும், கல்வி கேள்விகளாலும் நல்லொழுக்கத்தாலும் நிறைந்து சிறப்புற்று விளங்கும் சான்றோர் என்றும் கூறலாம்.

211. ஆண் அணி - வீரரின் அணிவகுப்பு.

212. வாள் மீக்கூற்றத்து வயவர் - வாள்வலியாலே மேலாகிய சொல்லையுடைய மறவர் ; புகழ்ச்சிக்குரிய வெற்றி வீரர்கள் என்பது கருத்து.

214. ஒருவழிப் படாமை - பெண்ணேவல் செய்து ஒழுகாமை.

215. அரியேருண்கண் - செவ்வரிகளையுடைய அழகிய மையுண்ட கண்கள்.

216. அறிவு மடம்படுத்தல் - அறிந்தும் அறியாதிருத்தல்,

217. வரிசை அறிதல் - பரிசிலரின் சிறப்பினையும் தகுதியினையும் அறிதல்.

221. ஊகம் - கருங்குரங்கு.

222. அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவு - அழகிய தண்டினைச் செறியச் சுற்றின நெகிழவேண்டிய இடத்தே நெகிழ்ந்தும் இறுகவேண்டுமிடத்தே இறுகியும் நரம்பு தொடுக்கப்பட்ட வார்க்கட்டு ; குரங்கின் கையைப் பாம்பு சுற்றிக்கொண்டதை யாழினுடைய கரிய தண்டினிடத்துச் சுற்றப்பட்ட வார்க்கட்டிற்கு உவமையாகக் கூறப்பட்டமை கருதத்தக்கது ; திவவு - வார்க்கட்டு.

224. வயிறு - பத்தரின் நடுவிடம் ; இரண்டு விளிம்பினையும் சேரத் தைத்து முடுக்கிய ஆணிகளின் குமிழ் நிரலாக அமைந் திருத்தலை மணிகளை வரிசையாக வைத்ததனோடு உவமித் துள்ளார் ; அகளம் - தாழி ; இங்கு யாழின் உறுப்பாகிய குடம்போன்ற வடிவுடைய பத்தருக்கு உவம ஆகுபெயர்.

225. கானக்குமிழ் - காட்டிலுள்ள குமிழம்பழம். குமிழம்பழம் யாழின்மேல் இறுகக்கட்டிய தோலுக்கு உவமை. கடுப்ப - உவமவுருபு.

226. பச்சை - மேல் போர்த்த தோல் ; தேம்பெய்து - தேன் ஒழுகுகின்ற.

227. இலிற்றும் - துளிற்றும்.

228. கேள்வி - இசை.

229. இயம் - இசைக்கருவியாகிய யாழ் ; குரல் குரலா - செம்பாலை என்னும் பண் ; குரல் - எழுவகைப் பண்களுள் ஒன்று ; எழுவகைப் பண்கள் : குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. குரல் குரலாகப் பாடும் பண்ணினைச் ‘ செம்பாலை ’ என்பர்.

230. நூல்நெறி - இசைநூல் கூறுகின்ற முறை; ஆனது - ஓயாமல், பலமுறையும்.

231. முதுவோர் - ஐம்பெருங் குரவர் ; முகிழ்த்த - குவித்த.

232. இளையோர் - வீரர்.

233. ஏரோர்க்கு - ஏரினையுடைய குடிமக்கட்கு; நிழன்ற - நிழலினைச் செய்யும்.

234. அழன்ற - வெம்மையுடைய.

236. காம்பு சொலித்தன்ன அறுவை - மூங்கில் தோல் உரித் ததைப் போன்ற மென்துகில் ; உடீஇ - உடுக்கச் செய்து ; அளபெடை.

238. காவெரி யூட்டிய கவர்கணைத்தூணிப் பூவிரி கச்சைப் புகழோன் தன்முன் - காண்டவ வனத்தைத் தீக்கு இரை யாக்குவதற்கு எய்த அம்புகளைக் கொண்ட புட்டிலையும் பூத்தொழிலையுடைய பரந்த கச்சையினையுமுடைய அருச் சுனனின் அண்ணனாகிய வீமன்.

240. பனிவரை மார்பன் - இமயம் போன்ற மார்பை யுடையவனாகிய வீமன் ; பயந்த - இயற்றிய; நுண்பொருட் பனுவல் - நுட்பமாகிய பொருளையுடைய சமையற்கலை நூல்;

241. வழாஅ - பாக சாஸ்திரம் பிறழாத ; அடிசில் - உணவு.

242. கோண்மீன் - கோள்களும் விண்மீன்களும்

245. ஆனா - குறைதல் இல்லாத.

246. தெவ்வுப் புலம் - பகைவர் நாடு.

247. மன்னெயில் - நிலைபெற்ற அரண்கள் (மதில்).

248. புன்கண் - துன்பம், வறுமை ; நயவர் - விரும்பி வந்தவர்.

249. வயவர் - படைத்தலைவர் ; வான்கேழ் - உயர்ந்த நிறம்.

252. வடுவாழ் நோன் குறட்டு - வடுக்கள் பொருந்திய வலிமை மிக்க குறட்டிடத்து ; குறடு - ஆரங்களைத் தைப்பதற்குரிய உருளையின் நடுவிடத்துள்ள ஓர் உறுப்பு ; நேமி - உருளை.

254. சிந்துகின்ற அரும்பினையுடைய முருக்கினுடைய வாளனாவி வளர்ந்த கொம்பினிடத்து பூங்கொத்து நன்கு மலர்ந்த தோற்றம் போல என்பது அரக்கு வழித்த போர்வைக்கு உவமை.

256. போர்வை - தேர்த்தட்டின் மேல் பரப்பிய பலகை.

257. கருந்தொழில் வினைஞர் - வலிய தொழிலைச் செய்யும் தச்சர்.

259. மா - குதிரை; மதன் - வலிமை.

260. வாள் - வெண்மை; பாண்டில் - வெள்ளை எருது; தரீஇ - தந்து.

262. துளங்கியல் - ஆடிய சாயல்.

263. அகிலுண - அகிற் புகையை ஊட்டுவதற்கு.

264. கலாபம் - தோகை; மஞ்சு - மேகம்.

265. துணி மழை - தெளிந்த மேகம்; துயல் கழை - அசைகின்ற மூங்கில்.

266. எறிந்து உரும் இறந்த - இடியானது தான் செல்லுதற்கு இடித்துச் சென்ற; சென்னி - உச்சி.

268. செல்லிசை நிலைஇய பண்பின் - ஒருவரிடத்தும் நிலைத்து நிற்காத இயல்புடைய புகழ், தன்னிடத்தே நிலைபெற்று விளங்குவதற்குக் காரணமாகிய பண்பினையுடைய

269. நயந்து - விரும்பி; நீர் - நீயிர்; நல்லியக்கோடன் - பாட்டுடைத் தலைவன்.

---

# 2 புறநானூறு

எட்டுத் தொகை நூல்களுள் புறநானூறு ஒன்றாகும். புறத்திணை பற்றிய நானூறு செய்யுட்களின் தொகுப்பாகும்.

இன்பத்தைப் பற்றியது அகம் எனவும், அறத்தையும் பொருளையும் பற்றியது புறம் எனவும் கூறப்படும். இந்நூல் புறத்திணையின் பகுதிகளாகிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைகளின் பொருளை விளக்கும் பாடல்களைக் கொண்டது. இதனைப் புறம் எனவும் புறப்பாட்டு எனவும் வழங்குவர்.

புறநானூற்றில் உள்ள பாடல்களைப் பாடிய புலவர்கள் பொதுவாகக் கடைச் சங்கப் புலவர் எனக் கூறப்படுபவராயினும், அவர் அனைவரும் ஒரே காலத்தவர் அல்லர்; ஒரே இனத்தவருமல்லர், இப் புலவர்களுள் பலர் பலவகைத் தொழில் புரிந்துவந்தனரென்பது குறிப்பிடத்தக்கதாகும். மன்னர்களும் புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றைப் பாடியுள்ளனர்.

இந்நூல் தமிழகத்து மூவேந்தர், சிற்றரசர், படைத் தலைவர், வீரர், அமைச்சர், கடையெழு வள்ளல்கள், கடைச் சங்க காலப் புலவர்கள் முதலியோருடைய வரலாறுகளையும், தமிழ் மக்களின் சமுதாய வாழ்க்கையினையும், இன்ன பிற செய்திகளையும் தெரிந்து கொள்ளுவதற்குப் பயன்படுகிறது.

இங்குப் பாடப் பகுதியாக வந்துள்ள பாடல்களைப் பாடியவர் பெருஞ் சித்திரனார் என்னும் புலவராவர். இவர் ஒவ்வொரு பொருளையும் கூர்ந்து நோக்கும் இயல்பினர்; இவர் தம் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உள்ளத்தைக் கவரும் வகையில் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டுவதில் வல்லவராக விளங்கினார்,

பெருஞ் சித்திரனார் பெருமித உள்ளம் படைத்தவர். அன்பில்லாதவர் எத்துணைச்செல்வராயினும் அவர்களை இவர் மதிப்பவரல்லர். தம்முடைய தாய், குழந்தைகள், மனைவி, சுற்றத்தார் ஆகியோர் பசியால் வருந்துவதை இவர் குமணனுக்குக் கூறும் பகுதிகள் கற்போர் உள்ளத்தை உருகச் செய்வனவாகும். இவர் கடையெழு வள்ளல்களின் வரலாற்றைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார். அது சிறுபாணாற்றுப் படையில் கூறப்படும் கடையெழு

வள்ளல்களின் வரலாற்றைப் போலச் சிறப்புற்று விளங்குகின்றது. பெருஞ்சித்திரனுரைப் போற்றி ஆதரித்த புரவலன் குமண வள்ளல். குமணன் நல்கிய பரிசிலேத் தம் மனைவியிடத்துக் கொடுத்த புலவர் கூறியுள்ள கருத்துக்கள் 'பரிசில் வாழ்க்கையின்' பெருமையையும் பண்பினையும் தெள்ளத் தெளிய விளக்குகின்றன. பெருஞ்சித்திரனுர் அதியமான் நெடுமான் அஞ்சியிடம் தம்மை 'வாணிகப் பரிசிலன்' எனக் கருதவேண்டா என்று பாடியுள்ள பாடல் அவரது வறுமையிலும் செம்மை வாய்ந்த உள்ளத்திற்குச் சிறந்ததொரு சான்ருகும். இளவெளிமானை இகழ்ந்தும், வெளிமானின் இறப்பிற்குப் பெரிதும் வருந்தியும் பாடியுள்ள பாடல்கள் பெருஞ்சித்திரனரின் பண்பினையும் திறத்தையும் தெளிவாக விளக்குகின்றன.

## பாடப்பகுதியில் வரும் திணைகளும் துறைகளும்.

### 1. பாடாண் திணை :

பாடுதற்குத் தகுதியமைந்த தலைமகனுடைய வீரம், கொடைப் பண்பு முதலிய ஒழுகலாறுகளைச் சிறப்பித்துக் கூறுதல்.

*(1) வாழ்த்தியல் :* தலைவனை வாழ்த்துதல்.

*(2) பரிசில் கடாநிலை :*

பரிசில் பெறச் சென்ற புலவர் பாணர் முதலியோர், தலைவனின் சிறப்பியல்களைப் புகழ்ந்து பாடிப் பரிசில் தருமாறு வேண்டுவது.

*(3) பரிசில் துறை :*

புலவர் தாம் பெறக் கருதிய பரிசில் பற்றிக் கூறுவது.

*(4) பரிசில் விடை :*

தலைவனைப் புகழ்ந்து பாடிய புலவர் முதலியோருக்குத் தலைவன் பரிசில் வழங்கி விடை கொடுத்தனுப்புதல்.

### 2. பொதுவியல் :

வெட்சி முதலிய புறத்திணைப் பொருள்களுக்குப் பொதுவாகிய பண்புகளையும், ஒழுகலாற்றினையும் கூறுவது பொதுவியலாகும்.

கையறு நிலை :

தலைவன் இறந்தமையால் மனக் கலக்கமுற்ற புலவர் முதலியோர், தலைவனது பிரிவிற்குப் பெரிதும் வருத்தமுற்று, அவனுடைய சிறந்த பண்புகளை நினைத்துப் பாடி இரங்குதல்.

## 1

கடிப்பு - குறுந்தடி. இகுப்பவும் - அறையவும். வால் - வெள்ளிய. வளை – சங்கு. துவைப்பவும் - முழங்கவும். அரசு - சேர சோழ பாண்டிய அரசர். அண்ணல் - தலைமையுடைய. கறங்கு - ஒலிக்கும். அலைத்து - உருட்டி. பறம்பு - பறம்புமலை, பிறங்கு மிசை - உயர்ந்த உச்சி. கொல்லி - கொல்லி மலை. காரி - காரி என்னும் குதிரை; மலையமான் திருமுடிக்காரியினுடைய குதிரையின் பெயர் காரி என்பர். மாரியீகை - மழையைப் போன்று குறியெதிர்ப்பை நோக்காது ஈயும் வள்ளல் தன்மை. ஊரா தேந்திய குதிரை - ஊர்ந்து செலுத் தாது உயர்ந்து விளங்கும் குதிரை மலை. கொடும்பூண் - வளைந்த ஆரம் முதலிய அணிகலன்கள். எழினி - எழினியாகிய அதியமானும். ஈர்ந்தண் - மிகக் குளிர்ந்த. சிலம்பு - மலைப்பக்கம். இருள் தூங்கு - இருள் செறிந்துள்ள. நளிமுழை - பெரிய குகையினையும். கடவுள் - தெய்வம். சிமை - சிகரம். பெருங்கல் - மலை. திருந்து மொழி - திருந் திய சொல்லையுடைய. மோசி - உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்ற புலவர். உள்ளி வருநர் - நினைந்து ஆர்வத்தோடு வருபவர். உலைவு - வறுமை. நனி - மிக. தள்ளாது - தவிராது. தகைசால் - வரிசை அறிந்து வழங்கும் வள்ளல் தன்மை. கொள்ளார் - பகைவர். எழுவர் - பாரி, ஓரி, மலையமான் திருமுடிக்காரி, அதியமான், பேகன், ஆய், நள்ளி ஆகிய கடைச்சங்க கால வள்ளல்கள் எழுவர். அழிவர- கண்டார்க்கு அருளுணர்வு பெருக்கெடுக்குமாறு. அற்றம் - துன்பம். கழை - மூங்கில். வழை - சுரபுன்னை. ஆசினி - ஒருவகைப் பலா. கடுவன் - ஆண் குரங்கு. துய்த்தலை மந்தி - பஞ்சிபோலும் மென்மை யான மயிரை யுடைய பெண் குரங்கு. கையிடூஉ - கையினுல் சைகை செய்து, அதிராயாணர் - குறைதலில்லாத புதிய வருவாய். முதிரத் துக் கிழவ - முதிரம் என்னும் மலைக்குத் தலைவனே. இசைமேந் தோன்றிய வண்மை - புகழ் மேம்பட்ட வள்ளல் தன்மை.

மாய்ந்த கடையெழு வள்ளல்களைப் போல எமக்கு ஈயென் றமையால் இப் பாடல் இயன்மொழி வாழ்த்தாயிற்று.

## 2

தீர்தல் செல்லாது - இன்னும் போகவில்லை, புலந்து - வெறுத்து. கோல் - கைத்தடி. கதுப்பு - கூந்தல். கண்துயின்று - கண்ணொளி மங்கி. முதிர்வு - மூப்பு. பசந்த மேனி - வேறுபட்ட நிறம். படரட - நினைவுவருத்த. மருங்கு - இடை. குறுமாக்கள் - சிறு பிள்ளைகள். கொய்கண்ணகைத்த - முன்பு பறிக்கப்பட்ட கண்ணிலே கிளைத்த. அவிழ்ப்பதம் - சோறாகிய உணவு. பாசடகு - பசிய இலை. உடுக்கை - உடை, அறம்பழியா - தாங்களுற்ற வறுமைக்காக நொந்து அறக் கடவுளைப் பழித்து. துவ்வாள் - உண்ணுதவள். என் வெய்யோள் - (என்னை விரும்பியவளாகிய) என் மனைவி. ஐவனம் - மலைநெல். ஏனல் - தினை. கருவி - தொகுதி. தலைஇ - சொரிந்து. இரங்கிய — வருத்த முற்ற. தவிர்ந்துவிடு பரிசில் - விருப்பின்றிக் காலம் தாழ்த்து ஈயும் பரிசு. குன்றியும் - குன்றிமணி அளவினதாகிய சிறிய பரிசுப் பொருளையும். விழுத்திணை - சிறந்த குடி.

## 3

உருகெழு - அச்சம் நிறைந்த. மிசைந்த - தின்ற. முளிந்த புல் - காய்ந்துபோன புல். குழைப்ப - தளிர்க்க. ஏறு - இடி. கசிவு - வேர்வை. அவிழ் - சோறு. குய் - தாளிப்பு. துவை - துவையல். நவின்ற - பயின்ற. இரீஇ - இருத்தி. பாடுநர் கடும்பு - பாடுவாரது சுற்றம். பொலங்கலம் - பொன்னுல் செய்யப்பட்ட அணிகலன்கள். நட்டோர் நட்ட - தன்னுடைய நண்பரினும் எம் மொடு நட்புக் கொண்ட, மட்டார் மறுகு - மது நிறைந்த தெரு. நுவலுநர் - சொல்லுவார். வல்விரைந்து - கடிதாக விரைந்து. துரப்ப- செலுத்த. எள்ளுற்று - இகழ்ந்து. உணு - உணவு. புல்லுளை - புல்லிய தலையாட்டம் போன்ற. பல்மாண் - பலமுறை. கடைஇ - வேண்டி. ஊழின் - முறையின். மறம் - வீரம். நுந்தை - நும்தந்தை. பொடிந்த நின் செவ்வி - வெறுப் புற்றதனுல் உண்டான உன் அழகு. மல்லல் - வளம். வல்லே - விரைவில். படுதிரை - ஒலிக்கின்ற அலை, அத்தை- அசை. ஏத்துகம் — வாழ்த்துவோம்.

## 4

அழுவம் - கடல். கொண்மூ - மேகம். குழீஇ - குழுவி. தோன் றல - தோற்றத்தையுடையவாய். சூல் - கருப்பம். உருமுரறும் - இடி யிடிக்கும். கருவி — தொகுதி. பெயல் - மழை. என்றூழ்க் காலை - கோடைக் காலத்து. மன்பதை - உயிர்த்தொகுதி. மலிநீர் - மிக்க

வெள்ளம். செம்மலை - தலைமையையுடைய. ஆடவர் -ஆறலைகள்வர். சென்றுதலை வருந அல்ல - போய் முடிவன அல்ல. தெவிட்டு - அசையிடும். அருஞ்சுரம் - செல்லுதற்கு அரிய பாலைவழி. இறந் தோர்க்கு - பிரிந்து சென்றவருக்கு. தலைப்பெயர - கழிக. கண்பொறி- கண்ணொளி. கசிவு - இரக்கம். துன்புறுவி- துன்பப்படுவோள். தாள்- முயற்சி. படு - உண்டாகிய. மருள - வியப்ப. பனைமருள் - பனையை யொத்த. வரை - மலை. நோன்பகடு - வலிய களிறு. ஓடை - முக படாம். படுமணி இரட்ட - பக்கத்திலுள்ள மணிகள் ஒன்றற் கொன்று மாறி மாறி ஒலிக்க. செம்மாந்து - தலைமைப் பாடாகிய பெருமிதங் கொண்டு. நசைஇ - விருப்பம். துரப்ப - செலுத்த. தர - முன்னே இழுத்துக்கொண்டுவர. வல்லே - விரைவில். அகலம் - மார்பு. மாணிழை - மாட்சிமைப் பட்ட ஆபரணங்கள். புல்லுதொறும் - தழுவுந்தொறும். புகல - விரும்ப. இரங்கும் - முழங்கும்.

### 5

புரவலை - காத்தல் வல்லாய். கடிமரம் - காவல் மரம்.

### 6

நயந்து - விரும்பி. பன்மாண்கற்பின் - பல குணங்களும் சிறத்தல் மிக்க கற்பினையுடைய. கிளை - சுற்றம். கடும்பு - சுற்றம் கடு - மிக்க. நெடுங்குறி யெதிர்ப்பு - திருப்பித் தருவார் என்ற நம்பிக்கையோடு தந்துதவுவது. இன்னோர்க்கு - இன்ன தன்மையார்க்கு. வல்லாங்கு வாழ்தும் - வல்லவர்களாகப் பொருளைப் போற்றி வாழ்வோம். என்னாது - என்று கருதாது.

### 7

செல்கேம் - யாம் போவோம். பருகுவன் அன்ன - கண்ணாற் பருகுவதுபோன்று. அகனக வாரா - உள்ளம் மகிழ வாராத. முகனழி- முகந்திரிந்த. தாளிலாளர் - முயற்சி இல்லாதவர். வேளாரல்லர் - விரும்பார் அல்லர். வரிசை - தரம். மீளிமுன்பு - வீரம்மிக்க வலிமை. யாளி - ஒரு விலங்கு. உள்ளம் - மேற்கோள். வெள்ளென - வெளிப் படையாகத் தோன்ற. அலமருவோர் - மனம் கலங்கி உழலுவோர். வன்கனி என்றது உள்ளம் உருகிக் கொடாத பரிசிலை.

### 8

ஒழிய - கழிய. நயந்து - அன்புற்று. ஈங்கனம் - இவ்வாறு. யாங்கு - எப்பரிசால், எப்படி. வாணிகப் பரிசிலன் - ஊதியமே கருதும்

பரிசிலன். பேணி - விரும்பி. துணையளவு - கல்வி பண்பு முதலிய சிறப்புக்களின் அளவினை அறிந்து.

## 9

நீடுவாழ்க - நெடுங்காலம் வாழ்க. கடை - வாயில். பசிநாட் கண்ணே - பசியையுடைய நாட்காலத்தே. உரவோன் - அறிவை யுடையோன். பனுவல் - கேள்வியாகிய பயிர். நச்சி - விரும்பி. நசை - விருப்பம். குழசி - பானை. அழற்பயந்தாங்கு - எரி புறப்பட் டாற்போல. ஆர்க - உண்க. ஊழின் - முறையான். உருப்ப வெருக் கிய மகளிர் - மார்பில் கடுமையாக அறைந்துகொண்ட மகளிர். வளை - வளையல். ஒக்கல் - சுற்றம். களரி - களர்நிலம். விடலை - வீரன். ஒற்றிய – வீழ்த்திய. பிழைப்பின் - தப்பிவிடுமாயின். மண்டு புனல் - கடலிலே விரைந்துசென்று கலக்கும் ஆற்றுநீர்.

## 10

தாழி - பிணங்களைப் புதைக்கப் பயன்படுத்தப்பட்ட பெரிய சால்கள். செவிசெஞ்சேவல் - கழுகின் சேவல். பொகுவல் - ஒரு வகைப் பறவை. கூகை – ஆந்தை. பெட்டாங்கு - விரும்பிய வழியே. பையென்றன - ஒளி மழுங்கின. தோடு - தொகுதி. மருப்பு - யானைத் தந்தம். பேதுறுப்ப - இறப்பை உண்டாக்க. மரங்கவிழ் – மரக்கலம் கவிழ்ந்த. ஆரஞர் - பொறுத்தற்கரிய துன்பம். நீத்தம் - வெள்ளம். அவலமறுசுழிமறுகலின் - துன்பமாகிய மறுசுழியில் சிக்கிச் சுழலு வதினின்றும். தவல் - சாதல்.

# 3. நற்றிணை

பழந் தமிழிலக்கியத் தொகுதியாகிய எட்டுத் தொகையுள் அகப் பொருள் பற்றிய நூல்களுள் நற்றிணை ஒன்றாகும். ஒத்த அன்பின ராகிய தலைவனும் தலைவியும் கொண்ட காதல் பற்றிய ஒழுக்கத்தை அகம் என்பர். நற்றிணை இவ்வகப் பொருள் பற்றிய நானூறு பாடல் கள் கொண்ட தொகைநூல் ஆகும். ஒன்பதடி முதல் பன்னிரண்டடி வரையில் அமைந்த பாடல்கள் இத் தொகையில் சேர்க்கப்பெற்றன. இதனைத் தொகுப்பித்த புரவலன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி என்ப.

இந் நூலுக்குப் பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் என்னும் தமிழறிஞர் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நல்லுரை எழுதி வெளி யிட்டார்.

பழங்காலத் தமிழ் மக்களின் பண்பாட்டையும் நோக்கங்களையும் பழக்க வழக்கங்களையும் காதல் மரபினையும் அரசியல் வாணிகம் தொழில் முதலியன பற்றிய குறிப்புக்களையும் அறிந்துகொள்வதற்குப் புறநானூறு அகநானூறு முதலிய ஏனைய சங்க நூல்களைப் போலவே நற்றிணையும் மிகப் பயன்படுவதாகும்.

அகம், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை கைக்கிளை பெருந்திணை என எழுதிணையாகப் பகுக்கப்படும். குறிஞ்சி அன்பி னாற் கூடுதலாகிய ஒழுக்கத்தை உணர்த்துவது; பிரிவின்கண் ஆற்றி யிருத்தல் முல்லை; ஊடுதல் மருதம்; பிரிவாற்றாமல் கலங்கி இரங் குதல் நெய்தல்; பிரிதல் பாலை; ஒருவரிடம் மட்டும் நிகழும் காமம் கைக்கிளை; இருவரிடத்தும் ஒத்த அன்பு அமையாத - பொருந்தாத- காமம் பெருந்திணை. இவற்றுள் கைக்கிளையும் பெருந்திணையும் நீங்கிய ஐந்தும் அன்பினைந்திணை எனப் போற்றப்படும். நற்றிணை, இவ்வைந்திணை பற்றிய பாடல்கள் கொண்ட நூல் ஆகும்.

1. தலைவன் வரையாமல் பொருள்வயிற் பிரிந்து நெடுந்தொலைவு பிரிந்துசெல்ல, பிரிவாற்றாளாகிய தலைவிக்குத் தோழி சொல்லியது.

சூர் - அச்சம். நனந்தலை - அகன்ற இடம். அடுக்கம் - மலை. கழை – மூங்கில். மாய் – மறையும். நீத்தம் - வெள்ளம். கழைமாய் நீத்தம் - மூங்கிலும் மூழ்கி மறையுமாறு பெருகிய வெள்ளம். தழங்கு-

ஒலிக்கும். ஏறு - இடியேறு; பேரிடி. சந்தின - சந்தன மரங்களை உடைய.

மழை பெய்ய இடித்து மின்னும் என்றதால், கார் கால வரவு உணர்த்தியவாறு.

நெல் அருந்திய யானை கவலையின்றி உறங்குதல்போல் நீயும் உன் கவலை தீர்ந்து மகிழும் வாய்ப்புப் பெறுவாய் என்னும் குறிப்புப் பொருள் உணர்த்தப்பெற்றது.

2. தலைவனைத் தோழி வரைவு கடாயது.

இறவு - இருமீன். பிணர் - சருச்சரை. தடவு - பெருமை. முதல் - அடிப்பகுதி. சுறவு - சுரு. கோடு - கொம்பு. முதிர்பு - முதிர்ந்து. உரவு – வலிமை. சேர்ப்ப - கடற்கரைத்தலைவ! செலீஇய - செல்லும்பொருட்டு. சேறி - செல்லுதி, செல்வாய். நற்கு அறிந்தனை சென்மே – நன்கு அறிந்து செல்க.

பிரியின் வாழாள் என்றதனால், வரைந்துகொண்டு பிரியாமல் வாழுமாறு உணர்த்தப் பெற்றது.

3. சிறைப்புறமாக உழவனுக்குச் சொல்வது போல் சொல்லித் தோழி செறிப்பு அறிவுறுத்தியது.

நிவப்பு - உயர்ச்சி. கண்படை பெருது - உறங்காமல். தடி – தசைத்துண்டு. மிளிர்வை - ஆணத்தில் இடப்படுவது. கழும - நிறைய். மாந்தி - உண்டு. செறு - வயல். நாறுமுடி - நாற்று முடிச்சு என இக்காலத்தில் வழங்குவது. நடுநரோடு – (நாற்று) நடுகின்ற ஆட்களுடன். சேறி - செல்லுதி. அவண - அவ்விடத்தன ஆகிய. சாய் - கோரை. ஓம்புமதி - (பறித்து எறியாமல்) காக்க.

தலைவி தன்அணியாக அவற்றைப் பறிக்கச் செல்ல இயலாத நிலையில் உள்ளாள் என இற்செறிப்பு உணர்த்தினுள்.

4. பிரிவின்போது வாடிமெலிந்த தலைவிக்குத் தோழி சொல்லியது.

பாடு நடை - வருத்தமுள்ள நடை. வழலை - ஒருவகைப் பாம்பு; அந்தப் பாம்பு போன்ற ஓந்தியை ஓதிவழலை என்ருர். நுகும்பு - இளங்குருத்து. கவாஅன் – பக்க மலை. சீறூர் - சிற்றூர். பயநிரை-

பால் தரும் ஆனிரை. சுரன் - பாலைவழி. ஒருத்தல் -- விலங்கின் ஆண்பாற் பெயர்.

சுரம் கடந்து சென்ற தலைவர் நினைக்கவில்லையோ, நினைத்தால் வந்திருப்பாரே என்றாள்.

பிடியும் கன்றும் நீருண்ணுமாறு களிறு உதவி மகிழ்தல் போல், நீயும் உன்னைச் சார்ந்தோரும் மகிழுமாறு தலைவர் அருள்வார் என்னும் கருத்து உட்கொண்டது.

5. இது முல்லைத்திணை; வினைமுடித்து மீளும் தலைவன் தேர்ப்பாகனுக்குச் சொல்லியது; இடைக்காடனார் பாடியது.

வான் - மழை. இகுபு - (கால்) இறங்கி. பாணி - கை. ஞெலிகோல் - தீக்கடைகோல். அதள் - தோல் பறி - பனையோலையால் ஆகிய பாய். நொடை - விற்றல். மடிவிளி - இதழை மடித்துக் குவித்து ஊதும் ஒலி. சிறுதலைத் தொழுதி - சிறிய தலையை உடைய ஆட்டின் மந்தை. அல்கும் – தங்கும். புறவு - முல்லை நிலம். யாணர்- புதுவருவாய்.

# 4. திருக்குறள்

திருக்குறள், உலகம் போற்றும் ஒப்பற்ற அற நூலாகும். அறிஞரால் விரும்பப்படும் தன்மையுடையதாய்க் குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்ட பெருமையுடையது. இந்நூலுள் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள் வெண்பாக்கள் உள்ளன. திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பகுப்புக்களையுடையது; அறத்துப்பாலில் முப்பத்தெட்டு அதிகாரங்களும், பொருட்பாலில் எழுபது அதிகாரங்களும், காமத்துப்பாலில் இருபத்தைந்து அதிகாரங்களும் உள்ளன. இங்கே பாடமாக வந்துள்ளவை பொருட்பாலில் ஒழிபியலில் உள்ள ஐந்து அதிகாரங்களாகும்.

இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருக வைத்துப் போற்றப்படுகின்றது. குறைந்த அடிகளையுடைய செய்யுட்களால் அறம் பொருளின்பங்களை உணர்த்துவது கீழ்க்கணக்கு நூல் என்பர்.

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். வள்ளுவர் என்ற பெயர் இவருக்குக் குடிபற்றி வந்ததென்பர் ஒரு சிலர். அரசர்க்குரிய கருமத் தலைவர் வள்ளுவர் எனப்படுவர். எனவே வள்ளுவர் என்ற பெயர் இவருக்குத் தொழில்பற்றி வந்ததென்பர் நாவலர் சோமசுந்தரபாரதியார் அவர்கள். அவர் "வள்ளுவர் என்பார் தமிழ் நாட்டுப் பழங்குடியுள் ஒரு பகுதியினர்; அவர் அரசரது பட்டத்து யானையின்மேல் முரசேற்றித் தாமும் உடனிருந்து முரசறைந்து திருநாள் படைநாள் மணநாள் செய்திகளை மக்களுக்கு அறிவிப்பர்" என்பதைச் சான்றுகள் பல தந்து நிறுவியுள்ளார். இவற்ருல் திருக்குறளை இயற்றிய ஆசிரியர் திருவள்ளுவர், வள்ளுவர் குடியில் பிறந்து சிறப்புற்றதனுல் அப் பெயர் பெற்ருர் என்பது புலனுகின்றது.

இவருடைய பிறப்பைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் பல கதைகள் வழங்கிவருகின்றன. ஆயினும் அவை இவருடைய உண்மை வரலாற்றை அறியவொட்டாது மறைக்கும் புனைந்துரைகளாகவே உள்ளன. இவர் சென்னையிலுள்ள திருமயிலையில் பிறந்து வளர்ந்தவர் என்று கூறுவர் சிலர். அவர்கள் தம் கருத்துக்குச் சான்ருக மயிலையில் உள்ள திருவள்ளுவர் கோயிலைச் சுட்டிக்காட்டுவர். வேறு சிலர் திருவள்ளுவர் மதுரையில் வாழ்ந்தவர் என்பர்.

திருவள்ளுவர் வரலாறு யாதாயினும், உலகப் பெரும் புலவர்களுள் ஒருவர் இவர் என்பது தமிழர் அனைவர்க்கும் பெருமிதம் அளிப்பதாகும். மக்களினம் முழுவதும் வாழ்வாங்கு வாழ அறநெறி புகட்டிய சிறப்புப்பற்றி 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாரதியார் பாடினர். இது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை என்பதை டாக்டர் சுவைட்சர் முதலான மேனாட்டு அறிஞர்களின் பாராட்டுரைகள் மெய்ப்பிக்கின்றன.

பண்டைக்காலத்திலேயே திருவள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்று பாராட்டினார் மணிமேகலையின் ஆசிரியரான கூலவாணிகன் சாத்தனார். தமிழ்ச் சான்றோர்கள் இவரை முதற்பாவலர், செந்நாப் போதார், பெருநாவலர், தெய்வப் புலவர், தேவர் முதலிய சிறப்புப் பெயர்களாலும், அடைமொழிகளாலும் போற்றிவந்தமை இவருடைய ஒப்புயர்வற்ற புலமையையும் பெருமையையும் காட்டுகிறது. இவர் காலம் கிறித்தவ நூற்றாண்டின் தொடக்கம் என்பர்.

## 1. குடிசெயல்வகை

(ஒருவன் தான் பிறந்த குடி உயர்ந்து விளங்கச் செய்தலின் திறம்.)

### குடிப்பெருமைக்குரிய கடமையைச் செய்வதற்குக் காரணங்கள்

1. கைதூவேன் - சோர்வடையமாட்டேன். பெருமை - முயற்சியினால் உண்டாகும் பெருமை. பீடு - மேம்பாடு.

2. ஆள்வினை - முயற்சி. ஆன்ற - நிறைந்த. இரண்டின் நீள்வினையான் - இரண்டினையுமுடைய இடைவிடாத செயலால். குடி நீளும் - ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

### குடிசெய்வார்க்குத் தெய்வம் துணையாதல்

3. குடி செய்வல் - என் குடியை உயரச் செய்வேன். என்னும் ஒருவர்க்கு - என்று முயலும் ஒருவனுக்கு. தெய்வம் மடிதற்று முந்துறும் - ஊழ் ஆடையை இறுகக் கட்டிக்கொண்டு தானே முன்வந்து உதவி செய்யும். தெய்வம் - ஊழ். தற்றுதல் - இறுக உடுத்தல்.

4. தாழாது - விரைந்து. உஞற்றுபவர்க்கு - முயன்று செய்வோருக்கு. சூழாமல் - ஆராயாமலேயே. குடி ஆகுபெயர்.

குடிசெய்வார் எய்துஞ் சிறப்பு

5. குற்றம் இலனாய் - குற்றமாயின செய்யாதவனாய். உலகு - உலகத்தார். சுற்றமாச் சுற்றும் - அவனுக்குச் சுற்றமாக வேண்டித் தாமே விரும்பிச் சென்று சூழ்வர்.

குற்றமாயின - அறநீதிகட்கு மறுதலையாய செயல்கள். தாமும் பயனடைதல் நோக்கி யாவரும் சென்று சார்வர் என்பதாம்.

6. இல்லாண்மை - குடியினையாளுந் தன்மை, குடியில் உள்ளாரை உயரச் செய்தல்.

7. வன்கண்ணர் - அஞ்சாத வீரர். பொறை ஆற்றுவார் மேற்றே - குடியில் பிறந்தவருள்ளும் அதனைத் தாங்க வல்லவரின் மேல்தான் குடும்பப் பொறுப்புச் சாரும்.

குடிசெய்யும் இயல்பு

8. பருவம் - காலம். மடிசெய்து - சோம்பி இருத்தல். மானம் கருதல் - தன் மானத்தைப் பெரிதாகக் கருதி இருத்தல். குடியின் உயர்வைக் கருதி ஓயாது செயலாற்ற வேண்டும். சோம்பியிருப்பதும், தன் மானம் கருதி வாளா இருப்பதும் குடிப்பெருமையைக் கெடுத்து விடும்.

9. குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் - மூவகைத் துன்பமும் தன்குடிக்கு வராமல் நீக்க முயல்வான். இடும்பைக்கே - துன்பத்திற்கே. கொள்கலம் - இருப்பிடம்.

குடிசெயல் இல்லாத குடிக்கு உளதாம் குற்றம்

10. அடுத்து ஊன்றும் - துன்பம் வந்தபோது உடனிருந்து தாங்க வல்ல. குடி - குடியாகிய மரம். இடுக்கண் - துன்பமாகிய கோடரி. கால் கொன்றிட - அடிமரத்தை வெட்டிச் சாய்க்க. வீழும்- ஒருவிதப் பற்றுக்கோடும் இல்லாது வீழ்ந்துவிடும்.

குடி வளர்ப்பாரைப் பெற்றுழி வளர்ந்து பயன்படுதலும், அல்லாத வழிக் கெடுதலும் உடைமையின் மரமாக்கினார். இது குறிப்பு உருவகம்.

## 2. உழவு

உழுதல் தொழிலின் சிறப்பினை உணர்த்துகின்றது. ஒரு குடி மேம்படுவதற்குரிய வழிகளுள் உழவுத் தொழில் சிறந்தமையான் குடி செயல் வகையின் பின் வைக்கப்பட்டது.

உழவின் சிறப்பு

சுழன்றும் - உலகம் பல தொழில்களைச் செய்து சுழன்றாலும். உழந்தும் - எவ்வளவு வருத்தமுற்றாலும். தலை - சிறந்தது, தலையானது. ஏர் - ஆகுபெயர்.

உழவுத் தொழில் செய்வாரது சிறப்பு

2. ஆணி - உலகத்தாராகிய தேர்க்கு அச்சாணி. இது ஏக தேச உருவகம். உலகத்தார் - உழவுத்தொழிலில் ஈடுபடாத மற்ற மக்கள்.

3. வாழ்வார் - தமக்குரியராகி உரிமையோடு வாழ்கின்றவர். மற்றெல்லாம் - மற்றையவர் எல்லாம்.

4. அலகுடை நீழலவர் - உழுதல் தொழிலால் நெல்வளம் உடைய தண்ணளி பொருந்திய உழவர். பலகுடை - பல வேந்தர்க்குரிய குடைகளின். தங்குடைக்கீழ் - தம் வேந்தர் குடைக்கீழே. அலகு - கதிர்; ஆகுபெயராய் நெல்மேலதாயிற்று.

5. கரவாது - மறைக்காது. கைசெய்தூண் - தம் கையால் உழுது உண்டலை இயல்பாகவுடையார்.

6, மடங்கின் - தொழில் செய்யாது மடங்கியிருக்குமாயின். விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கு - யாவரும் விரும்பும் உணவையும் யாம் துறந்தேம் என்று கூறும் துறவிகளுக்கும். இல்லை நிலை - அத்துறவறத்தின் கண் நிற்றல் இயலா. ‘ஒன்றனை மனத்தால் விழைதலும் ஒழிந்தேம் என்பார்க்கு’ என்றும் பொருள் கொள்ளலாம்.

உழவுத் தொழில் செய்யும் விதம்

7. தொடி - ஒரு பலம். கஃசா - கால்பலமாக, உணக்கின் - காயவிடின். பிடித்து எருவும் - ஒருபிடி எருவும். சாலப் படும் - செழித்து விளையும்.

8. ஏரினும் - உழுதலினும். கட்டபின் - களையெடுத்த பிறகு. உழுதல், எருப்பெய்தல், களையெடுத்தல், நீர்கால் யாத்தல், காத்தல் என்னும் இம்முறைய ஆகிய இவ்வைந்தும் வேண்டும் என்பதாம்.

9. கிழவன் - நிலத்திற்குரியவன். நிலம் இல்லாளின் புலந்து ஊடிவிடும் - அந்நிலம் அவனுடைய மனைவியைப் போல வெறுத்து அவனோடு பிணங்கிவிடும்.

உழவுத்தொழில் செய்யாமையால் உண்டாகும் இழுக்கு

10. இலம் - யாம் வறியேம். அசைஇ - வறுமையால் சோம்பி. நிலம் - நிலமகள். நகும் - தன்னுள் சிரிப்பாள்.

உழுதல் முதலிய செய்வார் யாவர்க்கும் செல்வங் கொடுத்து வருகின்றமையால் 'நிலமகளை' நல்லாள் என்றார்.

## 3. நல்குரவு

### (நுகரப்படுவன யாவும் இல்லாமை)

நல்குரவின் கொடுமை

1. இன்மையின் - வறுமையின். இன்னாதது - துன்பந்தருவது.

2. ஒருபாவி - வறுமை என்று சொல்லப்படும் ஒரு பாவி. மறுமையும் - மறுமை இன்பமும். இம்மையும் - இம்மை இன்பமும். இன்றி – இல்லாமல். பண்பிற்குப் பண்பி இல்லையேனும், தன்னை ஆக்கினானை இருமையுங் கெடுத்தல் கொடுமைபற்றி, இன்மையைப் 'பாவி' என்றார். கொடியவனைப் 'பாவி' என்னும் வழக்கு உள்ளமை கருதுக.

3. தொல்வரவும் - பழமையான குடிப் பண்பையும். தோலும் - புகழையும். நசை - ஆசை. தோலாவது 'இழுமென் மொழியால் விழுமியது நுவறல்'

4. இளிவந்த - இழிவுதரும். கண்ணேயும் என்பதிலுள்ள சிறப்பு உம்மை, நற்குடியில் பிறந்தாரிடத்து அது பிறவாமை தோன்ற நின்றது.

5. இடும்பை - துன்பம். குரை - இசைநிறை. செலவு விரைவின்கண் வந்தது. துன்பமுந்தானும் உடனே நிகழ்தலின் நல்குரவைத் துன்பமாக்கியும், அத் துன்பம் காரணமாகச் செல்வர் கடை நோக்கிச் செல்லும் துன்பமும், அவரைக் காணும் துன்பமும், கண்டால் மறுத்துழி நிகழும் துன்பமும், மருவழியும் அவர் கொடுத்தது வாங்குந் துன்பமும், அதைக் கொண்டுவந்து நுகர்தல் துன்பமும் முதலாயின நாள்தோறும் வேறு வேருக வருதலின் எல்லாத் துன்பங்களும் உளவாம் என்று கூறினர்.

நல்கூர்ந்தார்க்கு உளதாம் குற்றம்

6. நற்பொருள் - மெய்ந்நூற் பொருள். சொற் பொருள் - சொல்லுஞ் சொல்லின் பொருள். சோர்வு - பொருள் அற்றநிலை. வறுமையுற்றவர் கல்வியும் பயன்படாது என்பதாம்.

7. அறம் சாரா - அறத்தொடு பொருந்தாத. பிறன்போல - அயலானைப் போல. நோக்கப்படும் - புறக்கணித்துப் பார்க்கப்படுவான். வறுமையுற்றவனை உற்றாரும் சுற்றத்தாரும் புறக்கணிப்பர் என்பதாம்.

8. நெருநல் - நேற்று. நிரப்பு - கொடிய துன்பத்தை நல்கும் வறுமை. நேற்று மிக வருந்தித் தன்வயிறு நிறைத்தான் ஒருவன் கூறும் கூற்றாகும்.

9. நிரப்பினுள் - வறுமைத் துன்பத்தினிடையே. கண்பாடு - உறங்குவது. அரிது - இல்லை. நெருப்பினும் நிரப்புக் கொடிது என்றவாறாயிற்று.

நல்குரவு உளதாயவழிச் செய்வது

10. துப்புரவு இல்லார் - நுகரும் பொருள்கள் இல்லாத வறியவர். தம்மாற் செயற்பாலது முற்றத் துறத்தலேயாகும். துவரத் துறவாமை - அவ்வாறு முற்றிலும் துறவாமைக்குரிய காரணம் பிறருடைய உப்பிற்கும் கஞ்சிக்கும் எமனாக இருப்பதே ஆகும். காடி - கஞ்சி. முற்றத் துறத்தல் – உடம்பையும் துறத்தல்; இறத்தல்.

TAMIL NADU ARCHIVES No. 112028

## 4. இரவு

### ( இரத்தல் )

வறுமையால் உயிர் நீக்கும் எல்லைக்கண் இழிவில்லா இரவு விலக்கப்படாமைக்குரிய காரணம்

1. இரத்தக்கார் - இரந்து கேட்கத் தக்கவரை. கரப்பின் - மறைப்பாரானால், ஒளிப்பாரானால். காணின் என்பது அருமைப்பாட்டை உணர்த்துகிறது.

2. இன்பம் - இன்பத்திற்குக் காரணமாகும். இரந்தவை - இரந்த பொருள்கள். உருஅ வரின் - உறாமல் வரின்.

இரக்கத்தக்காரது இயல்பு

3. கரப்பிலா - ஒளித்தல் இல்லாத. கடனறிவார் - தம் மானம் அறிவார். ஏர் - அழகு.

4. கரத்தல் - ஒளித்தல். தேற்றாதார்மாட்டு - அறியாதவரிடத்து. தான் புகழ் பயவாதாயினும் முன்னுளதாய புகழ்கெட வாராமையின் 'ஈதலே போலும்' என்றார்.

5. கண்நின்று - ஒருவர் முன்னின்று. இரப்பவர் மேற் கொள்வது - இரத்தலை மேற்கொள்ளுவது. கரவாது கொடுப்பார் இல்லையாயின், மானம் நீக்கமாட்டாமையின் உயிர்நீப்பர் என்பதாம்.

6. இடும்பை - துன்பம்; நோய்.

7. இகழ்ந்து - தம்மை அவமதித்து. எள்ளாது - இகழாது. இகழ்ந்து எள்ளாது எனவே, நன்கு மதித்தலும் இனியவை கூறலும் பெறப்படுகின்றன.

உலகிற்கு இரப்பார் வேண்டும்

8. ஈர்ங்கண்மா ஞாலம் - குளிர்ந்த இடத்தையுடைய இப் பெரிய உலகத்தின் இயக்கம். மரப்பாவை சென்று வந்தற்று - மரத் தால் செய்யப்பட்ட பாவை கயிற்றினுல் கட்டப்பட்டுச் சென்று வந் தாற் போலும்.

9. தோற்றம் என் உண்டாம் - புகழ் என்ன உண்டாம். தோற் றம் ஆகுபெயர்.

இரப்பார்க்கு இன்றியமையாத இயல்பு

10. வெகுளாமை - சினம் கொள்ளாமை. நிரப்புஇடும்பை தானேயும் கரி சாலும் - அவன் அடைந்துள்ள வறுமைத் துன்பமே அவனுக்கு அறிவு புகட்டும் சான்ருக அமையும்.

## 5. இரவு அச்சம்

(தன் மானத்தை அழிக்கும் இரத்தலுக்கு அஞ்சுதல்)

இரவின் கொடுமை

1. கண் அன்னுர் - கண்போலச் சிறந்தார். கோடியுறும்-கோடி மடங்கு நன்மையாகும். சிறந்த முயற்சியால் உயிரோம்பலே நல்லது என்பது கருத்து.

2. உலகு இயற்றியான் - உலகத்தைப் படைத்தவன். இரந்தும்- உலகில் சிலர் உயிர்வாழ்வதற்கு இரந்தும். பரந்துகெடுக - அக் கொடி யோன் தானும் அவரைப் போன்று எங்கும் அலைந்து கெடுவானுக.

வறுமை தீர்த்தலுக்குரிய வழி இரவன்று

3. இரந்து தீர்வாம் - முயன்று நீக்காது இரந்து நீக்கக் கட வேம் என்று கருதுதல். வன்பாட்டது - வலிமையுடையது.

நெறியற்ற இரத்தலைச் சான்றோர் செய்யார்

4. ஒல்லாச் சால்பு - உடம்படாத அமைதி. கொள்ளாத் தகைத்தே - கொள்ளாத பெருமையையுடைத்து.

5. தாள் தந்தது - முயற்சியால் பெற்றது. தெண்ணீர் அடு புற்கை - தெளிந்த நீர்போலச் சமைத்த கூழ்.

அறச்செயலைத் தானே முயன்று செய்க

6. ஆவிற்கு - பசுவிற்கு. இளிவந்தது - இழிவினைத் தருவது, இழிவானது.

பசுவைக் காத்தோம்பல் பேரறமாகும்.. ஆயினும் அதனை இறந்து செய்வது இழிவுடைத்தாகும்.

மானம் தீர வரும் இரவு

7. கரப்பார் இரவன்மின் - தம்மிடமுள்ள பொருளை ஒளித்து இல்லை என்பாரிடம் சென்று இரக்க வேண்டா.

இரவின் குற்றமும் கரவின் குற்றமும்

8. ஏமாப்பு இல் - காவல் இல்லாத. தோணி - மரக்கலம். பார் தாக்க - வன்னிலம் தாக்கினால். பக்குவிடும் - உடைந்துவிடும்.

9. இரவு உள்ள - உடையார்முன் இல்லார் சென்று இரந்து நிற்றலின் கொடுமையை நினைந்தால். உள்ளம் உருகும் - உள்ளம் நெகிழ்ச்சியுறும். உள்ளதூஉம் - அவ் வுருகுமளவுதானும். இர வினும் கரவு கொடிது என்பதாம்.

10. யாங்கு ஒளிக்கும் - எவ்விடத்து ஒளிந்திருக்குமோ, சொல் லாடப் போஒம் உயிர் - இரப்பவர் 'இல்லை' என்று சொல்லுகின்ற அளவிலேயே உயிர் போகின்றதே.

உயிர்போகலாவது - இனி யாம் என் செய்தும் என்று ஏங்கிச் செயலற்று நிற்றல்.

# 5. சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம் என்பது தமிழ்மொழியில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் முதற் காப்பியமாகும். சோழ நாட்டிற் பிறந்து வாழ்ந்து, பாண்டி நாட்டில் கணவன் கொலையுண்ண, மதுரையை எரித்து, சேர நாட்டில் மன்னர் பலரும் போற்றுமாறு கோயில் கொண் டருளிய கற்புக்கரசியாகிய கண்ணகியின் வரலாற்றை எளிய இனிய அழகிய தமிழில், சொல் நயமும் பொருள் நயமும் ததும்ப இளங்கோ வடிகள் இயற்ற அமைந்த காப்பியமே சிலப்பதிகாரம்.

கண்ணகியின் வரலாற்றைக் கூறப்போந்த இளங்கோவடிகள், புகார், மதுரை, வஞ்சி ஆகிய முடியுடை மூவேந்தர் தலைநகரங்களி லும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கொண்டு, அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்ருவதும், பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் ஏத்துவதும், ஊழ்வினை உருத்துவந்து ஊட்டுவதும் ஆகிய மூன்று உயரிய உண்மைகளையும் சிலம்பு காரணமாகப் புலப்படுத்துவதால் இந்நூல் சிலப்பதிகாரம் என்ற பெயர் பெற்றது. இந்நூல் முத்தமிழும் விரவப் பெற்றதாதலின் இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச்செய்யுள் என்றும், நாடக உறுப்புக்களைக் கொண்டுள்ளதாதலின் நாடகக் காப்பியம் என்றும், உரைப்பாட்டும் இசைப்பாட்டும் இடையிடையே விரவப் பெற்றதாதலின் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என்றும் பெயர் பெறும் என்பர்.

இந் நூல் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளை உடையது; முப்பது காதை களையும் உடையது. இக் காண்டங்களுள், புகார்க் காண்டத்தில் உவகைச் சுவையும், மதுரைக் காண்டத்தில் அவலச் சுவையும், வஞ்சிக் காண்டத்தில் வீரச் சுவையும் சிறப்புற்று விளங்குகின்றன. இங்குப் பாடப்பகுதியாக வந்துள்ள நீர்ப்படைக் காதை, வஞ்சிக் காண்டத்துள் நான்காவது காதையாகும்.

சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள், வஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்ட சேரலாதனின் மைந்தராவார்; கண்ணகிக்குக் கோயிலெடுத்த சேரன் செங்குட்டுவனின் தம்பியுமா வார். இளமையிலேயே அரச செல்வத்தைத் துறந்து துறவு பூண்டு விளங்கினமையால் அடிகள் எனப் பெற்ருர். இவர் சமண சமயத்

தைச் சார்ந்தவர் என்பர். சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்றும் சிலர் கூறுவர். இவர் சமயப் பொதுமைக் கொள்கை உடையவர் என்பதும் சிலப்பதிகாரத்தால் தெரியவருகிறது. இளங்கோவடிகளின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டாகும்.

### நீர்ப்படைக்காதை

பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்கு இமயத்திலிருந்து கல்லெடுத்த பிறகு, அதனைக் கங்கையாற்றில் நீராட்டியதை இக் காதை குறிப்பதாகும்.

இமயத்தினின்றும் கொண்ட பத்தினிக் கடவுள் வடிவெழுதிய கல்லைக் கனகவிசயருடைய முடியின் மீதேற்றிச் சென்று கங்கை யாற்றில் முறைப்படி நீர்ப்படை செய்து அதன் தென்கரை சேர்ந்து, ஆரிய மன்னர்களால் அங்கு அழகுற அமைக்கப்பட்ட பாடியின் கண் சேனையுடன் தங்கி, போரிலே வீரங்காட்டித் துறக்கமுற்றோ ரின் மைந்தர்களுக்கும், பகைவர்களை வென்ற வீரர்களுக்கும் பொன் ஞற் செய்த வாகைப் பூவினை அளித்துச் சிறப்பித்திருந்தனன் செங் குட்டுவன். அவ்வமயம் கங்கையாடி அங்குப் போந்த மாடலனால் கோவலன்கண்ணகி வரலாற்றையும், அவர்கள்பெற்றோர் துறவு பூண்ட செய்தியையும், சோழ பாண்டிய அரசுகளின் நிலையையும் கேள்வியுற்ற செங்குட்டுவன் மாடலனுக்கு ஐம்பது துலாம் பொன் தானஞ் செய்து, கனகவிசயரைச் சோழ பாண்டிய மன்னர்களுக்குக் காட்டி வருமாறு நீலன் முதலிய கஞ்சுக மாக்களை ஏவித் தானையுடன் புறப்பட்டு, தன்னைப் பிரிந்து துயிலின்றி வருந்தியிருக்கும் கோப் பெருந் தேவியின் நெகிழ்ந்த வளை மகிழ்ச்சியால் செறியும்படி, வெண் கொற்றக் குடை நிழற்ற யானைமீது அமர்ந்து வஞ்சி நகரத்தினுள் புகுந்த வரலாற்றை நீர்ப்படைக் காதை எடுத்தியம்புகின்றது.

1. வான் தரும் - மழையைத் தரும். துறக்கத்தினைத் தரும். வான் ஆகுபெயராய் மழையை உணர்த்திற்று.

2. கற்கால் கொண்ட - கல்லில் வடிவெழுதிய.

3. முன்பு - வலிமை.

5. தென்தமிழாற்றல் - தென்னாட்டுத் தமிழ்வேந்தரின் ஆற்றல், தமிழ் மறவரின் ஆற்றல், தமிழ் நாட்டினரின் ஆற்றல்.

7. செயிர் - சினம். செயிர்த்தொழில் - சினத்தை விளைக்குந் தொழிலாகிய போர். முதியோன் - கூற்றுவன்.

8-9. ஒன்பதிற்றிரட்டி பதினெட்டு. மதியும் - பதினெட்டு மாதங்களும், நாளும் - பதினெட்டு நாளும், கடிகையும் - பதினெட்டு நாழிகையும் எனப் பதினெட்டை அடையாக்கி உரைக்க. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போர் பதினெட்டு ஆண்டுகள் நிகழ்ந்தது என்றும், இராமாயணப் போர் பதினெட்டு மாதங்கள் நிகழ்ந்தது என்றும், பாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடந்தது என்றும், செங்குட்டுவனும் கனகவிசயரும் செய்த போர் பதினெட்டு நாழிகை நடந்தது என்றும் கூறப்படுகிறது.

10. ஈண்டு நீர் ஞாலம் - கடல் சூழ்ந்த உலகம்.

15. பாற்படு மரபு - பகுதிப்பட்ட மரபாலே.

16. நூற்றிறன் மாக்கள் - நூல்களின் கூறுபாட்டை உணர்ந்தோர். நீர்ப்படை செய்து - நீராட்டி. பத்தினிக் கடவுளின் வடிவெழுதிய கல்லினைக் கங்கையாற்று நீரில் சாத்திர மரபுப்படி நீராட்டி என்க.

18. அரங்கம் - நாடகசாலை.

19. உரிமைப்பள்ளி - அரசர்க்குரிய பள்ளியிடம்.

20. வரிகாண் அரங்கமும் - வரிக்கூத்தினைக் காண்பதற்குரிய அரங்கமும்.

24. வெள்ளிடைப்பாடி - வெளியான இடத்திலுள்ள பாசறை.

25. நெஞ்சுபுகல் - உள்ளத் தருக்கு.

26. வதுவை சூட்டயர்ந்தோர் - மணமாலையைப் பெற்றவர். போரிட்டு இறந்தாராகலின் இங்ஙனம் இயம்பப் பெற்றார்; வதுவை - மணமாலை; ஆகுபெயர்.

27. உலையா வெஞ்சமம் - பொரத் தொலையாத கொடிய போர்க்களம்.

28. விலை பெற - மதிப்புப் பெற.

29. நாள்விலைக் கிளையுள் - தம் வாழ்நாளை விலையாகத் தரும் வீரருள்.

31. குரவை - குரவைக் கூத்து.

32. மருங்கு - கிளை வீரர்.

34. வளையோர் - வளையல் அணிந்த மகளிர்.

36. வாகை/ - வாகைமாலையினை.

37. கொடுஞ்சி - தேரினது மொட்டு என்னும் உறுப்பு.

39. கருந் தலை - பெரிய தலை.

40. கண்ணேடுதல் - இரக்கங் காட்டல்.

41. கவயம் - கவசம்; கூர்ந்து - மிகுந்து. நிறம் - வடிவு, மார்பு.

43. வாகைப் பொலந்தோடு - வெற்றிக்கு அறிகுறியாக அளிக்கும் பொன்னால் செய்யப்பட்ட வாகைமலர்.

45. தோடார் போந்தை - இதழ் பொருந்திய பனம்பூ மாலை.

46. பாடுதுறை முற்றிய - பாடும் புறப்பொருள் துறையெல்லாம் முடித்துப் பாடல்கொண்ட.

49. மடந்தை - பெண்.

50. கானற்பாணி - கானல் வரிப்பாட்டு.

51. நெரித்தது - நெருக்கி வருத்தியது. சிலப்பதிகாரக் காப்பியம் மாதவியின் கானல்வரிப் பாட்டின் விளைவாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளினால் எழுந்த நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

54. நகைத்திறம் - நகை விளைவிக்கும் சொல்.

58. வரிநவில் பாணி - கானல் வரிப்பாட்டு.

59. ஊழ்வினை உருத்தெழ - முன்னை வினையானது பயனளிக்க உருக்கொண்டு எதிர்தலால்.

60. குலக்கொடி - உயர்குடியில் பிறந்தோளாகிய கண்ணகி.

64. குடவர்கோவே - குடநாட்டினர் தலைவனே.

68. மாமுனி பொதியில் - அகத்தியர் உறையும் பொதிகை மலை.

69. குமரியம் பெருந்துறை - குமரியின் அழகிய பெரிய துறை (குமரிமுனை).

71. தென்னவன் - பாண்டியன்.

72. வலம் - வெற்றி.

74. மாதரி - இடைக்குல மடந்தை. கோவலன் கண்ணகியை அடைக்கலப் பொருளாக ஏற்றுக்கொண்டவள்.

78. எரியகம் - தீயிடை.

79. கவுந்தி - சமண சமயப் பெண்பால் துறவி. கோவலன் கண்ணகிக்கு வழித்துணையாக மதுரை வரை வந்து, அவர்களை மாதரியிடத்து அடைக்கலப் பொருளாகத் தந்தவள்.

80. நிவந்தோங்கு - மிக்குயர்ந்து.

88. உயிர் பதிப்பெயர்த்ததும் - உயிரை உடம்பில் நின்று நீக்கியதும்.

91. வான்பொருள் - சிறந்த செல்வங்களை.

92. இந்திர விகாரம் - இந்திரன் கட்டிய கோயில்.

93. அந்தரசாரிகள் - வானத்து இயங்குவோர்.

99. ஆசீவகர் - சமண சமயத்துள் ஒருவகைப் பிரிவைச சேர்ந்தவர்கள்.

100. அறங் கொள்ளவும் - துறவறம் மேற்கொள்ளவும்.

102. நாள்விடூஉ நல்லுயிர் நீத்து - வாழ்நாளைவிட்டு, நல்ல உயிரினைத் துறந்து. விடூஉ - வினையெச்சம்.

105. வான்துயர் - மிக்க துன்பம்.

107. கோதைத்தாமம் - கோதையாகிய மாலை.

108. போதித்தானம் - போதிமாதவராகிய புத்தர் பெருமான் முன் செய்யும் புண்ணியதானம்.

113. வாடாவஞ்சி - வஞ்சிநகரம்; வானவர் - சேரர்.

114. மன்னவன் - பாண்டியன் நெடுஞ்செழியன்.

118. வளவன் கிள்ளி - சோழன் பெருங்கிள்ளி.

123. பொன்புனை திகிரி - அழகிய ஆணைச்சக்கரம்.

124. பழையன் - ஒரு குறுநில மன்னன். குழை - தளிர்.

132. அலம்வரும் - மயங்கும். அல்லல் - துன்பம்.

138. மாலைத் திங்கள் வழியோன் - திங்களின் வழிவந்தவர். பாண்டியர் குடியினர் என்பது ஈண்டுக் குறிப்பிடப்படுகிறது.

144. பகல் - கதிரவன். படர் - துன்பம்.

146. செக்கர் - செவ்வானம்.

147. ஏர்தல் - எழுதல்.

148. செவ்வி - குறிப்பு. கணி - காலத்தைக் கணித்துக் கூறுவோன்.

149. எண்ணான்கு மதியம் - முப்பத்திரண்டு திங்கள்.

151. காழ் - குத்துக்கோல். கண்டம் - நிறத்தாற் கூறுபட்ட குதிரை; ஆகுபெயர்.

154. முடுக்கர் - குறுந்தெரு.

155. வித்தகர் கைவினை - ஓவியநூல் வல்லாரது கைத்தொழில் சிறந்த.

156. விதானம் - மேற்கட்டி.

160. வளங்கெழு நன்னாடு - சோழநாடு.

164. வெயில் - ஒளி.

165. எயில் மூன்று எறிந்த - வானிலே இயங்கிய மூன்று மதிலினையும் அழித்த.

166. புறவு - புறா.

170. செல்லல் - துன்பம்.

174. ஆடகம் - பொன்.

176. பெருமகனாகிய வேலையுடைய செங்குட்டுவன் மாடலமறையவனைப் பேணி, அவனுக்குத் தன் நிறையாகிய ஐம்பது துலாம் (நூறு பலம் கொண்ட நிறை) என்னும் பெருநிறையுடைய பொன்னை அளித்தான். தன்னிறையுள்ள பொன்னைத் தானஞ் செய்வது 'துலாபுருட தானம்' எனப்படும்.

179. தாபத வேடம் - தவ வேடம்.
187. இறைமொழி - பெருமித மொழி.
188. கஞ்சுக முதல்வர் - சட்டையிட்ட பிரதானிகளும் தூதர்களும்.
189. அரி - கெடுதல்.
200. நிவந்து - உயர்ந்து.
206. மடை - மூட்டுவாய்.
207. தமனியம் - பொன்.
208. எகினம் - அன்னம்.
209. பள்ளி - படுக்கை.
214. சிறுகுறுங் கூனுறுங் குறளும் - சிற்றேவல் செய்யும் குறிய கூனும் குறளும். கூனும் குறளும் முதலியோர் அரண்மனையின் அந்தப்புரத்திலே குற்றேவல் செய்பவராவர். கூன் - கூனன், குறளன் - குட்டையானவன்.
218. கவண் - கவண்கற்கள்.
219. வீங்கு புனம் - பெரிய தினைப்புனம்.
221. இதண் - பரண்.
224. குறிஞ்சிப்பாணி - குறிஞ்சிப்பண்.
227. கவடி - வெள்வரகு.
229. வெள்ளணி - பிறந்தநாள் சிறப்பு.
230. உழவரோதைப் பாணி - மருதப்பண்.
235. முண்டகம் - கடல்முள்ளிச் செடி.
237. குருகு - வெண்ணிறப் பறவை; அன்னம் என்பர். தாழையின் பூவைக் குருகென உவமித்துரைத்தார்.
241. குழலின்பாணி - முல்லைப்பண்.
242. வாலுகம் - வெள்ளிய அலை.
244. வலம்புரி - வலம்புரிச்சங்கு. சங்கு வகையிலே உயர்ந்தது.
249. உணீஇய - உண்ணும் பொருட்டு.
250. தீம்பாணி - நெய்தற்பண்.
251. ஓர்த்தல் - உற்றுணர்தல்.
255. குஞ்சர ஒழுகை - யானை வரிசை. கோநகர் - தலைநகரம்.

# 6. சீவகசிந்தாமணி

## காந்தருவதத்தையார் இலம்பகம்

சீவக சிந்தாமணி என்பது தமிழ்மொழியில் அமைந்த ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். பழைய இலக்கண இலக்கிய உரையாசிரியர்களால் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் பெருமை சான்றது இந் நூல். கம்பராமாயணம் முதலான பெருநூல்களுக்கெல்லாம் இந்நூல் வழிவகுத்துக் கொடுத்தது என்பர்.

இது சீவகன் என்னும் அரசன், பிறந்தது முதல் வீடெய்தியது ஈறாக உள்ள கதை பொதிந்ததாகும். நல்வாழ்வு வாழ்தற்கு உரிய சிறந்த கருத்துக்களெல்லாம் இதன் கண் விரிவாக விளக்கப் பட்டுள்ளன.

சிந்தாமணி என்பது இந்நூலுக்குத் தன்மையால் வந்த பெயர் என்பர் நன்னூல் உரையாசிரியர் மயிலைநாதர். சீவகனுடைய தாயாகிய விசயை, அவன் பிறந்தவுடன், அவனைச் சிந்தாமணியே என்று பாராட்டினமையால், சிந்தாமணி என்பது முதலில் அவனுக்குப் பெயராய், அதன் பின் அவனைப் பற்றிப் பாடப்பெற்ற இந்நூலுக்குப் பெயராயிற்று என்று கூறுதலும் உண்டு.

சுடுகாட்டில் விசயை பெற்ற குழந்தையைக் கந்துக்கடன் என்னும் வணிகன் எடுத்தபோது, அக் குழந்தை தும்மிற்று. அங்கு ஒரு குரல் ' சீவ ' என்று எழுந்தது. அது காரணமாகவே அக் குழந்தைக்குச் சீவகன் என்ற பெயர் இடப்பட்டது. எனவே சீவகனும் சிந்தாமணியும் ஆன ஒருவனது வரலாற்றைக்கூறும் நூல் சீவகசிந்தாமணி என்னும் பெயர் பெற்றது மிக்க பொருத்த முடைத்து.

இந்நூலுக்கு "மணநூல்" என்றொரு பெயரும் உண்டு. அதற்குக் காரணம், இந்நூற் பகுதிகளாகிய பதின்மூன்று இலம்பகங்களுள் 3, 4, 5, 6, 7, 8, 9, 12-ஆம் இலம்பகங்களில் சீவகன், காந்தருவதத்தை முதலிய எண்மரைத் தனித் தனியே மணந்துகொண்ட செய்தி கூறப்படுதலும், 2-ஆம் இலம்பகத்தில் அவன் தன் தோழனை பதுமுகனுக்குக் கோவிந்தையை மணம் செய்வித்த செய்தி கூறப்படுதலும், 1, 10, 11, 13-ஆம் இலம்பகங்களில் அவன் நாமகள், மண்மகள், பூமகள், முத்திமகள் என்பவர்களை மணந்துகொண்டதாக உருவகித்துக் கூறப்படுதலும் ஆகும்.

இந்நூலை இயற்றியவர் திருத்தக்கதேவர் என்னும் சமண முனிவர். இவர் சோழர் குலத்திலே பிறந்தவர்; நல்லாசிரியர்பால் இலக்கண இலக்கியம் அனைத்தும் ஐயந் திரிபறக் கற்றுத் தெளிவு பெற்றவர்; இளமையிலேயே துறவறம் பூண்டு தம் ஆசிரியரை விட்டு நீங்காமல் அவர் கருத்தின் வழியே ஒழுகிவந்தவர்; சமணப் புலவர்கட்குக் காமச் சுவையுடன் பாடத் தெரியாது என்று சங்கப் புலவர்கள் கூறிய உரையைப் பொறுக்கலாற்ருது தம்முடைய ஆசிரியர்பால் இசைவுபெற்றுக் காமச்சுவை மிகுதியாக விளங்க இந்நூலை இயற்றியவர்; தம் ஆற்றலை ஆசிரியர்க்கு மெய்ப்பிக்க இந்நூல் இயற்றுவதற்கு முன் நரிவிருத்தம் என்னும் ஒருசிறு நூல் இயற்றியவர். இவ்வாறு இவரைப் பற்றிய செவிவழிச் செய்திகள் வழங்கி வருகின்றன.

இந் நூல் 8-ஆம் நூற்ருண்டில் எழுந்தது எனச் சிலரும், 10-நூற்ருண்டில் எழுந்தது எனப் பலரும் கருதுகின்றனர்.

இந் நூலுக்கு நச்சினுர்க்கினியர் ஓர் அரிய உரை இயற்றியுள்ளார்.

இந்நூலுக்கு முதல் நூல் இன்னதென்பது தெளிவாகத் துணியக் கூடவில்லை. க்ஷத்திர சூடாமணி, கத்திய சிந்தாமணி, ஜீவந்தர நாடகம், ஜீவந்திர சம்பு என்ற நான்கு நூல்கள் சீவகன் வரலாற்றைக் கூறுவனவாய் வடமொழியில் உள்ளன. அவற்றுள் க்ஷத்திர சூடாமணியே இந்நூலுககு முதல் நூல் என்று சமணர் கருதுகின்றனர்.

இங்கே பாடமாக உள்ள பகுதி சிந்தாமணியின் மூன்ரும் இலம்பகத்தில் உள்ளது.

காந்தருவதத்தை கலுழவேகன் என்னும் வித்தியாதர மன்னனின் மகள். அவளுக்கு வீணுபதி என்னும் தோழி ஒருத்தி உண்டு. கலுழவேகன் இராசமாபுரத்தில் தன் மகளுக்கு மணமுடிக்க வேண்டுமென்று கருதினுன். ஒரு சூழ்ச்சியால் ஸ்ரீதத்தன் என்னும் வணிகனைக் கப்பலினின்று கவிழ்வித்து அவனிடம் காந்தருவதத்தையை ஒப்புவிக்க அவன் தன்னுடைய மனைவி பதுமை என்பாளிடம் காந்தருவதத்தையை ஒப்புவித்தான். கன்னிமாடத்தில் தத்தை வைக்கப்பட்டாள். வீணையில் வல்லவனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து தரும்படி கலுழவேகன் வேண்டியதற்கேற்பத் தத்தன் வீணைப்போட்டி நிகழ்வித்தான். ஆறு நாட்களிற் போட்டியிட்டவர்களில் வென்றவரில்லை. சீவகன் அங்குச் சென்று அவளை வெல்லுதற்கு விரும்பினுன். தன் தோழன் புத்திசேனன் வழியாக வளர்ப்புத் தந்தையாகிய கந்துக்

கடனிடம் இசைவு வேண்டினன். சீவகனுடைய பகைவனாகிய கட்டியங்காரன் சினங்கொண்டுள்ளமையை எடுத்துக்கூறி, "உடன் படை அழைத்துச் செல்க" என்று கந்துகன் குறிப்பிட்டபடி தோழர்களுடன் சென்று சீவகன் காந்தருவதத்தையை இசையில் வென்றான். கட்டியங்காரன் மனம்புழுங்கி, நான்காவது வருணத்தானாகிய சீவகன் தத்தையை மணத்தலாகாது எனக் கூறி, அரசர்களைப் போர் தொடுக்க ஏவினன். அவர்களுள் ஒருவரே தத்தையை மணம் புரிய வேண்டுமென்றான். ஆயினும், எழுந்த போரில் அரசருள் எவரும் வென்றாரல்லர்; சீவகனே வென்றான். அதனால், காந்தருவதத்தைக்கும் அவனுக்கும் திருமணம் நடந்தது. இச் செய்தியை விரிவாகக் கூறுவது இந்த இலம்பகம்.

1. தாதை - வளர்ப்புத் தந்தையாகிய கந்துக்கடன். தோழன் புத்திசேனன். சேறும் - செல்லுவோம்.

3 ஒருகாதில் ஓலையும் ஒரு காதில் குழையும் அணிந்தமை கூறப்படுகிறது.

4. மன்வரை அகலம் - பெருமை பொருந்திய மலையை ஒத்த மார்பு.

5. கழுவி - உருக்கி. குமரன் - முருகன்.

7. ஓடை - நெற்றிப்பட்டம். நாகம் - யானை. அருக்கன் - கதிரவன். அஞ்சனக் குன்றம் ஒத்த யானையை அண்ணல் ஏறினன் என இயைக்க.

10. எருத்து அலைத்தர - கழுத்தில் விழும்படி. தெரியல் - மாலை; தெரியலான் - கட்டியங்காரன் என்னும் பகைவன். ஐ யென - வியப்புற.

11. கூரிரும்பு - அங்குசம். இழிந்து - இறங்கி.

12. மலை மண்டபத்திற்கும், மதியம் வட்ட அணைக்கும், சுடர் சீவகனுக்கும் உவமை.

13. சாயல் - மென்மை; சாயலாள் - காந்தருவதத்தை.

15. வனைதல் - எழுதுதல்.

17. கண் - ஞானக் கண். உழலை - தடைமரம்.

19. கழித்த வேல் - (உறையினின்று) நீக்கிய வேல்.

20. நெடுங்கணுள் - வீணைபதி என்னுந் தோழி. எழினி - உறை.

21. தேனார்த்து என - வண்டு ஒலித்தாற் போல. தீண்டி - தெறித்து. பொல்லாமை - குற்றம்.

22. இளகிற்று - மெலிந்தது. நீரின் வந்தது - மரம் அழுகியது. வாட்புண்ணுற்றது - வாளால் வெட்டப்பட்டுள்ளது.

23. குரங்கி - தாழ்ந்து. 'நங்கை நலத்தது' என்றதன் நயத்தை உன்னுக.

24. சிறிதலாப் பொழுது - நெடுநேரம். ஓதி - கூந்தலையுடைய காந்தருவதத்தை. வாங்குபு - வாங்கி. நபுலன் - சீவகன் தம்பி.

28. தோற்பான் - தோற்கும்பொருட்டு.

29. கிடையிலாள் - ஒப்பில்லாதவள்.

32. ஒதுங்கி - நடந்துசென்று. ஏந்தலைமேல் - சீவகன் மேல். வீழ்த்தனள் - (மாலையைப்) போட்டாள்.

33. பாவை - காந்தருவதத்தை. ஒசிந்து - அசைந்து. கண்ணி ணை - காந்தருவதத்தையை.

34. உவர்க்கடல் மெலிய - முழு நிலா நாளில் கடல் ஒலிப்பது கெடும்படி. மன்னன் - கட்டியங்காரன்.

36. குழங்கல் - மணம்.

37. இவள் - காந்தருவதத்தை.

38. சிவிறி - நீர்த்துருத்தி.

40. வேறும் - வெல்லுதும், வெல்வோம்.

41. அதிங்கம் - அதிமதுரம்.

42. மத்திரிப்பு - சினம். நாகம் - யானை. களபக்கு - யானைக் கன்றிற்கு. (அத்துச்சாரியை இல்லாத புணர்ச்சி.)

43. வேறு செய்து - வேறுபடச்செய்து. வீந்தால் - (நீங்கள்) இறந்தால்.

44. சொல்திறல் - சொல்வன்மை. குளிப்ப - மூழ்கும்படி. இற்று இத்தன்மைத்து

45. ஆழி - சக்கர வியூகம். சக்கர வியூகமாக வகுத்த படையாகிய வயலில் அம்புகளும் தண்டுகளும் ஆகிய விதைகளை விதைத்துப் பிணங்களாகிய நெல்லை விளைவித்தபின், இரத்தம் ஆகிய நெய்யோடு இறைச்சியாகிய சோற்றை ஊட்டி என உருவகிக்கப்பட்டுள்ளது.

46. சீவகன் போருக்குப் புறப்படுதலைக் கண்டு "நானே சீவகற்குப் பகையாக்கினேன்" எனக் கருதி, தன் உயிரை நோக்கிக் கலங்கி, தத்தை கண்ணில் அடித்துக்கொண்டாள் என்ற செய்தி இங்கே தெரிவிக்கப்படுகிறது. உயிர் : அண்மை விளி.

47. பாழி - வன்மை. நூழிலாட்டி - கொன்று குவித்து. தங்கை - அண்மை விளி. தோழி - வீணுபதி.

48. எதிர்த்த மன்னர்கள் தோற்றனர் என்றும், வித்தியாதரர் சீவகனை ஏத்தினர் என்றும், இராசமாபுரத்தார் மகிழ்ந்தனர் என்றும் இச் செய்யுள் கூறுகிறது.

49. பற்றார் - பகைவர்.

50. முதலிரண்டடிகளிலும் கூறப்படுவோர் கலம்பல நல்கப்பட்டார் எனவும், மூன்றாவது அடியிற் குறிப்பிடப்படுவோர் கைக் கிழி கொடுக்கப்பட்டார் எனவும் இயைக்க.

51. நல்லார் - மருத்துவர். குப்பாயம் - சட்டை. நூக்கினான் - காத்தான்.

53. தீர்த்தன் - அருகன்.

54. சீவகனுக்கும் காந்தருவதத்தைக்கும் நடக்கவிருக்கும் திருமணத்திற்கு ஆவன செய்யப்படுதல் இச்செய்யுள் தொடங்கிச் சொல்லப்படுகிறது. தொறுக் காவலன் - பசுக்கூட்டக் காவலன்.

55. திருமணத்திற்கு வரிசை புகுதல் கூறப்படுகிறது.

56. தமநகம் - மரு.

59. ஆர் - அச்சு. ஆழி - சக்கரம். இச் செய்யுளில், அச்சுக் கோக்கும் குறடு மாளிகைக்கும், நடுவே போக்கும் அச்சு தெருக்களுக்கும், விளிம்புச் சூட்டு மதிலுக்கும் உவமையாக வந்துள.

61. வால் அரி - வெள்ளிய அரிசி. ஆழ்ந்து - ஆழ (வினையெச்சத் திரிபு). மரை - தாமரை (முதற் குறை). குருகு - நாரை.

63. சீப்பவர் - துடைப்பவர். உலம்பும் - முழங்குகிற.

64. மூழிவாய் - பூவிடுபெட்டி. ஆழி - மோதிரம்.

65. முருகன் அன்னன் - சீவகன். நன்னீர் சொரிந்தனன்-ஸ்ரீதத்தன் தாரைவார்த்துத் தந்தான்.

66. கூந்தல் - கூந்தலையுடைய காந்தருவதத்தை.

67. மந்திரத்தரசன் - கலுழவேகன். மாதரம்பாவை - காந்தருவ தத்தை. சிறுவன் - மகன். கடிவினை - மணவினை. நொடியின் - கூறினால்.

68. மணிக்கை - மணியாற் செய்யப்பட்ட பிடி. அடைந்து வீசு ஆலவட்டம் எனப் பிரிக்க.

78. மார்பன் - சீவகன், ஒருவன் - கழலுவேகனால் அனுப்பப்பட்ட வித்தியாதரன் ஒருவன்.

79 உருமுக் கதிர்வேல் - (பகைவர்க்கு) இடிபோன்றதும் கதிர்களை யுடையதும் ஆகிய வேலையுடைய. "கலுழன் ஓலையைச் செல்வனாகிய சாமி காண்க" என எழுதப்பட்டிருந்தமை கூறப்படுகிறது. அறம்பொருள் இன்பம் வாய்க்க என்னும் வாழ்த்து அவ்வோலையில் உண்டு.

80. கட்டியங்காரன் சூழ்ச்சிக்குத் தப்பிப் போரில் வென்ற சீவகன் இனிக் கலுழவேகனோடு கலந்துகொண்டு செயல்கள் ஆற்றவேண்டும் என்பதைக் குறிப்பது இப்பாட்டு. வெள்ளை மலை - கலுழவேகன் மலை. மார்பன் - சீவகன். உளவேண்டா - நினைக்கவும் வேண்டா.

# 7. பெரிய புராணம்

## திருநாவுக்கரசு நாயனர் புராணம்

பெரிய புராணம் இயற்றியவர் சேக்கிழார். இவர் தொண்டை மண்டலத்தில், புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூரில், வேளாளர் மரபில், சேக்கிழார் குடியில் தோன்றியவர். இவருடைய பிள்ளைத் திருநாமம் அருண்மொழித்தேவர் என்பது. இவர் காலத்தில் இருந்த அநபாய சோழன் (இரண்டாம் குலோத்துங்கன்) இவரது புலமைத் திறத்தை வியந்து, இவரைத் தன் முதல் அமைச்சராக்கி, உத்தம சோழப் பல்லவன் என்ற பட்டப் பெயரையும் சூட்டினன். இவ் வேந்தனுடைய வேண்டுகோளுக் கிரங்கி, இப் புராணத்தைச் சேக்கிழார் இயற்றினர். சேக்கிழாரைப் பற்றியும், இவர் புராணம் பாடிய வரலாற்றைப் பற்றியும் விரிவாக உமாபதி சிவாச்சாரியார் இயற்றியுள்ள சேக்கிழார் புராணத்தில் அறியலாம். இக் கவிஞர் பெருமானின் தெய்வம் மணக்கும் பாடல்களில் பெரிதும் ஈடுபட்ட மகா வித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, "பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என இவரை பாராட்டியுள்ளார். சேக்கிழாரின் காலம் பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதி.

பெரியபுராணம் என்னும் இந்நூல், பெருமைபெற்ற சிவனடியார்களின் வரலாற்றினை உணத்துவதாகும். சைவத் திருமுறைகளில் இது "பன்னிரண்டாம் திருமுறை" எனப்படும். தனியடியார் அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் எனச் சிவனடியார் பலராவர். பெரிய புராணத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பது. ஒன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனுர் திருத் தொண்டத்தொகை பாடினுர். அத்தொகையில் சிவனடியார்கள் பாராட்டப்பட்டுள்ளனர். நம்பியாண்டார் நம்பி என்பவர், தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில் அவர்தம் வரலாற்றை வகுத்துக் கூறினர். அவ்விருவரும் கூறிய தொகைவகைகளைக் கொண்டு சேக்கிழார் இப் புராணத்தை விரிவாக எழுதினுர். இவையே யன்றித் தேவாரம், காரைக்கால் அம்மையார் பாடல்கள், திருமூலர் திருமந்திரம், கழறிற்றறிவார் பொன்வண்ணத்தந்தாதி, தெய்வ உலா முதலியனவும் பெரிய புராணம் பாடுவதற்குத் துணையாய் அமைந்த நூல்களாகும்.

திருநாவுக்கரசர், சிதம்பரம், சீர்காழி, திங்களூர், திருப்பழனம் முதலான ஊர்களில் அமர்ந்த சிவபெருமானைத் தொழுது பல ஊர் களுக்குப் போவாராயினர். வழியில், திருப்புகலூரில் திருஞான சம்பந்தரை அப்பர் சந்தித்ததையும் திருவீழிமிழலையிலும் திருமறைக் காட்டிலும் இறைவன் இருவர் பொருட்டும் அருள்சுரந்ததையும், திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வழியில் அப்பர்பொருட்டு இறைவன் பொதிசோறு கொண்டுவந்தளித்ததையும் பாடப் பகுதி கூறுகிறது.

1. திருமறையோர் - அப்பூதியடிகள்.
2. நடைமாண - ஒழுக்கம் மாட்சியுற.
3. எழும்பணி - அசையும் பாம்பு.
4. சேல் - சேல்மீன்கள்.
5. விரிஞ்ஞன் - பிரமன்.
6. முருகு - தேன். மருவார் - பகைவர்.
9. தண்டுளி - தண்மையான துளி.
11. கையறவு - செயலறவு, சோர்வு.
18. பன்னகம் - பல நாகம். புன்னகம் - சுரபுன்னை.
20. கரண்டம் - நீர்க்காக்கை. வரன்று - கொழித்து.
23. சண்பை - சீர்காழி.
27. துப்புறழ் - பவளம் போன்ற.
37. கதலி - வாழை. பூகம் - கமுகம்.
38. மவுலி - முடி.
40. பூநீர் - தாமரைத் தடாகங்களையுடைய.
41. இலம்பாடு - இல்லாமை, வறுமை.
42. வற்கடம் - பஞ்சம்.
46. வாசி - வட்டம்.
48. கவி - ஒலிக்கும்.
50. மன்றல் - மணம். முன்றில் - முற்றம்.
("இல்முன்" என்பது மாறியுள்ளது).

52. தொடர்வு - அடைப்பு.

53. தேங்காது - திகைக்காமல் அப்பர் : அண்மைவிளி.

54. பயன்துய்ப்பான் - அப்பரின் தமிழ்ச்சுவையை நுகரும் பொருட்டு. திருக்கடைக்காப்பு - பதிகத்தின் இறுதிப் பாட்டு.

58. திருக்காப்புச் செய்தது - மூடிக்கொண்டது. எடுத்த பாட்டில் - முதற் பாட்டில்.

61. பேழ்கணித்து - பிழைகுறித்துச் சிந்தித்து ; உறக்கமின்றிக் கண்மூடி. அப்பர் மனநிலையை ஓர்க.

63. போதம் நிகழ - அறிவு விளங்க.

66. அணியார் - அண்மையில் உள்ளனர்.

70. வளவர் - சோழர்.

73. மொழிவேந்தர் - திருநாவுக்கரசர்.

74. கா - சோலை.

77. எய்ப்பு - களைப்பு.

# 8. கம்பராமாயணம்

கம்பராமாயணம் என்பது கம்பரால் பாடப்பட்ட இராமாயணம் என்று பொருள்படும். வடமொழியில் ஆதிகாவியம் என்று வழங்கப்படுவதும், வான்மீகியால் இயற்றப் பெற்றுள்ளதுமான இராமாயணத்தை முதல்நூலாகக் கொண்டு கம்பர் தமிழில் பாடினுர்.

ராம அயநம் என்ற வடசொற்கள் வடமொழி இலக்கண விதியின்படி ராமாயணம் என்ற சொற்ருெடர் ஆயின. இத்தொடர், 'இராமனை அறிதற்கு இடனுயுள்ளது', 'இராமனைப் பொருளாகக் கொண்ட நூல்', 'இராமனது செலவு', 'இராமனது கதை', 'இராமனது அவதார நிகழ்ச்சி' எனப் பல பொருள் படும். இனி, இத்தொடரையே ராமா அயநம் எனப் பிரித்துச் சீதையின் ஏற்றம் கூறுவது என்று பொருள் கூறுவாரும் உளர்; 'ராம:' என்பதற்குப் பெண்பால் 'ராமா' என்பது ஆகும்.

வான்மீகி ராமாயணத்திலும், சங்கச் செய்யுட்களில் சிலவிடத்தும், திவ்வியப் பிரபந்தங்களில் பலவிடத்தும் வந்துள்ள இராமனைப் பற்றிய செய்திகளை அறிந்து, தமிழ் வழக்கிற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ப, வான்மீக ராமாயண கதைப் பகுதிகளுள் சிலவற்றை மாற்றியும், சிறவற்றை விரித்தும், சில செய்திகளை அடியோடு விடுத்தும் கம்பர் தமது காவியத்தை யாத்துள்ளார். கதையும், காலமும், இடமும் ஒழிந்த ஏனைய வெல்லாம் தமிழகச் செய்திகளாகவே கம்பராமாயணத்தில் தோற்றம் அளிக்கின்றன. வடநாட்டுக் கங்கை தமிழ் நாட்டுக் காவிரியாகவே காட்சி நல்குகின்றது. கோசலநாடு, தமிழகச் சோழ நாடாகத்தான் காட்சியளிக்கின்றது. தமிழ்நாட்டுச் சடையன் மரபினர் எடுத்துக் கொடுத்த முடியைத்தான் வடநாட்டு வசிட்டன் அந் நாட்டரசன் தலையில் சூட்டிப் பெருமை அடையச் செய்திருக்கிருன். நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் மிகுதியாக உடைய கம்பர், தம் காவியத்தைப் படிப்பார்க்கு அப் பற்றுக்கள் நன்கு வேர்கொள்ளும் வகையில் இயற்றியுள்ளார். பண்டைத் தமிழிலக்கியங்களில் வந்துள்ள சிறந்த சொற்களையும் சொற்ருெடர்களையும், கருத்துக்களையும். பொருள்களையும் பண்பாட்டையும் கற்பனைகளையும் உவமைகளையும் தக்க இடங்களில் அமைத்து அவற்றைச் சாணையில் தீட்டிய மணிகளென மிளிர வைத்துள்ளார் கம்பர்.

பல மொழிகளில் உள்ள பெருங்காப்பியங்களை ஆராய்ந்தவர்கள் கம்பராமாயணத்தை இயற்றிய கம்பர் உலகப் பெருங்கவிகளுள் ஒருவராகப் போற்றப்படுவதற்கு உரியவர் என்று கருதுகின்றனர்.

இத்தகைய பெருஞ்சிறப்பு வாய்ந்த கம்பரது வரலாறு முழுதும் நமக்கு நன்கு தெரியவில்லை. இவருடைய பெயர்க்காரணம், மரபு, காலம் முதலியவற்றில் கருத்துவேற்றுமைகள் பல உள்ளன.

கம்பர் சோழமண்டலத்தில் உள்ள திருவழுந்தூரில் பிறந்து வாழ்ந்தவர். இவருடைய தந்தையார் பெயர் ஆதித்தர். பெருஞ் செல்வரும் வள்ளலுமாக அக்காலத்தில் வெண்ணெய் நல்லூரில் வீற்றிருந்த சடையப்பரிடம் உணவு உடை உறையுள் முதலியன பெற்றுக் கல்விப் புலமை முற்றி இவர் சிறப்பெய்தினர். இவை இவரைப் பற்றிய உண்மைச் செய்திகளாகும்.

கம்பர் உவச்சர் குலத்திற் பிறந்தவர் என்று சிலரும், அரசர் குலத்திற் தோன்றினவர் என்று சிலரும் கூறுவர். இவர் வேளாள மரபினராயிருக்கலாம் என்று திருமணம் செல்வக்கேசவராய முதலியாரவர்கள் சில சான்றுகள் காட்டிக் கூறியுள்ளார்.

கம்பர் என்னும் பெயர், காஞ்சிபுரம் சிவபெருமானுடைய பெயராகிய ஏகம்பர் என்பதனுடைய முதற்குறை என்பாரும், கம்பங் கொல்லையைக் காத்தமையாற் பெற்ற பெயரென்பாரும், கம்பநாடுடைமைப் பற்றி வந்த பெயரென்பாரும், இவர் பிறந்த மரபினராகிய காளிகோயிற் பூசனை புரியும் உவச்சர்கட்கு வழங்குவதொரு குடிப் பெயரென்பாருமாய்ப் பெயர்க் காரணம் கூறுவோர் பல திறத்தினர் ஆவர். இவ்வாறு காரணம் பற்றி வந்ததன்றி, அக்காலத்தில் கம்பர் என்ற பெயர் சிலர்க்கு வழங்கிவந்தமை கல்வெட்டுக்களால் அறியப்படுவதால், கம்பர் என்பது இயற்பெயர் என்று கொள்வதும் பொருத்தம் ஆகும்.

'கல்வியிற் பெரியன் கம்பன்,' 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்,' 'விருத்தம் என்னும் ஒண்பாவில் உயர் கம்பன்,' 'கவிச் சக்கரவர்த்தி கம்பன்' என்ற புகழுரைகள் கம்பருடைய கல்விப் புலமையின் சிறப்பையும், கவிபாடும் திறத்தையும் தெளிய விளக்குவனவாகும்.

தொல்காப்பியம், சங்கச் செய்யுட்கள், ஆழ்வார் பாசுரங்கள், சிந்தாமணி முதலியவற்றிற் கம்பர் மிக்க பயிற்சியுடையவர் என்பதை இந் நூல் காட்டும்.

ஏரெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி முதலி யண கம்பர் இயற்றிய பிற நூல்களாகும்.

சிலர், கம்பரை ஒன்பதாம் நூற்ருண்டில் இருந்தவர் என்பர்; வேறு சிலர் இவரைப் பன்னிரண்டாம் நூற்ருண்டில் இருந்தவர் என்று கூறுவர்.

கம்பர் நன்றி மறவாத நற்பண்பினர். தம்மை ஆதரித்த சடை யப்ப முதலியாரைக் கம்பராமாயணத்தில் இவர் பத்து இடங்களில் பாராட்டியுள்ளமை இவரது நன்றி மறவாத பண்பிற்குத் தக்க சான்ருகும்.

தாம் இயற்றிய காவியத்திற்குக் கம்பர் இட்ட பெயர் இராமாவதாரம் என்பதே யாகும்.

கம்பராமாயணத்தில் உள்ள ஏழு காண்டங்களுள் முதல் ஆறு காண்டங்களே கம்பரால் இயற்றப் பெற்றவை. ஏழாங் காண்டமாகிய உத்தர காண்டத்தை இயற்றியவர் ஒட்டக்கூத்தர் என்று சிலரும், வாணிதாதர் என்று சிலரும் கூறுவர். கம்பர் பாடியவை பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பன வாகும். அவற்றுள் பாடப் பகுதியான நகர் நீங்கு படலம் அயோத்தியா காண்டத்தின் நான்காவது படலமாகும்.

காடுசெல்ல வேண்டுமென்று அரசன் ஆணையிட்டதாகச் சிற்றன்னை கைகேயி கூறக் கேட்ட இராமன் அயோத்தி நகரத்தை நீங்கிச் செல்லும் செய்தி நகர்நீங்குபடலத்துட் கூறப்படுவது. இராமன் வனம்புக வேண்டுமென்றும் பரதன் அரசாள வேண்டு மென்றும் ஆணையிட்ட தந்தையிடம் இலக்குவன் சீற்றமுற்ருன் எனப் பாடப் பகுதி தொடங்குகிறது.

2. ஊதை - கடுங் காற்று.

3. குருளை - குட்டி.

9. நாப்பண் - நடுவில்.

10. நாண் உறும் ஏறு - வில்லின் நாணினுல் ஆகிய இடியேற் றின் ஒலி.

11. வில்லிட - ஒளி வீச. காருக்க - கால் தாக்க, காற்று தாக்குதலால்.

12. இறையேனும் - சிறிதேனும்.

13. துய் - பஞ்சு.

14. கார்முகம் - வில். கோடி - கொள்ளுதி, கொள்வாய்.

17. பரிவு - அன்பு.

18. மருமான் - மருகன், வழித்தோன்றல்.

21. கோள் இழைத்தாள் - இடையூறு செய்தவள். காண்டி - காணுதி, காண்பாய்.

24. சரதம் - உண்மையாக.

25. கதம் - சினம்.

27. "தன்சொற்கள் தந்து" என்றும், "தன் சொல் கடந்து" என்றும், "என் சொற்கள் தந்தால்" "என் சொல் கடந்தால்" என்றும் பிரித்துக் கொள்க. "தென் சொல் கடந்தான்" என்றும், "தென் சொற்கள் தந் தான்" என்றும் பிரித்தல் கூடும்.

28. வாங்கல் செல்லா - பின் வாங்குதல் இல்லாத.

31. இறை கண்டு - சிறிதே கண்டு.

32. உலையற்க - வருந்தற்க.

33. மாயாப் பழியாள் தர - நீங்காத பழியையுடைய கைகேயி கொடுப்ப. வற்கலை - மரவுரி.

34. சீரம் - மரவுரி.

35, நித்திலம் - முத்து,

37. மாகாதலி ராமன் - மிக்க அன்பினையுடைய இராமன். நம மன்னவன் - நம் அரசன் (தயரதன்).

42. தூண்தகு - தூணை ஒத்த. பிழைத்ததியாது : குற்றிய லுகரம் இகரமாய்த் திரிந்தது.

43. நாணுள தனு - நாணினையுடைய வில்.

46. அடையலர் - பகைவர். மாதர் கண் மை துடைத்து - பெண்டிருடைய கண்ணிலுள்ள மையைப் போக்கி அழ வைத்து, உறை புகும் வேலினாய் என இயைக்க.

47. வரைத்தடந் தோளினன் - மலைபோன்று அகன்ற தோள் களையுடைய இலக்குவனது.

48. கவ்வை - துயரம். முனி - வசிட்டன்.

51. வெவ்வினையவள் - கைகேயி. ஏவர் : எவர் என்பதன் நீட்டல்.

54. அரம் அரம்போற் கரிய முட்கள். பயில் - நிரம்பியுள்ள. தெவ்வர் அம்பனைய சொல்தீட்டினள் தனக்கு எனப் பிரிக்க.

57. முளரிப் போது - தாமரை மலர்.

59. மதுகரம் - வண்டுகளை. கடியும் ஆறென - ஓட்டும் வகை போல. எற்றினர் - அறைந்துகொண்டார்.

60. தணப்பு இல் - குறைதல் இல்லாத. சிலவர் - சிலர்.

61. அளக வல்லி - கூந்தற் பகுதி.

63. உதிர வாரி - இரத்த வெள்ளம். உக்கன - வெளிப்பட்டன.

64. பெருகு ஐயில் பெயர்த்தனர் எனப் பிரிக்க. ஐயில் - அயில்: கைவாள். சுரிகை - உடைவாள். சூன்று - குடைந்து.

68. கேழன - ஒளியையுடையவாகிய. யாழ்க்கு - யாழிசைக்கு.

69. தம் மகன் வயின் ; தம்தம் மகன் எனக் கொண்டு ஊரார் வருந்துதலால், தம் மகனிடத்து என்றார். அரத்த ஆம்பல் - செவ்வல்லி. பழனம் - வயல்.

71. தண்டலை - சோலை.

72. சேயரும் அணியரும் - தொலையிலுள்ளவரும் பக்கத்தி லுள்ளவரும். மறைய - இடமில்லையென ஆகும்படி.

75. நஞ்சினும் வலிய - நஞ்சினைப் பார்க்கிலும் கொடிய.

76. மண்கொடுவரும் - அரசினைப் பெற்றுக்கொண்டு வரு வான். கொடுவினை - கொடுமை. கண்கொண்டு என் பது கண்கொடு என இடைக் குறைந்து நின்றது.

77. உழுவை - புலி.

78. வலங் கடிந்து - வலிமை நீக்கி. நிலங் கடிந்தாள் - கைகேயி.

80. கலின் : கல்லின் என்பதன் இடைக்குறை. முரிநெஞ்சு - கடுமனம். மழு - கோடரி. பிளத்தும் - பிளப்போம். கலுழி - கலங்கல் நீர். இழுக்கல் - சேறு.

---

# 9. இரட்சணிய யாத்திரிகம்

திருநெல்வேலியிலுள்ள பாளையங்கோட்டைக்கு அருகே உள்ள இரட்டியாப்பட்டியில் திரு. கிருஷ்ணப் பிள்ளை 23—4—1827-இல் பிறந்தவர். இவர் ஹென்றி ஆல்பிரட் என்ற இன்னொரு பெயர் தாங்கியமையின் H. A. கிருஷ்ண பிள்ளை எனப்பட்டார். இவர் திருநெல்வேலி சி. எம். எஸ். கல்லூரியில் தலைமைத் தமிழ் விரிவுரையாளராகச் சிறந்த பணியாற்றியவர்; சென்னையில் சீரிய கிறித்தவ வாழ்க்கை நடாத்திச் சிறப்புற்றவர். இவர் மறைந்த தேதி 3—2—1900. 'இரட்சணிய யாத்திரிகம்' என்பது ஜான் பனியன் (Bunyan) என்பவர் ஆங்கிலத்தில் இயற்றிய "பரதேசியின் மோட்சப் பயணம்" (Pilgrim's Progress) என்னும் காப்பியத்தை அடியொற்றி மொழி பெயர்க்கப்பட்ட செய்யுள் நூல். இந்நூல், ஆன்ம ஈடேற்றத்தை விரும்பியோருடைய உள்ளத்தில் அப்பேறு வாய்க்குமாறு விழுமிய நெறியிற் செல்லும் சிந்தனை யாத்திரையின் நிகழ்ச்சிகளை விளக்கிக் காட்டுவதொன்று.

இந்நூலில் "ஆதிபருவம்" என்றும், "குமார பருவம்" என்றும் இரண்டு பெரும்பிரிவுகள் உள. இரண்டாவது பெரும்பிரிவில் "இரட்சணிய சரிதப் படலம்" என்பது இரண்டாம் உட்பிரிவாக உள்ளது. இயேசுநாதர் திருடர்கள் இருவரிடையே சிலுவையில் அறையப்பட்டபோது, அவருள் ஒருவன் இகழ்ந்துரைத்தமையும், மற்றொருவன் போற்றி யுரைத்தமையும் பாடப் பகுதியில் வருகின்றன. தான் படும் துயரத்தினிடையேயும் பிறர்நலம் பற்றி எண்ணும் பெருந்தன்மை இயேசுநாதரிடத்து உண்டு என்பது பாடப்பகுதியால் விளங்கும்.

1. பன்னரிய - சொல்லுதற்கு அரிய. பாடு - துன்பம். அருள் வள்ளல் - இயேசுநாதர்.
2. துஞ்சினவர் - உறங்குபவர்.
3. இருப்பு முளை - இரும்பு ஆணிகள். வதைப்புண்டும் - வதைக்கப்பட்டும்.
4. ஆகடியமான - ஏளனமான.
5. வணங்காத முரண்கழுத்தர் - பணிதல் செய்ய முடியாத கழுத்தை உடைய யூதர் முதலியவர்கள். வல்லுருக்

கின் - வலிய இரும்பைப் பார்க்கிலும் உறீஇ - உற்று.
ஒன்ரோ - ஒன்றேயன்று, பல.
ஒரு சோரன் - (வலது பக்கமுள்ள) மற்ரெருரு திருடன்.

8. உவ்வழித் தலைநின்ருன் - மோட்ச வழியிற் புகுதற்குத் தலைப்பட்டவன் ஆகிய இரண்டாவது திருடன்.

9. வேண்டினன் விரும்பி - (இரண்டாவது திருடன்) விரும்பி வேண்டினன். மானத அஞ்சலி - மனத்தினல் வணக்கம்.

10. மலங்காய் அஞ்சற்க. பரதீசில் - மோட்சத்தில்.

11. தனித் தாயை - தன் ஒப்பற்ற மேரியன்னையை. ஒரு சீடனை - யோவான் என்னும் மெய்யன்பனை. என்ன - என்று.

12. ஆயின் - ஆராயுங்கால். அருள்நாயகன் - இயேசுநாதர். ஓர்தி - அறிந்துகொள்க.

# 10. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை

செங்கற்பட்டு மாவட்டத்துத் திருவொற்றியூரின் கண்ணுள்ள முருகர் வழிபாட்டிற்காக மறைமலையடிகளார் எழுதிய செய்யுள் நூல் திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை என வழங்குகிறது, ஆசிரியம், வெண்பா, கலித்துறை ஆகிய மூன்றுவகைச் செய்யுட்களினுல் அமைந்த நூல் இது. மறைமலையடிகளார் கொடிய நோய் ஒன்றினுல் தமது இருபத்திரண்டாவது வயதில் வருந்தியபோது இப்பாக்களைப் பாடத் தொடங்கினுர். இவருடைய இருபத்துநான்காவது வயதில், அதாவது 1900 செப்டம்பரில் இந் நூல் முடிவுற்றது. இதற்குச் சிறந்ததோர் உரை அடிகளாருடைய மாணவர் திரு. இளவழகனுர் எழுதியுள்ளார்.

மறைமலையடிகள் நாகபட்டினத்தை யடுத்த காடம்பாடி என்னும் ஊரில் 15—7 –1876-இல் பிறந்தவர். இவரது இயற்பெயர் வேதாசலம். அதனைத் தமிழ்ப்படுத்தி மறைமலை எனப் பின்னர் ஆக்கிக்கொண்டார். இவர் சோமசுந்தர நாயகரிடம் சைவ சித்தாந்த நூல்கள் கற்றவர். எனினும் தமது சொந்த முயற்சியால் பல்வேறு நூல்களைக் கற்றுத் துறைபோகிய பெருமகனுர் இவர். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மொழிகளில் வல்லவர். திருவனந்தபுரம் உயர்நிலைப் பள்ளியிற் சில திங்களும், சென்னைக் கிறித்தவக் கல்லூரியிற் சில ஆண்டுகளும் இவர் ஆசிரியராகப் பணியாற்றினுர். 'பட்டினப்பாலை ஆராய்ச்சி' 'முல்லைப்பாட்டு ஆராய்ச்சி' என்னும் இவருடைய நூல்களும், 'மாணிக்க வாசகர் வரலாறும் காலமும்' என்னும் நூலும் இவரது ஆராய்ச்சித் திறமைக்குச் சான்ருக நிற்பன. தமிழர் மதம், தமிழ்த் தாய், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவர்கள் என்ற நூல்களும் இவரால் இயற்றப்பட்டுள. காளிதாசர் வடமொழியில் இயற்றிய சாகுந்தலம் என்னும் நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். "ஞானசாகரம்" என்ற தமது சொந்த வெளியீட்டிதழ் வழியாகப் பல்வேறு ஆங்கிலக் கட்டுரைகளும் எழுதித் தமிழின் சிறப்பை உலகறிய வைத்த பெருமை மறைமலையடிகளார்க்கு உண்டு. இவரது தமிழுரைநடை தன்னேரில்லாத் தனி நடை. இவர் 15-4-1950-இல் மறைந்தார்,

இவர் இயற்றிய திருவொற்றி முருகர் மும்மணிக்கோவையில், "கழற்றெதிர்மறை" என்னும் தலைப்பில் அமைந்துள்ள பகுதி பாடமாக வந்துளது. முதல் இருபத்தாறு அடிகளில் திருவொற்றியூர் மலைச் சோலையினது சிறப்பும் அடுத்துவரும் அடிகளில் வாவியினது சிறப்பும் கூறப்பட்டுள. இச் செய்யுள் நூலின் நடையும் கருத்தழகும் சங்கச் சான்றோருடையவற்றோடு ஒத்துள.

2. தூக்கி - தொங்கவிட்டு.

4. நரத்தம் - நாரத்தமரம்.

5. கதுவிய - ஒத்த.

8. நாவல் - நாவல்மரம்.

9. வகுளம் - மகிழ மரம்.

13. குலிகம் - செந்நிறம்.

14. நவ்வி - மான்.

19. கறி - மிளகு.

22. மெல்லிலை - வெற்றிலை; மெல்லப்படுதலின் மெல்லிலை (வினைத்தொகை) எனலாம்.

30. சிறுகால் - சிறுவாய்க்கால். உறுநீர் - மிக்க நீர்.

31. வாலுகம் - வெண்மணல். கோலிய - வளைத்தமைத்த.

35. நத்து - சங்கு.

39. வெரிந் - முதுகு. உகள - புரள.

45. கழியவும் - மிகுதியாக.

# 12. திருமால் அருள்வேட்டல்

திருமால் அருள்வேட்டல் என்னும் கவிதையை இயற்றியவர் சமரச மெய்ஞ்ஞானி திரு. வி. கலியாணசுந்தரனர். இவர் 26-8-1883-இல் திருவாரூரிற் பிறந்தவர். மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார், மறைமலையடிகள் முதலானேரிடம் தமிழிலக்கிய இலக்கண நூல்கள் கற்றுத் தேர்ந்தபின் இவர் சென்னை வெஸ்லி கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியராகச் சில ஆண்டுகள் பணிபுரிந்தார். 1917 இல் "தேசபக்தன்" என்னும் சிறந்த நாளிதழ் ஆசிரியராகத் திகழ்ந்தார். 1920-முதல் பல ஆண்டுகள் நவசக்தி என்னும் வார இதழ் வழியாக நாட்டில் நல்ல தமிழையும் அரசியலையும் வளர்த்தார். இவரது மனைவியார் பெயர் கமலாம்பிகை. 'தமிழ்த் தென்றல்', 'இந்தியாவும் விடுதலையும்' 'பெண்ணின் பெருமை', 'முருகன் அல்லது அழகு' முதலிய இவருடைய உரைநடை நூல்கள் உரைநடை யெழுதுவார்க்குச் சிறந்த வழிகாட்டிகள். பெரிய புராணத்திற்கும் திருக்குறளுக்கும் இவர் எழுதிய உரைகள் படித்து மகிழத் தக்கவை. தமிழ் நாட்டில் தொழிலாளர்களுக்காகவும் ஏழைகளுக்காகவும் இவர் பெரிதும் உழைத்துவந்தார். தெள்ளிய இனிய எளிய தமிழ் நடையில் எழுதுதலிலும் பேசுதலிலும் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்னும்படி வாழ்ந்துவந்த இப்பெருமகனர் 17-9-1953-இல் மறைந்தார். இவரால் இயற்றப்பட்ட செய்யுள் நூல்கள் பொதுமை வேட்டல், படுக்கை பிதற்றல் முதலியன.

திருமால் அருள்வேட்டல் என்னும் தலைப்பில் உள்ள செய்யுளிற் பாடமாக வந்திருப்பவை திருவல்லிக்கேணியில் அமர்ந்துள்ள பார்த்தசாரதியைப் பற்றியன.

1. கள் தேன்.
2. இந்தச் செய்யுளிலும், 5-ஆம் செய்யுளிலும் கவிஞரின் தமிழ்ப்பற்றுப் புலப்படுதல் காண்க.
3. புங்கவர் - வானவர்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112028
MADRAS